# செயலாற்றுகை அறிக்கை

# 2018

# நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு


**நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு**

**மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி**

**கொழும்பு 12**

**இணையத்தளம்: [www.moj.gov.lk](http://www.moj.gov.lk)**

**கௌரவ நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்**
**சட்டத்தரணி தலதா அத்துகோரள**

**நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர்**

**ஆர்.எம்.டீ.பி. மீகஸ்முல்ல**

# பிரதான கணக்கீட்டு அலுவலரின் அவதானிப்புக்கள்

நீதி நிருவாகத்தை வினைத்திறனுடன் செய்வதும் சட்டங்களை மறுசீரமைப்பு செய்வதும் சிறைச்சாலைகள் நிருவாகத்திற்காகவும் 2018 ஆண்டினுள் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் பாரியதொரு பணி நிறைவேற்ற முடிந்தது. 2018 ஆண்டின் நவம்பர் 09 ஆந் திகதி அமைச்சின் விடயப்பொருள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சு என மாறியதுடன் மீண்டும் இவ்வாண்டின் திசெம்பர் 28 ஆம் திகதி தொடக்கம் இவ்வமைச்சு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு எனப் பெயரிடப்பட்டது. எவ்வாறாயினும் இவ்வமைச்சு மற்றும் அதைச் சேர்ந்த 19 நிறுவனங்களினூடாக 2018 ஆண்டினுள் விசேடித்த செயற்பாடொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரசைகளுக்கு நீதி நிருவாகத்திற்காகத் தேவையான புதிய சட்டங்களை அறிமுகம் செய்தல் மற்றும் உளதாம் சட்டத் திருத்தம் இவ்வமைச்சின் பிரதான பொறுப்பாகும். ஆண்டின் இதுவரை இவ்வமைச்சின் விடயப் பொருளுக்குரிய 05 சட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடிந்துள்ளது. மேலும் 18 சட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வழக்குகளை நாளாந்தம் விசாரணை செய்வதற்காக மூன்று நிரந்தர நீதாய மேல் நீதிமன்றங்களைத் தாபிப்பதற்காக நீதித்துறைச் சட்டமூலத்தை திருத்தஞ் செய்தலும் அவற்றுள் உள்ளது. அதன் கீழ் ஒரு நீதாய மேல் நீதிமன்றமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்து, தாபிக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய இரு மேல் நீதிமன்றங்களைத் தாபிப்பதற்குத் தேவையான வசதிகள் துரிதமாக பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. இவ்வாண்டினுள் சட்டவரைஞர் திணைக்களத்தால் மும்மொழிகளாலும் தயார் செய்து சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட சட்டமூலங்களின் எண்ணிக்கை 229 ஆகும். இனங்காணப்பட்ட 10 சட்டத் துறைகளின் மறுசீரமைப்புக்காக விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தால் செய்யப்பட்டுள்ளது.

நீதித்துறை எதிர்நோக்கியுள்ள பிரதான சவாலாவது நீதிமன்றங்களில் குவிந்துள்ள பெருமளவிலான வழக்குகளை முடித்துக் கொள்வதனால் நீதி நீருவாகத்தின் தாமதங்களை தவிர்த்துக் கொள்வதே ஆகும். வழக்குத் தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக பிரதான தீர்வொன்றாக நீதிமன்ற முறைமைக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதே ஆகும். அதன்படி நீதிமன்ற முறைமையை தன்னியக்கப்படுத்துவதற்கான (Court Automation) அடிப்படை நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நீதிமன்றங்களில் நடைபெறுகின்ற வழக்குகளுக்காக பகுப்பாய்வாளர் அறிக்கைகள் கிடைக்கப் பெறாமையினால் ஏற்படுகின்ற தாமதத்தை தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி ஆண்டின் இதுவரை கிடைக்கப்பெற்ற 42,166 வழக்குகளில் 36,642 வழக்குகளின் பகுப்பாய்வாளர் அறிக்கைகளை நீதிமன்றங்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது. இச்செயற்பாட்டை மேலும் துரிதப்படுத்துவதற்காக அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு தன்னியக்க சுடுபடைப் பகுப்பாய்வு இயந்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பலப்படுத்துவதனூடாக அங்கே குவிந்துள்ள கோவைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்யப்பட்டது. அதன்படி உதவி அரசாங்க வழக்குரைஞர்கள் 30 பேர்கள் மற்றும் அரசாங்க வழக்குரைஞர்கள் 50 பேர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். ஆண்டினுள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் 14,869 வழக்கு கோவைகளின் நடவடிக்கைகள் முடித்துக் கொள்ளப்பட்டன.

அத்துடன் நீதிமன்றங்களில் குவிகின்ற வழக்குத் தாமதங்களை குறைத்துக் கொள்வதற்கான மாற்று வழிமுறைகளை மேம்படுத்தல் இவ்வமைச்சின் எதிர்பார்ப்பாகும். தீவு முழுவதிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 329 மத்தியஸ்த சபைகளின் மூலம் அவற்றுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற பிணக்குகளை தீர்த்து வைக்கும் நூற்று வீதம் 67% ஆகிய உயர் மட்டத்தில் வைத்துக்கொள்வதற்கு முடிந்துள்ளது. அசைவற்ற ஆதனங்கள் சம்பந்தப்பட்ட கடன்கொடுக்கல் வாங்கல்களால் பீடிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணங்களை ஏற்படுத்துவதற்காக கடன் இணக்க சபைத்திணைக்களம் தொழில்படுகிறது. தற்போது கொழும்புக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்ட இந்நிறுவனத்தை பொதுமக்கள் இலகுவாக அணுகுவதற்காக பன்முகப்படுத்துவதற்கு அச்சட்டம் திருத்தஞ் செய்யப்படுகிறது.

சட்டம் பற்றிய புரிந்துணர்வு இல்லாமை பொதுமக்கள் குற்றங்களைப் புரிவதற்கான காரணமாகியுள்ளது. இதற்கான தீர்வொன்றாக மாண்புமிகு அமைச்சரின் எண்ணக் கருவொன்றின்படி பாடசாலையில் சட்டம் ஒரு பாடமாக கற்பிப்பதற்காகத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பாடசாலையில் ஆறாம் ஆண்டிலிருந்து பிள்ளைகளுக்கு அடிப்படைச் சட்டத்திலிருந்து சட்டப்புரிந்துணர்வை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சட்டம் ஒரு பாடமாக பாடசாலைகளில் கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீதி நிருவாகச் செயற்பாட்டை பயனுள்ளதாக அமுல்படுத்துவதற்காக நீதிமன்றங்களுக்காக போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இருப்பது மிக முக்கியமாகிறது. புதுக்கடையில் உள்ள மிகப் பழமையான பழுதடைந்த நீதிமன்றத் தொகுதியை ஸ்தாபிப்பதற்காக 'நீதி மனை'' நிர்மாணிக்கும் பெறுகை அலுவல்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாண்டினுள் வத்தளை நீதிமன்றத் தொகுதி அதிமேதகு சனாதிபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டதுடன், மேலும் சில நீதிமன்றத் தொகுதிகளின் நிர்மாண வேலைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இரத்தினபுரி, வெலிமடை, தெல்தெனிய மற்றும் கிளிநொச்சி நீதிமன்றத் தொகுதிகளை நிர்மாணிப்பதும் 2018 ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளுக்கு சுயாதீனமாக நீதி நிருவாகப் பணியை செய்து கொண்டு செல்வதற்காக பாதுகாப்பான தங்குமிட வசதிகளை வழங்குதல் அவசியமாகிறது. இவ்வாண்டினுள் பிபிலை, சியம்பலாண்டுவ, பொலனறுவை நீதிபதி அலுவலக வாசஸ்தலங்களின் நிர்மாண வேலைகள் முடித்துக் கொள்ளப்பட்டதுடன் மேலும் 08 அலுவலக வாசஸ்தலங்களின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. நீதிபதிகளின் தொழிற்திறனை மேம்படுத்துவதற்காக இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தால் உள்நாட்டு வெளிநாட்டு கருத்தரங்குகள், பட்டறைகள், 24 கற்கைநெறிகள் ஆண்டினுள் நடாத்தப்பட்டுள்ளன.

வறுமையின் காரணமாக சட்டத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியாத மக்களுக்கு நீதியை அணுகுவதற்கு தீவு முழுவதிலும் 86 சட்ட உதவி நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அந்நிலையங்களை நாடி வருகை தந்த 163,181 பேர்களுக்கு இலங்கை சட்ட ஆணைக்குழுவின் சேவை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. 2018 ஆண்டினுள் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபையிடம் பொதுமக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 86 முறைப்பாடுகள் தொடர்பாக அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டினுள் இடம்பெற்ற அமைச்சு விடயப் பொருளின் திருத்தத்துடன் சிறைச்சாலை சமுதாய சீர்த்திருத்தம் சம்பந்தப்பட்ட அலுவல்கள் இவ்வமைச்சுக்கு உரித்தாக்கப்பட்டன. அதன்படி சிறைச்சாலைகளில் இடம்பெறுகின்ற சட்ட விரோதச் செயல்களைத் தடுப்பதற்காக நவீன தொழில்

நுட்பத்தை அறிமுகம் செய்யும் முன்மொழிவொன்று மற்றும் விவசாய, கைத்தொழில் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்திக் கிராமமொன்றை உருவாக்கும் முன்மொழிவொன்று 2019 வரவு செலவுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது சிறைச்சாலைகளில் சுமார் 24,000 அளவிலான சிறைக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இடநெரிசலைக் குறைத்துக் கொள்வதற்காக பல்வேறு அடிப்படைகளின் கீழ் தண்டனைகள் தளர்த்தப்படுகின்றன. இவ்வாண்டினுள் சிறு தவறாளர்களுக்காக 12,783 சமுதாய சீர்திருத்தக் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு சமுதாய சீர்திருத்தத் திணைக்களத்திற்கு முடிந்துள்ளது.

நீதி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் 2018 ஆண்டுக்காக தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டு தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மீண்டுவரும் செலவினம் 96% ஆகிய சராசரி விஞ்சப்பட்டுள்ளதுடன் மூலதனச் செலவினத்தில் 74% ஆகிய சராசரி முன்னேற்றத்தைச் காட்டுகிறது. நீதிமன்ற நிருவாகப் பிரிவின் மூலம் 2018 ஆண்டில் வருமான மதிப்பீடுகளை விஞ்சி வருமானங்களைத் திரட்டி உள்ளதென்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நிறுவனங்கள் தமது நோக்கங்களை எய்து கொள்வதற்காக செயலாற்றும் போது பல்வேறு பிரிவுகளை சிறப்பாகக் கூட்டிணைத்துக் கொண்டு எழுகின்ற சிக்கல்களைத் தீர்த்துக்கொண்டு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுதல் பற்றிய அமைச்சின் மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துவதனூடாக மூலதன செலவின மதிப்பீட்டு குறியிலக்குகளை அடைவதற்காக மேலான கவனத்தைச் செலுத்தல் அத்துடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் மூலம் தாபன நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதில் மேலான நிதி ஒழுக்காற்றை பேணிச்செல்வதற்காக தாபனத் தலைவர்களை நெறிப்படுத்துவதற்கு செயலாற்றுதலுக்காக சகல தபானத் தலைவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஒத்துழைப்பை மிகவும் வரவேற்கிறேன்.

நீதித்துறையில் பாரியதொரு முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அதைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு வழிகாட்டும் மாண்புமிகு அமைச்சர் சட்டத்தரணி தலதா அதுகோரல அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இப் பணிகளை நிறைவேற்றுவதற்காக எனக்கு ஒத்துழைப்பை வழங்குகின்ற நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் மற்றும் அமைச்சைச் சேர்ந்த திணைக்களங்கள், நிறுவனத் தலைவர்கள் உட்பட பணியாட்டொகுதிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்.எம்.டீ.பீ. மீகஸ்முல்ல

செயலாளர்

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு.

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணிகள் | 11 |
| 2. நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் பணிகள் | 12 |
| 3. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் | 13 |
| 4. அமைச்சினது பிரிவுகளின் பணிகள் | 15 |
| 5. நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாற்றுகை | |
| 5.1 சட்டப்பிரிவு | 16 |
| 5.2 தாபனப் பிரிவு | 28 |
| 5.3 அபிவிருத்தி பிரிவு | 35 |
| 5.4. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரிவு | 51 |
| 5.5. நிதிப் பிரிவு | 53 |
| 5.6 உள்ளக கணக்காய்வுப் பிரிவு திட்டமிடற் பிரிவு | 57 |
| 6. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் முன்னேற்றம் | |
| 6.1 சட்டமா அதிபர் திணைக்களம் | 58 |
| 6.2 சட்டவரைஞர் திணைக்களம் | 61 |
| 6.3 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 64 |
| 6.4 அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 67 |
| 6.5 பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | 69 |
| 6.6 கடன் இணக்க சபை திணைக்களம் | 72 |
| 6.7 சிறைச்சாலைகள் திணைக்களம் | 74 |
| 6.8 சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் | 77 |
| 6.9 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | 81 |
| 6.10 தொழில் நியாயசபைகள் செயலாளர் அலுவலகம் | 83 |
| 6.11 நீதித்துறை அல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம் | 84 |
| 6.12 இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் (வரை) | 86 |
| 7. அமைச்சின் கீழுள்ள பொதுத்தொழில் நிறுவனங்களின் முன்னேற்றம் | |
| 7.1 சட்ட உதவி ஆணைக்குழு | 87 |
| 7.2 மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை | 91 |
| 7.3 இலங்கை நீதிபதிகள் நிறுவனம் | 92 |
| 7.4 குற்றச்செயல்களுக்கும் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு அதிகார சபை | 96 |
| 7.5 இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம் | 99 |
| 8 நீதிமன்றங்கள் | |
| 8.1 உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 100 |
| 8.2 மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 102 |
| 8.3 காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும் | 103 |
| 9 தொடர்புடைய நிறுவனங்கள் | |
| 9.1 இலங்கை சட்டக்கல்லூரி | 105 |

# நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

## நோக்கு

- நீதி நிருவாகத்தின் வினைத்திறமையான நடைமுறை;
- புவியியல் ரீதியான முன்னேற்றங்களுக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றவாறு சமுதாய தேவைகளுக்கேற்ப சட்டத்தை மறுசீரமைத்தல்.

## செயற்பணிகள்


- வினைத்திறமையும் அர்த்தமுள்ளதுமான நீதி நிருவாகத்திற்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்;
- பிரசைகளின் உரிமைகளை அங்கீகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக சட்டத்தை மறுசீரமைத்தல்.

## 02. நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் பணிகள்


- நீதி நிருவாகத்திற்கான பொறிமுறை தொடர்பிலான கொள்கைகளையும் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தல்.
- குறித்த தேசிய நோக்கங்களை எய்தும்பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவுசெலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.
- அரசியலமைப்பின் மூலம் வேறு ஒரு நிறுவனத்திற்கும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பிலான அலுவல்கள்.
- சமூகத்தின் தேவையையும் சர்வதேசத்தின் போக்கினையும் கருத்திற் கெண்டு சட்ட முறைமையில் மறுசீரமைப்பை செயற்படுத்தல்.
- நீதிமன்ற முறைமைக்குள் நீதி நிருவாகத்தில் தாமதங்களைத் தடுத்தல் உட்பட ஒட்டுமொத்த நிருவாகம் தொடர்பாக எல்லா விடயங்களையும் முறையாகவும் செயற்திறனுடனும் செயற்படுத்தல்.
- அரசாங்கத்தின் சார்பாக குற்றவியல் வழக்குகளைத் தொடுத்தலும் குடியியல் சட்ட நடவடிக்கைகளும்.
- அரசாங்கத்திற்கும் எல்லா அரச திணைக்களங்களுக்கும் சட்ட ஆலோசனை வழங்கல்
- சட்ட வரைவு
- யாதேனுமொரு தவறாளி மீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையை மாற்றீடு செய்தல், தணித்தல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் ஆலோசனை வழங்கல்.
- ஒட்டுமொத்த காதி நீதிமன்ற முறைமையின் பயனுறுதியையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
- தொழில் நியாயசபைகளை நிருவகித்தலும் அது தொடர்பான ஏனைய அலுவல்களும்..
- சட்டங்களை ஆவணப்படுத்தலும் ஒருங்கிணைத்தலும் கோவைப்படுத்தலும்.
- சட்டச் சொற்றொகுதிகளை தயாரித்தல்.
- சட்ட அறிக்கைகளை வெளியிடல்.
- அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள்/ நிறுவனங்களைக் கண்காணித்தலும் இத் திணைக்களங்கள்/ நிறுவனங்களின் கீழ் வரும் ஏனைய எல்லா விடயங்களும்.
- குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விடயங்கள்
- இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டம் (2000 இல. 44) தொடர்பான விடயங்கள்
- சிறைச்சாலைகள் மறுசிரமைப்புக்குரிய கொள்கைகளையும், திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்.
- சிறைச்சாலை நிருவாகமும் மறுசீரமைப்பும்.
- சமுதாய சீர்திருத்தக் கருத்திட்டங்கள் தொடர்பான அலுவல்கள்.

## 03. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

### அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்



## அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்



## 04. அமைச்சினது பிரிவுகளின் பணிகள்

அமைச்சின் பணிகள் பின்வரும் பிரிவுகளினூடாக அமுல்படுத்தப்படுகின்றன:

i. சட்டப்பிரிவு
ii. தாபனப்பிரிவு
iii. அபிவிருத்தி பிரிவு
iv. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரிவு
v. நிதிப் பிரிவு
*vi.* உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு

I. **சட்டப்பிரிவு**

நீதி நிர்வாகம் சம்பந்தப்பட்ட சர்வதேச தரக்கட்டளைகளுக்கு இசைந்ததாக தற்போது உள்ள சட்டத் திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்களைத் தயார் செய்வதற்காக கொள்கை ரீதியிலான தீர்மானங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், சட்ட அறிக்கைகளை வெளியிடுதல், மற்றும் மொழிபெயர்ப்பு செய்தல்.

II. **தாபனப்பிரிவு**

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க அலுவலர்களைத் தவிர்ந்த அமைச்சினதும் திணைக்களங்களினதும் அலுவலர்களின் தாபன அலுவல்கள்.

III. **அபிவிருத்தி பிரிவு**

திட்டப்பிரிவின் மூலம் அமைச்சின் மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களின் அலுவல்கள் பற்றிய கருத்திட்டத் திட்டங்களை தயார் செய்தல், முன்னேற்ற நிருவாகம் மற்றும் மேற்பார்வை என்பன செய்யப்படுகிறது. அபிவிருத்திப் பிரிவின் மூலம் நீதி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுதல், மற்றும் கூட்டிணைப்பு செய்யப்படுகிறது. பொறியியல் பிரிவின் மூலம் நீதிமன்றத் தொகுதிகள், கட்டடங்கள், நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணித்தல், மேம்படுத்தல் மற்றும் பேணுதல்கள் செய்யப்படுகின்றன. இம்மூன்று பிரிவுகளினதும் கடமைகள் மேலதியசெயலாளரினால மேற்பார்வை செய்யப்படுகின்றன.

IV. **சிறைச்சாலைகள் மறுசீரமைப்புப் பிரிவு**

சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்களை அமுல்படுத்துதன் மூலம் சிறைச்சாலை நிறுவனங்களினுள் பௌதீக வளங்களை மேம்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திச் செய்தல் மற்றும் சிறைக்கைதிகளின் புனர்வாழ்வு அலுவல்களை காலத்திற்கேற்றவாறு மற்றும் விதிமுறைகளைக் தயார் செய்தல், கண்காணிப்பு மற்றும் பின் தொடர்நடவடிக்கைகள் என்பன இப்பிரிவின் செயற்பாடாகும்.

V **நிதிப் பிரிவு**

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் நிதித்திட்டமிடலும் முகாமைத்துவமும் நிதிக்கட்டுப்பாடும்

VI **உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு**

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினதும் நீதிமன்றங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு.

# 05. நீதி அமைச்சின் செயலாற்றுகை

## 5.1 சட்டப்பிரிவு

**5.1.1. 2018ஆம் ஆண்டின் சனவரி 01 முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் நீதி அமைச்சினால் பாராளுமன்றத்திற்கு சமர்பித்து நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட சட்டங்கள் மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குள்ள உத்தேச சட்ட மூலங்கள்**

**அ) நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட சட்டங்கள்**

**01. நீதித்துறைச் (திருத்தம்) சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் கீழாக செய்யப்படுகின்ற திருத்தமொன்றாக ஒரே தடவையில் நீதி ஆசனத்தில் அமருகின்ற நீதிபதிகள் மூவரைக் கொண்ட இலங்கை குடியரசின் மேல் நீதிமன்றமொன்றை தாபிப்பதற்காக தேவையான ஏற்பாடுகளைக் கொண்டு இத் திருத்தம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

இத் திருத்தத்தின் பிரகாரம் கௌரவ சட்டமா அதிபர் அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் படி பணிப்பாளர் தலைமையதிபதியினால் தவறின் தன்மை, பாரதூரம் மற்றும் பலவிதத் தன்மை, தவறைப் புரிதல் மற்றும் அது சம்பந்தப்பட்ட விடயங்களையும் கவனத்திற்கொண்டு கௌரவ பிரதம நீதியரசரின் தற்றுணிபின் பிரகாரம் இம்மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடிகிறது. இச்சட்ட மூலம் 2018ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நீதித்துறைச் (திருத்தம்) சட்டமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது.

**02. நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் (திருத்தம்) சட்டம்**

பணம் தூய்தாக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு பணம் வழங்கும் ஆபத்தைக் குறைத்துக் கொள்வதற்காக இச்சட்டத்தின் விடயப்பொருளை விரிவுபடுத்தி சர்வதேச தரக்கட்டளைகளுக்கு இசைந்தவாறு திருத்தஞ் செய்யும் அவசியம் ஆசிய பஸிபிக் குழுவினால் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் மூலம் மற்றும் நிதிப் புலனாய்வுப் பிரிவின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த ஏற்பாடுகள் உள்ளடங்கிய 2018 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தம்) சட்டமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது.

**03. குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தம்) சட்டம்**

பணம் தூய்தாக்குதல் மற்றும் பயங்கரவாதச் செயல்களுக்கு பணம் வழங்குதலை தடுத்தல் சம்பந்தமாக ஆகிய பஸிபிக் குழுவின் விளக்கங்கள் மற்றும் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயம் மற்றும் கணனி குற்றங்கள் பற்றிய புடாபேஸ்ட் சமவாயத்திற்கு அமைவாதல் தொடர்பாக கவனத்தைச் செலுத்தி, பரஸ்பர உதவியளித்தல் (திருத்தம்) சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குழுக் கூட்டத்தின் போது இணங்கிக் கொண்ட திருத்தங்களுடன் 2018 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தம்) சட்டமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது. அதன்படி சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழான கட்டளை 2088/28 ஆம் இலக்க 2018.09.11 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

04. <u>கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவை கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் அதன் 2 ஆம் விதியை திருத்தஞ் செய்தல்</u>

குறித்த விதியை திருத்தஞ் செய்வதன் மூலம் இலங்கை சட்டக் கல்லூரிக்காக பிரதி அதிபர் பதவியொன்றை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அதிபரினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடைமைகளில் ஒரு பகுதியை சாட்டுவதற்காக இரண்டாம் நிருவாக அதிகார சபையொன்றை உருவாக்குதல் இத்திருத்தத்தின் நோக்கமாகும். அதன்படி அத்திருத்தம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

05. <u>குற்றவியல் தவறொன்றின் பொறுப்பை ஏற்பதற்கான ஆகக் குறைந்த வயது</u>

**(அ) தண்டனை சட்டக் கோவைச் (திருத்தம்) சட்டம்**

12 வயதுக்குக் குறைந்த பிள்ளை ஒருவரால் புரியப்படுகின்ற ஏதும் தவறல்ல என உத்தேச திருத்தத்தால் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும் 12 வயதுக்கு மேற்பட்ட 14 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளை தொடர்பில், அப்பிள்ளையால் புரியப்பட்ட குற்றம் சம்பந்தமாக போதுமான எண்ணம் அல்லது புரிந்துணர்வைத் தாங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ள முதிர்ச்சியான மதிநுட்பம் அப்பிள்ளைக்கு உள்ளதா எனத் தீர்மானிக்கும் தற்றுணிபை நீதிவானுக்கு அளிப்பதற்காக இச்சட்டத்தால் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இச்சட்ட மூலம் 2018 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தண்டணை சட்டக் கோவைத் (திருத்தம்) சட்டமாக பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

**(ஆ) குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைத் (திருத்தம்) சட்டம்**

தண்டனை சட்டக்கோவைக்குச் செய்யப்படுகின்ற மேற்குறித்த திருத்தத்திற்கு மேலதிகமாக பிள்ளையால் புரியப்படுகின்ற குற்றம் சம்பந்தமாக அவரது நடத்தை மற்றும் அதன் விளைவை புரிந்து கொள்வதற்குப் போதுமான அளவு முதிர்ச்சியான அறிவை பிள்ளை பெற்றுள்ளாரா என்பதைப்பற்றி அவதானிக்கப்பட்டு அரச மருத்துவரின் கருத்தை பொலிசுக்கு அறிக்கையிடுவதற்கும் பிள்ளைக்கு மருத்துவ சிகிச்சை அவசியமாகிறதா என்பதைப் பற்றி தீர்மானிப்பதற்காகவும் அரச மருத்துவர் ஒருவரிடம் பிள்ளையை ஆற்றுப்படுத்துவதற்கு நீதவானுக்கு வாய்ப்பளிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு இத் திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டது. இச்சட்ட மூலம் 2018 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமாக பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

## ஆ. உத்தேச திருத்தச் சட்டமூலம்

01. <u>பிள்ளைகள் பற்றிய (நீதிமன்றப் பாதுகாப்பு) சட்டமூலம்</u>

இலங்கையால் சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாட்டின் சமவாயம் வலுவாக்கப்பட்டதும் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் சிறுவர் நீதிமன்ற முறைமையை பாதுகாத்தல் சம்பந்தமாக நிலவுகின்ற குறைபாடுகளுக்கு துரித மற்றும் நீண்ட காலப் பதிலைக் காணும் அவசியம் ஏற்பட்டது. தற்போது இது தொடர்பில் 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பிள்ளைகள் மற்றும் இளம் ஆட்கள் பற்றிய கட்டளைச் சட்டம் ஏற்புடையதாகிறது. அந்நோக்கங்களை எய்து கொள்வதற்காக அவ்விடயம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இலங்கையின் UNICEF ஒழுங்கமைப்பு, பொலிசு, சட்ட மருத்துவ அலுவலர்கள் மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்கள் ஆகிய சேவை வழங்குநர்களுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் I, II,V மற்றும் VI ஆம் அத்தியாயங்களை நீக்கிவிடுவதற்கும் சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் உள்ளடங்கிய தரக்கட்டளைகளை உள்ளடக்கி சர்வதேசம் ஏற்றுக்கொண்ட சட்டமூலங்களை தயார் செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. இது தொடர்பாக மேலும் கற்கை செய்து அறிக்கையிடுவதற்கு குழுவொன்று பிரதமர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ளது.

02. <u>ஆபாசமான வெளியீடுகள் சட்டமூலம்</u>

ஆபாசமான வெளியீடுகள் சம்பந்தப்பட்ட தற்போதைய சட்டம் பிள்ளைகள் தொடர்பில் செயல்படுவதற்காக 1995ல் திருத்தப்பட்ட 1883 விதிக்கப்பட்ட தண்டனைச் சட்டக்கோவையிலும், 1983ல் திருத்தப்பட்ட 1927 ஆபாசமான வெளியீடுகள் கட்டளைச் சட்டத்திலும் உள்ளடங்குகின்றன. இவ்விரு சட்டவாக்கங்களிலும் உள்ளடங்கிய சட்ட ஏற்பாடுகள் தற்காலத்தில் இடம்பெறுகின்ற குற்றங்களைத் தடுப்பதற்கு போதுமானதல்ல.

இச் சட்டமூலங்களின் சட்டவாக்கத் தன்மையைப் பற்றிய சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபரிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

03. <u>நொத்தாரிசு (திருத்தம்) சட்டமூலம்</u>

போலியாக ஆவணங்களை எழுதி அத்தாட்சிப்படுத்தல் போலியான ஆவணங்களின் மீது காணிகளை விற்பனை செய்தல் போன்ற மோசடியான காணி கொடுக்கல் வாங்கல்கள் பெருமளவில் நடைபெறுவதன் காரணமாக அத்தகைய மோசடியான செயல்களைக் குறைப்பதற்காக மற்றும் அம்மோசடிகாரர்களை சட்டத்தின் முன் உடனே எடுத்துச் செல்வதை துரிதப்படுத்துவதற்காக நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தை திருத்தஞ் செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதன்படி மோசடிகளைத் தடுப்பதற்காக சாதனங்களை கையொப்பமிடும் போது உயிரியல் கையொப்பங்களை பயன்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கி தயார் செய்யப்பட்ட சட்டமூலம் மேலதிக நடவடிக்கைகளுக்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டவாக்க விவகாரங்கள் பற்றிய அமைச்சரவைத் துணைக் குழுவினால் அச்சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புக்களை உள்ளடக்கி சட்டமூலமொன்று சட்டவரைஞரிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அது, சட்டவரைநரிடமும் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் சட்டத்தரணிகள் சங்கத்தின் அவதானிப்புக்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதன்படி மீண்டும் தயார் செய்யப்பட்ட வரைவுக்கு சட்டமா அதிபரின் சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளது. அதன்படி இறுதியான வரைவு மற்றும் அமைச்சரவை குறிப்பறிக்கை உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் கையொப்பத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

04. <u>முஸ்லிம் விவாக மற்றும் மணநீக்கச் (திருத்தம்) சட்டமூலம்</u>

மாண்புமிகு நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சனாதிபதி சட்டத்தரணி சலீம் மார்சுப் அவர்களின் தலைமையிலான குழுவொன்றின் மூலம் முஸ்லிம் விவாக மற்றும் மணநீக்கச் சட்டத்துக்கான உத்தேச திருத்தங்கள் பற்றிய இறுதி அறிக்கை மாண்புமிகு நீதியமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் இஸ்லாமிய மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முஸ்லீம் சமுதாயத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஒழுங்கமைப்புக்களுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இணக்கமொன்றுக்கு வரும் முயற்சியொன்றாக சலீம் மார்சுப் அவர்கள் மற்றும் ஏ.டபிள்யூ.ஏ. சலாம் அவர்களுக்கிடையே சந்திப்பொன்றை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

05. <u>அற்றோனித்தத்துவச் (திருத்தம்) சட்டமூலம்</u>

அச்சட்ட மூலத்திற்கு சட்ட வரைஞரால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அது உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்சட்டமூலம் சம்பந்தமாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் விதப்புரைகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதன்படி இச்சட்டமூலம் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதுடன் இறுதி வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்தினால் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன் சட்டமா அதிபரின் சான்றிதழும் கிடைக்கப்பெற்றுள்ளது. அமைச்சரவையில் ஆற்றுப்படுத்துவதற்காக அமைச்சரவை குறிப்பறிக்கை அமைச்சரின் கையொப்பத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

06. **<u>குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் (சட்டத்தரணியை அணுகுதல்)</u>**

கைது செய்யப்பட்ட ஆளொருவருக்கு சட்டத்தரணி ஒருவரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுக்கு உள்ள உரிமைகளை அறிமுகப்படுத்துவதற்காக குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைக்கு செய்யப்படுகின்ற உத்தேச திருத்தங்களை மீளாய்வு செய்வதற்காக மாண்புமிகு அமைச்சரால் சட்டமா அதிபரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் வரைவொன்று தயார் செய்யப்பட்டது.

அதன்படி முதலில் நான்கு (04) வருட காலப்பகுதிக்காக மாத்திரமே வலுவிலுள்ளவாறு சட்டத்தை விதிப்பதற்கும், அதன் தொழிற்பாட்டைப் பற்றி செய்யப்படுகின்ற மதிப்பீடொன்றின் அடிப்படையில் சட்டத்தின் காலத்தை மேலும் நீடிப்புச் செய்வதற்கு ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அமைச்சு மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் எடுக்கப்பட்ட கூட்டு தீர்மானத்தின் மீது மேலும் இச்சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வது அவசியமற்றதென மாண்புமிகு அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டது.

07. **<u>குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைக்குச் செய்யப்படுகின்ற திருத்தம் (118,119 ஆம் பிரிவுகள்) சத்தியப் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல்.</u>**

தற்போது சத்தியப் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல் பற்றிய முறைசார் நடவடிக்கை முறையொன்று அல்லது அவர்களின் தொழில் நடத்தையைக் கண்காணிக்கும் செயன்முறையொன்று இல்லை. குடியியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 119 ஆம் பிரிவில் இது தொடர்பாக குறித்த சில ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ள போதிலும், அவ்வேற்பாடுகளினூடாக போதுமானளவு சிக்கலான நிலைமைகளுக்கு தீர்வு கிடைக்காது என அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்பட்டதன் பின்னர், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையை திருத்தஞ் செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், வரைவு சட்ட வரைநரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது நீதி அமைச்சினால் சட்டமூலம் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் இறுதி வரைவை தயார் செய்வதற்கு சட்டவரைநரிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட பின்னர் இக்கருமத்தை நிருவாக ரீதியாக தீர்ப்பதற்கு முடியுமென அறிவிக்கப்பட்டதால் இது தொடர்பாக மேலும் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன.

08. **<u>பிரிவிடல் சட்டத்துக்கான உத்தேச திருத்தங்கள்</u>**

பரவேணி நிலகாரயாவிற்கு பிரிவிடல் வழக்கொன்று அல்லது பங்குக்குரிய காணி ஒன்று சம்பந்தமாக வழக்கொன்றைத் தொடுப்பதற்கு முடிகின்ற பிரிவிடல் சட்டத்தை திருத்தஞ் செய்தல் இதன் நோக்கமாகிறது. இது விசாரணையிலுள்ள சகல வழக்குகளையும் மேவுகை செய்யப்படுகின்றவாறு கடந்தகாலத்திற்கும் ஏற்றவாறு திருத்தப்படவுள்ளது. அதன்படி திருத்தப்பட்ட சட்டமூலம் சட்டமா அதிபருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் பற்றிய மேலதிக கலுந்துரையாடல்கள் சட்ட ஆணைக் குழுவுடன் நடாத்தப்படவுள்ளது.

09. **<u>1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டம் (45 பிரிவுக்கு செய்யப்படுகின்ற திருத்தம்)</u>**

தற்போது சமாதான நீதிவான் நியமனங்கள் செய்யப்படுவது நீதிமன்ற வலயங்களுக்காக என்பதுடன், அது தொடர்பாக ஏற்பட்ட சிக்கல்களை ஆராய்ந்துப் பார்த்து குறித்த நியமனங்கள் நிருவாக மாவட்டங்களுக்காக செய்வதற்கு இத் திருத்தம் சமர்பிக்கப்பட்டது. தொடர்புடைய வரைவை வர்த்தமானியில் வெளியிடுவதற்காகவும், அதன்பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவும் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அமைச்சரினால் சமர்பிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்திற்கு பின்வரும் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

1. நியமனத்தை முடிவுறுத்திக்கொள்ளல், இரத்துச் செய்தல் மற்றும் இடைநிறுத்தல் சம்பந்தமாக ஏற்பாடுகளைச் செய்வதற்கான கட்டளைகள்;
2. ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள சமாதான நீதிவான்களை சம்பந்தப்பட்ட நிருவாக மாவட்டங்களின் கீழ் உள்ளடக்குதல்;

10. **<u>கர்ப்பிணித்தன்மையை முடிவுறுத்திக் கொள்ளும் அனுமதி பெற்ற வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்காக தண்டனை சட்டக்கோவைக்கு மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைக்குச் செய்யப்படுகின்ற திருத்தங்கள்.</u>**

இனங்காணப்பட்ட பின்வரும் குறித்த சந்தர்ப்பங்களில் பலியாக்கப்பட்டவரின் அல்லது பாதிக்கப்பட்டவர் இளம் வயதுடையவராக இருக்கும் சந்தர்ப்பமொன்றில் பாதுகாவலரின் விரும்பத்துடன் பாதுகாப்பான மற்றும் சட்டமுறையான கருச்சிதைவு செயல்களுக்கு வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் இத்திருத்தத்தின் நோக்கமாகிறது.

- கற்பழிப்பு மற்றும் முறையில்லாப் புணர்ச்சியினால் ஏற்படுகின்ற கர்ப்பிணித்தன்மை
- 16 வயதுக்குக் குறைந்த ஒரு பெண் பிள்ளை கர்ப்பிணியாகுதல் (நியதிச்சட்ட கற்பழிப்பின் பலியாக்கப்பட்ட) மற்றும்
- பாரதூரமான கரு பலவீனம் உள்ளபோது.

மேற்கூறிய திருத்தங்களுக்காக அமைச்சரவை அங்கீகாரத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் நீதி அமைச்சரால் மத அலுவலகள் பற்றிய அமைச்சர்கள் உட்பட அனைத்து மதத் தலைவர்களுடன் கலந்துரையாடலொன்றை நடாத்துவத்றகு ஏற்பாடு செய்யப்பட்டது இது தொடர்பாக மேலும் ஆராய்ந்துப் பார்ப்பதற்காக சனாதிபதியினால் விசேட கலந்துரையாடல் ஒன்று 2018 செப்தெம்பர் 06 ஆம் திதகி சனாதிபதி அலுவலகத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் மதத் தலைவர்களை ஒன்று கூட்டி மேலும் கலந்துரையாடலொன்று நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

11. **<u>தண்டனை சட்டக்கோவைக்கு செய்யப்படவுள்ள திருத்தங்கள் (மணஞ்சார் கற்பழிப்பு, ஆண்களுக்கிடையே இழிவான பாலியல் செயல்கள் (365அ)</u>**

இது தொடர்பாக ஆராய்ந்துப்பார்த்து விதப்புரைகளை சமர்பிப்பதற்காக கௌரவ உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் தண்டனை சட்டக்கோவை மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தத்திற்காக ஆராயப்படுகிறது.

12. **<u>1941 ஆம் ஆண்டின் 39ம் இலக்க கடன் இணக்க சபைகள் சட்டமூலம்</u>**

குறித்த கட்டளைச் சட்டத்தின் மூலம் கடன் இணக்கசபையை தாபித்தல் மற்றும் அது தொடர்பான இடைநேர் விளைவான விடயங்கள் சம்பந்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது கொழும்புக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள கடன் இணக்க சபையை பொதுமக்களுக்கு இலகுவில் அணுகக்கூடியவாறு தீவின் பல்வேறு பகுதிகளிலும் அதன் கிளைகளை சபைகளை தாபிப்பதன் மூலம் மேலும் பிரபல்யப்படுத்துவதற்காக இத் திருத்தச் சட்டத்தால் முன்மொழியப்பட்டுள்ளது.

அதன் படி கிளை சபைகளை தாபிப்பதற்காகத் தேவையானவாறு சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்புச் செய்வதற்கும் உறுப்பினர் நியமித்தல் தகைமைகளை மாற்றியமைப்பதற்கும் கட்டளைச் சட்டத்தை திருத்தஞ் செய்வதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

13. **<u>குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையை திருத்தஞ் செய்வதற்காக சமர்பிக்கப்பட்டுள்ளது சட்டமூலம் (பொலிஸ் நிலையங்களை கண்காணிப்பிற்காக நீதிபதிக்கு தத்துவமளித்தல்)</u>**

நீதவானொருவர் நியமிக்கப்பட்டிருப்பது எந்த நீதிமன்றப் பிரிவுக்கோ அந்த நீதிமன்றப் பிரிவிற்குள் அமைந்துள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் ஆகக் குறைந்தது மாதத்தில் ஒரு தடவையாவது பரிசோதனை செய்வதற்கான தத்துவமளித்தலை இத்திருத்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இச் சட்டமூலத்தின் சட்டவாக்கத் தன்மையை பற்றிய சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

## 14. சிறைச்சாலைகள் சட்டமூலம்

சிறைக்கைதிகளை சிறைச்சாலைகளின் பொறுப்பில் வைத்துக் கொள்வதற்கு மற்றும் தடுத்து வைத்துக் கொள்வதற்காக சிறைச்சாலைகளை நிறுவுதல். சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளித்தல், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளின்படி சிறைக்கைதிகளை உபசரித்தல், சிறைச்சாலைகளை முகாமை செய்தல், சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 54 ஆம் அத்தியாயத்தை நீக்கிவிடுதலுக்காக மற்றும் அது தொடர்பான விடயங்களை ஆராய்ந்துப் பார்த்தல் இத் திருத்தத்தால் எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டமா அதிபரின் அவதானிப்புகளையும் பரிசீலனை செய்து சட்டவரைஞரால் தயார் செய்யப்பட்ட வரைவு மேலும் கற்கை செய்யப்படுகிறது.

## 15. ஆளொருவரின் மரணம் சம்பந்தமாக நட்டஈடு பெற்றுக்கொள்ளல்

மூன்றாம் திறத்தவரின் கவனக்குறைவு மற்றும் அசட்டைத்தனம் காரணமாக நபரொருவர் மரணமடையும் சந்தர்ப்பமொன்றில் ஏற்படுகின்ற மனவேதனை மற்றும் மனஉளைச்சலுக்கு தங்கிவாழ்பவருக்கு நட்டஈடொன்றை அறவிடு செய்து கொள்ளல் இச்சட்ட மூலத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இச்சட்டம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது.

## 16. குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைக்கான திருத்தம் (நாள்தோறும் வழக்குகளை விசாரணை செய்தல் மற்றும் பூர்வாங்க வழக்கு விசாரணை நடவடிக்கை முறை)

பாரதூரமான குற்றங்கள் சம்பந்தமாக நீதி நிருவாக பொறிமுறையின் அதிக தாமத்திற்கு பரிகாரமொன்றாக பின்வரும் திருத்தங்களை குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைக்கு உள்ளடக்குதல் இத் திருத்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

I. இனங்காணப்பட்ட குறித்துரைக்கப்பட்ட விசேட தவறுகள் சம்பந்தமாக மேல் நீதிமன்றங்களில் நாளாந்த அடிப்படையில் வழக்குகள் விசாரணை செய்தலை கட்டாயப்படுத்தல்.

II. சட்டத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆரம்ப/ பூர்வாங்க வழக்கு விடயங்களை விசாரணை செய்வதற்காக விசேட காலப்பகுதியொன்றுக்குள் வழக்குகளை விசாரணை செய்கின்ற நீதிபதியைத் தவிர்ந்த பிரத்தியேக நீதிபதியொருவரிடம் சாட்டுதல்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பின்னர் சட்ட வரைஞரினால் சமர்பிக்கப்பட்ட இறுதிவரைவு சட்டமா அதிபரிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

## 17. குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைக்கான திருத்தம் - ( இனங்காணப்பட்ட குறித்துரைக்கப்பட்ட சந்தர்பங்களின் கீழாக சந்தேக நபரொருவர்/ குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கின்ற தேவைப்பாட்டினை நீக்குதல்)

பிணை வழங்குவதற்கு நீதிவானொருவருக்கு அதிகாரமளிக்கப்படாத சந்தர்ப்பங்களில், விளக்கமறியற்படுத்தலை நீடிப்புச் செய்வதற்கு மாத்திரம் சிறைக்கைதிகளை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லும் போது ஏற்படுகின்ற வன்செயல்களை ஆராய்ந்துப் பார்த்ததன் பின்னர் சிறைக்கைதிகளின் நலன்புரி பற்றிய கண்காணிப்புக்கான தேவைப்பாட்டை மேலும் பேணிக் கொண்டு விளக்க மறியலில் இடுதல் தொடர்பான கட்டளையை நீடிப்புச் செய்யும் நோக்கத்திற்காக சந்தேக நபரை அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தல் அவசியமற்றது என்ற நடவடிக்கை முறையொன்று ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இனங்காணப்பட்ட சந்தர்ப்பமொன்றின் கீழ் விதிப்பதற்கான புதிய ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல் இத்திருத்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் சட்டவரைஞரினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி வரைவு சட்டவாக்க சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக சட்டமா அதிபரிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

18. **<u>1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்திற்கு செய்யப்படுகின்ற திருத்தங்கள்</u>**

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் சட்டத்திலுள்ள அச் சட்டத்தின் பிரிவுகளை மீறுதலுக்காக விதிக்கப்பட்டுள்ள தண்டப்பணங்கள் மற்றும் தண்டனைகளை காலத்துக்கேற்றவாறு திருத்தஞ் செய்தல் தொடர்பாக இவ்வமைச்சரவை குறிப்பறிக்கை ஆற்றுப்படுத்தப்பட்டது. அமைச்சரவைத் தீர்மானத்தின் மீது சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைகள் உள்ளடங்கிய இறுதி வரைவு சட்டவாக்கத் தன்மையை உறுதிப்படுத்துகின்ற சட்டமா அதிபரின் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் இச்சட்டம் மற்றும் ஏனைய அதற்கு இடைநேர்விளைவான சட்டத் திருத்தத்திற்காக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதனால் இத் திருத்தஞ் செய்யும் அவசியத்தைப் பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

19. **<u>ஆட்கொல்லி, நிலக்கண்ணி உபயோகம் கையிருப்பு சேகரித்தல் உற்பத்தி செய்தல் பரிமாறிக்கொள்ளல் மற்றும் தடை செய்தல் மற்றும் இயற்கையாக ஏற்படுகின்ற அழிவுகள் பற்றிய சமவாயம் (ஒட்டாவா சமவாயத்திற்கு) தொடர்பிலான சட்டமூலம்</u>**

பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் அதிமேதகு சனாதிபதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு அமைச்சும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சும் ஒன்றிணைந்து சமர்பித்த இணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் மேற்படி சமவாயத்திற்கு இலங்கையை உள்ளடக்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட சமவாயத்திற்கு தொடர்புடையதாக ஏற்பாடுகளை வலுவாக்குவதற்காக தத்துவமளிக்கப்படுகின்ற சட்டவாக்க வரைவுக்காக கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டவரைஞர் திணைக்களத்தினால் வரைவு தயார் செய்யப்பட்டது.

### 5.1.2. இலங்கை சட்ட அறிக்கைகள்

இலங்கை சட்ட அறிக்கைகளை அச்சடிக்கும் அலுவல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிக்கின்றன. இலங்கையின் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற முக்கியமான வழக்குத் தீர்ப்புக்கள் உள்ளடங்கிய சட்ட அறிக்கைகள் இரு தொகுதிகள் ஒவ்வொரு வருடத்திலும் அச்சடிக்கப்படுகின்றன.

### 5.1.3. சர்வதே சமவாயங்களை அமுல்படுத்தல்

அ). **<u>சிறைச்சாலைகளில் இடநெரிசலை தவிர்த்துக் கொள்வதற்காக மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு சம்பந்தமான நீதித்துறை மற்றும் சட்டமுறையான காரணங்களை கண்டு பிடித்தல் தொடர்பான செயலாற்றுகை செயலணி</u>**

சிறைச்சாலைகளின் இடநெரிசலுக்கு காரணமாகின்ற சட்டமுறையான மற்றும் நீதித்துறை விடயங்களைக் கண்டு பிடிப்பதற்காக செயலாற்றுகை செயலணி தாபிக்கப்பட்டதுடன், அதற்காக நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து விவாகார அமைச்சின் செயலாளரின் தலைமையில் நெறிப்படுத்துவதுடன், அது தொடர்பாக நீதிச் சேவைகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம், சட்டவரைநர் திணைக்களம், சமுதாய சீர்திருத்தத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் நீதிபதிகளின் பயிற்சி நிறுவனம், சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதிநிதித்துவத்துடன் இச் செயலணி செயலாற்றுகிறது.

அதன்படி சிறைச்சாலைகளில் நிலவுகின்ற இடநெரிசல் மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு பற்றிய நீதிமன்ற மற்றும் சட்டக் காரணங்களைக் கண்டுபிடித்தல் பற்றிய செயலாற்றுகைச் செயலணியின் முதல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சட்ட அலுவல்கள் (ஊழல் எதிர்ப்பு) மற்றும்

ஊடகம் பற்றிய துறைசார் கண்காணிப்புக் குழுவின் மூலம் பினவரும் விதப்புரைகளும் உள்ளடங்கிய அம் முதலாம் அறிக்கையின் விதப்புரைகள் ஆராயப்படுகின்றன.

- 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீரதிருத்தச் சட்டத்தை பயனுள்ளதாக வலுப்படுத்துவதற்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் மற்றும் இலங்கை நீதிபதிகளின் பயிற்சி நிறுவனத்தின் உதவியுடன் சமுதாய சீர்திருத்த திணைக்களம் மற்றும் நீதவான்களுக்கிடையே கலந்துரையாடலொன்றை நடாத்துதல்.
- தண்டப்பணம் செலுத்த முடியாத ஆட்கள் தொடர்பில் பல்வேறு அளவுகளில் தண்டம் செலுத்துவதற்கு வாய்ப்பளித்தலை பயனுள்ளதாக வலுப்படுத்துவதற்காகவும் மேற்குறித்த நிறுவனங்களுடன் இணைந்து பேச்சுவார்த்தைகளை நடாத்துதல்.
- 1991 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க விளக்கமறியற்படுத்தப்பட்ட சிறைக்கைதிகளை விடுவித்தல் பற்றிய சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மாதத்திற்கு ஒருமுறை சிறைச்சாலைக்கு நீதவானின் வருகையை உறுதிப்படுத்தல் மற்றும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் கண்காணிப்புச் செய்தல்.
- சிறைச்சாலைக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற சிறைக்கைதிகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வதற்காக பொலிஸ் பிணை பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமாக பிணைச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பற்றி இலங்கை பொலிசுக்கு புரிந்துணர்வை அளித்தல்.

**ஆ). <u>மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் 20 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்டகால சிறைச்த் தண்டனையை தளர்த்துவதற்கான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கு நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு</u>**

மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் நீண்டகால சிறைத்தண்டனை அனுபவிக்கும் சிறைக் கைதிகளின் தண்டனைகளைத் தளர்த்துவதற்காக விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கு முன்னாள் நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவினால் நீணடகால சிறைக்கைதிகள் நேர்முகப்பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதன்படி இக் குழுவினால் 245 நீண்டகால சிறைக்கைதிகள் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன் முதல் கட்டமாக 28 சிறைக்கைதிகளின் அறிக்கைகள் தண்டனைகாலத்தை குறைத்தல் அல்லது விடுதலைக்காக மாண்புமிகு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரின் விதப்புரைகளுடன் அதிமேதகு சனாதிபதிக்கு சமர்பிக்கப்பட்டுள்ளன. அதற்காக அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதன்படி செயலாற்றுமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் தலைமையபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**இ). <u>2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சர்வதேச பிள்ளை கடத்தல் பற்றிய குடியியல் துறைகள் சம்பந்தப்பட்ட சமவாயச்சட்டம்</u>**

**இலங்கையிலிருந்து ஏனைய நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட பிள்ளைகள் தொடர்பான விண்ணப்பம்**

| பிள்ளைகள் கொண்டு செல்லப்பட்ட நாடு | கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|
| அவுஸ்திரேலியா | 02 |

**வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பிள்ளைகள் தொடர்பான விண்ணப்பம்**

| பிள்ளைகள் கொண்டு வரப்பட்ட நாடுகள் | கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|
| அவுஸ்திரேலியா | 03 |
| இத்தாலி | 02 |
| ஜப்பான் | 01 |
| பிரான்ஸ் | 01 |
| நியூசிலாந்து | 01 |

**ஈ). 1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தவறாளர்களை பரிமாறிக் கொள்ளல் சட்டத்தின் கீழான கோரிக்கைகள்**

1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கையினுள், தவறொன்றைப் புரிந்த வேறொரு நாட்டின் பிரசை ஒருவரை அந்நாட்டிற்கு ஒப்படைப்பதற்காக மற்றும் வேறொரு நாட்டில் தவறொன்றைப் புரிந்த இலங்கைப் பிரசை ஒருவரை இந்நாட்டிற்கு ஒப்படைத்தல் சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஐக்கிய இராச்சியத்தில் தவறாளராகிய இலங்கையர் ஒருவரை இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மிகுதி தண்டனைக் காலத்தைக் கழிப்பதற்காக இலங்கைக்கு ஒப்படைக்கப்பட்டது.

இலங்கை மற்றும் தாய்லாந்து அரசாங்கக்களுக்கிடையே சிறைக் கைதிகளைப் பரிமாறிக் கொள்ளும் உடன்படிக்கையொன்று இவ்வாண்டில் கைச்சாத்திடப்பட்டது.

**உ). குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகள்**

குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் பற்றிய ஏற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்குடன் சீனா, ஐக்கிய அரபு இராச்சியம், இந்தியா தாய்லாந்து, பெலாரூஸ், பாகிஸ்தான், யுக்ரேன் மற்றும் ருஷியா உள்ளிட்ட நாடுகளுடன் இலங்கை உடன்படிக்கைகளை வலுப்படுத்தி கைச்சாத்திட்டுள்ளது. இலங்கை மற்றும் சுவிஸ்சர்லாந்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ் உடன்படிக்கை மூலம் குற்றவியல் விடயங்களில் உதவியளித்தல் தொடர்பாக அரசாங்கங்களினால் புலனாய்வுகளைச் செய்தல் முறைப்பாடுகளை கோவைப்படுத்தல், வழக்குகளை விசரணை செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகளின் பெறுகைகளை செயற்படுத்தல் ஆகிய விடயங்கள் காட்டப்பட்டுள்ளன.

**ஊ). வெளிநாடுகளில் உள்ள எதிராளிகளுக்கு/ சாட்சிகளுக்கு இலங்கை நீதிமன்றங்களால் வழங்கப்படுகின்ற அழைப்புக் கட்டளைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள்**

2000 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின்படி, 2018 சனவரி முதல் 2018 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்குள் இலங்கை நீதிமன்றங்களிலிருந்து வழங்கப்பட்ட 429 அழைப்புக்கட்டளைகள் பின்வருமாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினூடாக நேரடியாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

| நாடு | வழங்கப்பட்ட அழைப்புக் கட்டளைகள் | நாடு | வழங்கப்பட்ட அழைப்புக் கட்டளைகள் |
|---|---|---|---|
| கனடா | 22 | ஸகொட்லாந்து | 02 |
| சீனா | 08 | மலேசியா | 02 |
| பஹரேன் | 03 | ரஷ்யா | 08 |
| ஹயிடி | 01 | சீஷெல்ஸ் | 01 |
| சைப்பிரஸ் | 07 | சிங்கப்பூர் | 05 |
| டென்மார்க் | 04 | நெதர்லாந்து | 05 |
| போலாந்து | 04 | நியூசிலாந்து | 08 |
| மோல்ட்டா | 03 | பிலிபீன் | 02 |
| ஒஸ்ரியா | 06 | மாலைத்தீவு | 02 |
| பிரான்சு | 13 | சுவிஸ்சர்லாந்து | 03 |
| ஜேர்மன் | 08 | ஐக்கிய அரபு எமிர் இராச்சியம் | 34 |
| தோஹா கட்டார் | 15 | ஓமான் | 02 |
| ஜேரர்தான் | 07 | பாகிஸ்தான் | 01 |
| ஸ்பாஞ்சு | 02 | சுவிடன் | 05 |
| ஈரான் | 03 | ஐஸ்லாந்து | 01 |
| இந்தியா | 19 | ஐக்கிய இராச்சியம் | 62 |
| செகொஸ்லோவேக்கியா | 01 | அமெரிக்கா ஐக்கிய நாடுகள் | 29 |
| அயர்லாந்து | 01 | கொரியா | 05 |

| | | | |
|---|---|---|---|
| இஸ்ரவேல் | 12 | சவுதி அரேபியா | 18 |
| இத்தாலி | 51 | குவைட் | 06 |
| ஜப்பான் | 14 | எகிப்து | 01 |
| அவுஸ்திரேலியா | 19 | கிறேக்க நாடு | 01 |
| ஆப்பானிஸ்தான் | 01 | லெபனான் | 01 |
| **மொத்தம்** | | | **429** |

எ). **<u>இலங்கையில் உள்ள எதிராளிகளுக்கு/ சாட்சிகளுக்கு வெளிநாட்டு நீதிமன்றங்களிலிருந்து வழங்கப்படுகின்ற அழைப்புக் கட்டளைகள்/ கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள்</u>**

2000 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஆவணங்களை கையளிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து 85 கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

| நாடு | கிடைக்கப் பெற்ற கோரிக்கைகள் | நாடு | கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் |
|---|---|---|---|
| பெலருஷியா | 01 | ருமேனியா | 01 |
| கனடா | 13 | நெதர்லாந்து | 01 |
| ஐக்கிய இராச்சியம் | 01 | பல்கேரியா | 01 |
| பிரான்சு | 12 | போலாந்து | 01 |
| ஜேர்மனி | 04 | எகிப்து | 01 |
| செக் குடியரசு | 01 | ஸ்விஸ்டர்லாந்து | 05 |
| இந்தியா | 12 | போர்த்துகேசு | 01 |
| இத்தாலி | 08 | அமெரிக்கா ஐக்கிய நாடுகள் | 06 |
| ஜப்பான் | 04 | சிங்கப்பூர் | 03 |
| கொரியா | 04 | அவுஸ்திரேலியா | 01 |
| லெட்வியா | 01 | டென்மார்க் | 01 |
| கட்டார் | 01 | சீனா | 01 |
| மொத்தம் | | | **85** |

2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்திற்கமைவாக வெளிநாடுகளிலிருந்து 05 கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இலங்கையிலிருந்து 25 கோரிக்கைகள் வெளிநாடுகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

### 5.1.4. மனித வியாபாரத்திற்கு எதிரான தேசிய செயலணி (NAHTIF)

2010 ஆம் ஆண்டில் நீதி அமைச்சினால் மனித வியாபாரத்திற்கு எதிரான தேசிய செயலணி தாபிக்கப்பட்டதுடன், மனித வியாபாரத்திற்கு எதிராக செய்யப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பான அலுவல்களின் கூட்டிணைப்பு, கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் கலந்துரையாடல்களுக்காக இச்செயலணி தேசிய கூட்டிணைப்பு நிறுவனமாக செயலாற்றுகிறது. வழக்குத் தொடுத்தலை துரிதப்படுத்துவதும் பலியாக்கப்பட்டோரின் பாதுகாப்பை பலப்படுத்துவதும் அரசாங்கத்தின் பிரதான திறத்தவர்களுக்கிடையே கூட்டிணைப்பை வலுப்படுத்தலும் இச்செயலணியின் மற்றுமொரு நோக்கமாகிறது. நாட்டினுள் நடைபெறுகின்ற மனித வியாபாரத்திற்கு தீர்வுகளை வழங்குதல் சம்பந்தமாக பொறுப்புடைய நிறுவனங்களாக இனங்காணப்பட்ட சகல அரசாங்கப் பிரதிநிதிகளை இச்செயலணி கொண்டுள்ளது. மனித வியாபாரத்திற்கு இரையாகிய பலியாக்கப்பட்டோர்களை இனங்காணுதல், அவர்களின் பாதுகாப்பை உயர்த்துவதன் சம்பந்தப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கை முறைகள், செயலணியால் மேம்படுத்தப்பட்டன. அது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு 2015 மார்ச் மாதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கைப் பொலிஸின் மற்றும் பிற அரசாங்க அலுவலர்களினதும் இயல்தகவு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மீது செயலணியின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பொலிசின் மற்றும் பிற அரசாங்க அலுவலர்களினதும் இயல்தகவு பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்களை நடாத்துவதன் மீது செயலணியின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மனித வியாபாரம் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் பற்றிய புலனாய்வுகளை துரிதப்படுத்தும் பணிக்காக, அதற்கான விடயங்களை நெறிப்படுத்துவதற்கு விசேட பொலிஸ் கூறொன்று தேசிய செயலணியின் கோரிக்கை மீது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மனித வியாபாரத்திற்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முயற்சிகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் இனங்காணலொன்றாக 2017 ஆண்டின் அமெரிக்கா இராஜாங்கத் திணைகளத்தின் அறிக்கையின்படி அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களத்தினால் இலங்கை கண்காணிப்புப் பட்டியலின் 2 ஆம் தரத்திலிருந்து 2 ஆம் தரம் வரை உயர்த்தப்பட்டுள்ளதுடன் இச் செயலணியின் செயற்பாட்டின் மீது 2018 ஆம் ஆண்டிலும் அம்மட்டத்தை வைத்துக் கொள்ளக்கூடிய சாத்தியம் கிடைத்துள்ளது.

நீதி அமைச்சினால் சமர்பிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கைக்கு அமைவாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெயர்ந்து செல்பவர்கள் பற்றிய சர்வதேச ஒழுங்கமைப்பு நீதி அமைச்சுடன் இணைந்து ஆட்கள் வியாபாரத்தை தடுப்பதற்காக கருத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. அக்கருத்திட்டம் 2017 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் தெரிவுசெய்யப்பட்ட 6 மாவட்டங்களின் அரசாங்க அலுவலர்களை பயிற்சியாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றாகவும் (TOT) ஆட்கள் வியாபாரம் மற்றும் அதை தவிர்த்துக் கொள்ளல் சம்பந்தமாக பொதுமக்களுக்கு புரிந்துணர்வை அளிக்கும் வர்த்தக விளம்பரங்களைப் பிரசாரம் செய்வதையும் அடிப்படையாகக் கொண்டு தொழிற்படுகிறது. இந் நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆண்டிலும் மீண்டும் முன்னைய கருத்திட்டத்தின் வெற்றியின் மீது மேலும் 03 மாவட்டங்களில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

### 5.1.5. <u>நீதி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற விசேட கருத்திட்டங்கள்</u>

#### அ). ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

இலங்கை பற்றிய தொழில்நுட்ப உதவுக் கருத்திட்டம்: முதலீடு மற்றும் வர்த்தக சட்டப்பிரிவை இலக்காகக் கொண்டு நீதித் துறையை வினைத்திறனுடன் பலப்படுத்தல்)

நீதித்துறை பற்றிய அறிவு மற்றும் உதவுத் தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொடுப்பது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகிறது ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவரால் (இணைந்த முகாமை நிருவாகம்) கருத்துரு பத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் சிறந்த வாழ்க்கை முதலீட்டுக்கான பிரயாண முடிவொன்றான நாடொன்றை நிர்மாணிக்கும் கருமத்திற்கான வசதிகளை செய்து நாட்டின் பொருளாதர வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக இலங்கையின் மீளாய்வு நிகழ்ச்சி நிரலுடன் இச் சர்வதேச இணக்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவுக் கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆக்கச்செலவு 750,000 டொலர் என்பதுடன் அது ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவு விசேட நிதியத்தின் (TASF - iv) மூலம் அளிப்பு அடிப்படையில் வழங்கப்படுகின்ற பணத்தொகையொன்றாகும். மீளளிப்பு பணியாட்டொகுதி, உள்நாட்டு தொலைதொடர்பு மதியுரைநர்களுக்கான அலுவல இடவசதிகள் மற்றும் பிற அளிப்புக்கள் என்னும் வகையில் இலங்கை அரசாங்கம் உதவுகிறது. கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் காலம் 2017 யூலை மாதம் தொடங்கி 2020 யூலை வரையிலான 3 வருட காலமொன்றாகும்.

கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தில், தேவைகள் மதிப்பிடுதலொன்றின் மூலம் பூரணமான கற்கையொன்று செய்யப்படுவதுடன், இலங்கையின் முதலீடு, வர்த்தக மற்றும் வியாபாரங்களுக்காக வினைத்திறனான நீதித்துறையொன்றைத் தயார் செய்வதற்காக துறையின் சட்டகட்டமைப்பை மேம்படுத்துவதற்காக முன்னோடிக் கருவியொன்றாக செயற்படுவதற்கு தந்திர செயற்பாட்டுத் திட்டம் மேம்படுத்தப்படுகிறது.

2ஆம் கட்டத்தில் தந்திர செயற்பாட்டுத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட முதன்மையான துறைகளை அடிப்படையாகக் கொண்ட மறுசீரமைப்புக்கள் ஒன்று அல்லது இரண்டு தொழில்நுட்ப உதவியின் மூலம் உதவுவதுடன் இறுதியாக தேவைகள் மதிப்பீட்டுக் கற்கை

மற்றும் பிரகடனம் செய்யக்கூடிய தந்திர செயற்பாட்டுத் திட்ட வெளியீடு மற்றும் பொதுமக்களுக்கு பிரசித்தப்படுத்தல் செய்யப்படுகிறது.

இத்தொழிநுட்ப உதவி பொதுச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அலுவலகத்தின் மூலம் செயற்படுத்தப்படுவதுடன், நீதி அமைச்சு ஆர்வம் காட்டுபவர்களைக் கூட்டிணைப்புச் செய்யும் பிரதான செயற்படுத்தல் முகவராண்மையாகும். அதன்படி கருத்திட்டத்திற்கான மதியுரைநர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் கருத்திட்ட நடவடிககைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி தற்போதைக்கு தொடர்புடைய செயற்பாட்டுத் திட்டத்துக்கான (Stratigic Plan) க்கான தேவையான தரவுகள் திரட்டப்பட்டு முறையான தேவைகள் பற்றிய புலனாய்வு (Need Assessment) நடைபெற்றும் கொண்டிருக்கின்றது.

### 5.1.6. ஏனைய அலுவல்கள்

அ). **குடியியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைத் திருத்தத்திற்கு நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு**

குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையை ஆராய்ந்து பார்த்து காலத்திற்கேற்றவாறு சர்வதேச சட்ட தரக்கட்டளைக்கு இசைந்தவாறு அதற்குத் தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவித்து கௌரவ பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி பிரியசாத் டெப் அவர்களினது தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு சிவில் துறையின் சிரேட்ட சட்டத்தரணிகள், நீதி அமைச்சின் அலுவலர்கள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அலுவலர்கள், சட்டவரைநர் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் தொழில் புரியும் சட்டத்தரணிகளைக் கொண்டுள்ளது.

**ஆ). குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் திருத்தங்களுக்காக நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு**

குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைச் சட்டத்திற்கு மற்றும் தண்டனைச் சட்டக்கோவைக்கு காலத்திற்கேற்றவாறு மற்றும் சர்வதேச தரக்கட்டளைகளுக்கு இசைந்தவாறு தேவையான திருத்தங்களை விதப்புரை செய்யுமாறு உயர்நீதிமன்ற நீதிபதி கௌரவ புவனெக அலுவிஹாரே அவர்களின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அது நீதி அமைச்சின் அலுவலர்கள், குற்றவியல் சட்டத்துறையின் நிபுணர்கள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அலுவலர்கள் சிரேட்ட பொலிஸ் அலுவலர்கள் மற்றும் தொழில்புரியும் சட்டத்தரணிகளைக் கொண்டுள்ளது.

இக் குழுவினால் தற்போது 3 இடை அறிக்கைகள் நீதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**இ). இலங்கையின் கட்டளைச் சட்டங்களின் கீழ் உள்ள தண்டப்பணங்களை திருத்தஞ் செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு**

தற்போது இக்குழுவானது கூட்டப்பட்டுள்ளதுடன் தண்டனைச் சட்டக்கோவை குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை நாடோடி கட்டளைச் சட்டம் மற்றும் பிணை சட்டம் ஆராயப்பட்டுள்ளதுடன் அவற்றின் உத்தேச தண்டப்பணங்கள் பற்றி மீள ஆராயப்படுகிறது.

## 5.2 தாபனப் பிரிவு

நீதி அமைச்சு மற்றும் நீதி அமைச்சின் கீழுள்ள ஒன்பது திணைக்களங்களினதும் பத்து நிறுவனங்களினதும் தாபன அலுவல்கள் தாபனப் பிரிவின் மூலம் செய்யப்படுகின்றது. பயிற்சி மற்றும் வினைத்திறனான மனித வளமொன்றைப் பெற்றுக் கொடுத்தலை உறுதிப்படுத்தல், நீதி நிருவாக கருமத்தின் போது தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய கூட்டிணைப்பு அலுவல்களும் இப்பிரிவினால் செய்யப்படுகின்றன. அதன் கீழ் தேவைப்படுகின்ற பணியாட்டொகுதியை அங்கீகரித்துக் கொள்ளல், ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளைத் தயார் செய்தல், தகுதியானவர்களை தெரிவு செய்தல் ஆட்சேர்ப்புச் செய்தல், பயிற்றுவித்தல், இடமாற்றஞ் செய்தல் பதவி உயர்வு செய்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேலதிக நேர பிரயாணச் செலவுகள், கடன் முற்பணங்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவசியமாகும் போது நிர்வாகம் தொடர்பான உள்ளக சுற்றறிக்கைகளை வழங்குதல் என்பன இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

மேற்குறித்த பணிகள் நீதிமன்ற நிருவாகம், திணைக்கள நிருவாகம் மற்றும் உள்ளக நிருவாகம் ஆகிய துணைப் பிரிவுகள் மற்றும் அதன் கீழுள்ள கூறுகளின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன.

5.2.1. **<u>நீதிமன்ற நிருவாகப் பிரிவு</u>**

தீவு முழுவதிலும் அமைந்துள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் பணிபுரிகின்ற நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அலுவலர்களைத் தவிர்ந்த ஏனைய 5609 அலுவலர்களின் சகல தாபன அலுவல்களும் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

5.2.1.1. **<u>பதவிகளை அங்கீகரித்துக் கொள்ளல்</u>**

பின்வரும் பதவிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக 2018.03.19, 2018.05.17, 2018.08.16 ஆம் திகதிகளில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ஹோமாகம நீதிவான் நீதிமன்றம் | கடுவெல நீதிவான் நீதிமன்றம் | நாரம்மல நீதிவான் நீதிமன்றம் | |
| அபிவிருத்தி அலுவலர் | **03** | **03** | **03** | **09** |
| கட்டளைச் சேவகரும் எழுத்தாணை நிறைவேற்றுநரும் | **04** | **04** | **04** | **12** |
| அலுவலர் பணியாளர் சேவை | **03** | **14** | **11** | **28** |
| நீதி மற்றும் பாதுகாவலர் | **02** | **02** | **-** | **04** |
| மொத்தம் | 12 | 23 | 18 | 53 |

பின்வரும் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2018.04.11, 2018.04.10 மற்றும் 2018.05.10 ஆம் திகதிகளில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| | கண்டி மேலதிக மேல் நீதிமன்றம் | |
| அபிவிருத்தி அலுவலர் | 03 | 03 |
| கட்டளைச் சேவகரும் எழுத்தாணை நிறைவேற்றுநரும் | 03 | 03 |
| நீதிமன்றக் கூவுநர் மற்றும் கட்டியக்காரர் | 01 | 01 |
| நீதிமன்றப் பாதுகாவளர் | 02 | 02 |
| பிஸ்கால் பியொன் | 02 | 02 |
| அலுவலகப் பணியாளர் சேவை | 12 | 12 |
| பிஸ்கால் (தாதித்தாய்) | 02 | 02 |
| **மொத்தம்** | **25** | **25** |

### 5.2.1.2 ஆட்சேர்ப்பு

| பதவி | நிறைவேற்று | மூன்றாம் நிலை | இரண்டாம் நிலை | முதனிலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அலுவலகப் பணியாளர் சேவை | - | - | - | 244 | 244 |
| கட்டளைச் சேவகரும் எழுத்தாணை நிறைவேற்றுநரும் | - | - | - | 119 | 119 |
| நீதிமன்றக் கூவுநர் மற்றும் கட்டியக்காரர் | - | - | - | 17 | 17 |
| நீதிமன்றப் பாதுகாவலர் | - | - | - | 156 | 156 |
| பிஸ்கால் (தாதித்தாய்) | - | - | - | 17 | 17 |
| பிஸ்கால் பியன் | - | - | - | 16 | 16 |
| **மொத்தம்** | **-** | **-** | **-** | **569** | **569** |

### 5.2.1.3 நீதிமன்றங்களுக்கான தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குதல்

| தொலைதொடர்பு வசதிகள் | 2018.01.01ல் உள்ள இணைப்புகள் எண்ணிக்கை | 2018.12.31 வழங்கப்பட்டுள்ள இணைப்புகளின் எண்ணிக்கை | 2018.01.01 - 2018.12.31 வரையில் புதிய இணைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தொலைபேசி வசதிகள் | 533 | 543 | 10 |
| உள்ளக தொலைபேசி வலையமைப்புக்கள் | 28 | 34 | 06 |
| இணையத்தள வசதிகள் | 142 | 155 | 13 |
| **மொத்தம்** | **703** | **732** | **29** |

## 5.2.2 திணைக்கள நிர்வாகம்

நீதி அமைச்சின் கீழுள்ள ஒன்பது திணைக்களங்கள் மற்றும் பத்து நிறுவனங்களினதும் தாபன அலுவல்களை நெறிப்படுத்துதல் இதன் கீழ் செய்யப்படுகிறது.

### 5.2.2.1. புதிய பதவிகளை உருவாக்குதல்

| பதவிப் பெயர் | அரச பகுப்பாய்வாளர் திணைக்களம் | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறைவேற்று | மூன்றாம் நிலை | இரண்டாம் நிலை | முதனிலை | மொத்தம் |
| அரச பிரதி பகுப்பாய்வாளர் | 02 | - | - | - | |
| சந்தேகத்துக்குரிய ஆவணகள் பற்றிய அரச பிரதி பகுப்பாய்வாளர் | 02 | - | - | - | |
| சந்தேகத்துக்குரிய ஆவணங்கள் பற்றிய உதவிப் பகுப்பாய்வாளர் | 04 | - | - | - | |
| அரச பகுப்பாய்வாளர் | 16 | - | - | - | |
| அரச பிரதி பகுப்பாய்வாளர் | 01 | - | - | - | 39 |
| தட்டெழுத்தாளர் | - | - | 10 | - | |
| சாரதி | - | - | - | 04 | |
| **பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்** | | | | | |
| சட்ட அலுவலர் | 01 | - | - | - | 01 |
| **மொத்தம்** | **26** | **-** | **10** | **04** | **40** |

5.2.2.2 **ஆட்சேர்ப்பு**

| நிறுவனம் | பதவி | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| சட்டமா அதிபர் திணைக்களம் | அரச வழக்கறிஞர் | 50 | 206 |
| | உதவி அரச வழக்கறிஞர் (நன்னடத்தை) | 30 | |
| | அலுவலகப் பணியாளர் சேவை | 114 | |
| | சாரதி | 12 | |
| பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | சாரதி | 01 | 01 |
| அரச பகுப்பாய்வாளர் திணைக்களம் | சாரதி | 02 | 02 |
| குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை | உதவிப்பணிப்பாளர் (நிருவாகம்) | 01 | 04 |
| | சாரதி | 03 | |
| உயர் நீதிமன்றம் | பிரதான ஆராச்சி | 01 | 12 |
| | சட்ட பரிசோதனை அலுவலர் | 11 | |
| கடன் இணைக்க சபை திணைக்களம் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 | 04 |
| | சாரதி | 01 | |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | பிரதி பதிவாளர் | 02 | 04 |
| | புத்தகக்கட்டுநர் | 02 | |
| சட்ட உதவி ஆணைக்குழு | முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத) | 02 | 02 |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | உதவி சிறைச்சாலைகள் கண்காணிப்பாளர் | 09 | 09 |

தொழில் நியாய சபை செயலாளர் அலுவலகத்தின் சுருக்கெழுத்தாளர் பதவியின் 35 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2018.11.15 ஆம் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**5.2.3 உள்ளக நிர்வாம்**

உள்ளக நிருவாகத்தின் கீழ் நிருவாகம், சமாதான நீதிவான், திடீர் மரண விசாரணையாளர் மற்றும் சட்ட மருத்துவ அலுவலர், சமாதான நீதிவான் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சத்தியம் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர் மற்றும் போக்குவரத்து ஆகிய கூறுகள் தொழிற்படுகின்றன.

5.2.3.1. **நிர்வாகக் கூறு**

**5.2.3.1.1. பதவிகளை அங்கீகரித்துக் கொள்ளல்**

| பதவி | நிறைவேற்று | மூன்றாம் நிலை | இரண்டாம் நிலை | முதனிலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மேலதிகச் செயலாளர் (சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு) | 01 | - | - | - | 01 |
| பணிப்பாளர் (புலனாய்வு) | 01 | - | - | - | 01 |
| பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 01 | - | - | - | 01 |
| மொத்தம் | **03** | **-** | **-** | **-** | **03** |

**5.2.3.1.2 ஆட்சேர்ப்பு**

2018.06.06 ஆம் திகதி முதல் 04 தொழில்நுட்ப அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

**5.2.3.1.3 பயிற்சிகள் மற்றும் திறன்விருத்தி**

நீதிபதிகள் மற்றும் நீதி அமைச்சில் சேவை செய்கின்ற பதவிநிலை அலுவலர்கள் தொடக்கம் சிற்றூழியர்கள் வரையிலான சகல ஊழியர் தரங்களையும் மேவுகின்ற வகையில் பின்வருமாறு பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

(அ) உள்நாட்டு பயிற்சி

| பணியாளர் தொகுதி | அலுவலர்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவினம் (ரூபா) |
|---|---|---|
| பதவிநிலை அலுவலரக்ள் | 73 | 1,832,676.00 |
| பதவிநிலை அல்லாத தரங்கள் | 146 | 888,700.00 |
| மொத்தம் | 219 | **2,721,376.00** |

மேலும் அரசாங்கத்துடன் இணைந்த தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மூலம் மற்றும் அரச பல்கலைக்கழகங்கள் மூலம் இவ்வமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற 42 பயிலுநர்களுக்கு நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆ. வெளிநாட்டுப் பயிற்சி

| அலுவலர்கள் மற்றும் பயிற்சியின் தன்மை | அலுவலர்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவினம் ரூபா |
|---|---|---|
| அமைச்சின் அலுவலர்கள் - கருத்தரங்குகள் | 07 | 5,100,343.38 |
| அமைச்சின் அலுவலர்கள் - பயிற்சி | 19 | 4,938,407.21 |
| மேல் நீதிமன்றக் கணக்காளர்கள் - பயிற்சி | 1 | 559,492.00 |
| மொத்தம் | 27 | 10,598,242.59 |

5.2.3.1.4 **ஒழுக்காற்று முகாமைத்துவம்**

அ. **முதனிலைப் புலனாய்வுகள்**

2018.01.01 ஆம் திகதி தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரை 26 புதிய முதனிலை புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இக் காலத்திற்குள் முன்னைய ஆண்டுகளில் முடிவடையாதிருந்த 05 முதனிலைப்புலனாய்வுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

ஆ. **முறைசார் ஒழுக்காற்று விசாரணைகள்**

2018.01.01 ஆம் திகதி தொடக்கம் 2018.12.31 வரை 02 புதிய முறைசார் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், முன்னைய ஆண்டுகளில் முடிவடையாதிருந்த 09 முறைசார் ஒழுக்காற்று விசாரணைகளுக்காகவும் ஒழுக்காற்றுக் கட்டளைகளைப் பெற்றுக் கொடுத்து முடிவுறுத்தப்பட்டுள்ளன.

**5.2.3.1.5 கடன் அங்கீகரித்தல்.**

| கடன்வகை | அலுவலர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| ஆதனம்/வீட்டு | 04 | 8,628,640.00 |
| அவதி | 194 | 21,028,376.00 |
| பண்டிகை | 182 | 1,820,000.00 |
| விசேட | 74 | 296,000.00 |
| துவிச்சக்கர வண்டி | - | - |
| மொத்தம் | **454** | **31,773,016.00** |

**5.2.3.2 சமாதான நீதவான் பிரிவு**

| சமாதான நீதவான்களை நியமித்தல் கூறு | எண்ணிக்கை |
|---|---|
| தீவு முழுவதுக்குமான | 5,088 |
| நீதிமன்ற வலயங்களுக்கான | 2,332 |
| மொத்தம் | 7,420 |

**5.2.3.3 திடீர் மரண விசாரணையாளர் மற்றும் சட்ட மருத்துவ அலுவலர் பிரிவு**

**அ) திடீர் மரண விசாரணையாளர்**

தீவு முழுவதிலும் 460 திடீர் மரண விசாரணையாளர்கள் சேவையில் உள்ளதுடன், நீதி நிருவாகச் செயற்பாட்டில் மிக முக்கியமான பணிகள் அவர்களால் நிறைவேற்றப்படுகின்றன.
அதன்படி, பொதுமக்களுக்கு உயரிய வசதிகள் ஏற்படுகின்ற வகையில் திடீர் மரண விசாரணையாளர்களை நியமித்தல் மற்றும் திடீர் மரண விசாரணையாளர் பிரிவுகளை நாளதுவரையாக்குதல் இக் கூறின் மூலம் செய்யப்படுகிறது. பின்வருமாறு திடீர் மரண விசாரணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| மாவட்டம் | திடீர் மரண விசாரணையாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 03 |
| வவுனியா | 01 |
| கிளிநொச்சி | 01 |
| மன்னார் | 01 |
| மாத்தறை | 13 |
| கொழும்பு | 01 |
| கேகாலை | 01 |
| காலி | 01 |
| குருநாகலை | 01 |
| **மொத்தம்** | **23** |

**(ஆ) சட்ட மருத்துவ அலுவலர்**

சட்ட மருத்துவ அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் நிபுணத்துவ சட்ட மருத்துவ அலுவலர்கள், பல்கலைக்கழக சிரேட்ட விரிவுரையாளர்கள் பேராசியர்கள், உதவி சட்ட மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்காக பிரேத பரிசோதனைகளை நடாத்துதல் மற்றும் மருத்துவ அறிக்கைகளைத் தயார் செய்தலுக்காக படிகளைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தப்பட்ட அலுவல்கள் இக்கூறின் மூலம் செய்யப்படுகின்றன.

**5.2.3.4 சமாதான நீதிவான் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதவான் மற்றும் சத்தியப்பிரமாண ஆணையாளர்கள் பிரிவு**

அ. தொழிலில் 15 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள 19 சட்டத்தரணிகள் சமாதான நீதிவான் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதவான்களாக 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையிலான காலத்திற்குள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆ. 700 சட்டத்தரணிகள் சத்தியப்பிரமாண ஆணையாளர்களாக 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையிலான காலத்திற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**5.2.3.5. சத்தியப் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்கள் கூறு**

குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின்படி சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல் மாவட்ட நீதவான்களால் செய்யப்படுவதுடன் அந்த நியமனங்களை செய்வதற்கான தேவையான விதப்புரைகளை பெற்றுக்கொடுத்தல் நீதியமைச்சின் மூலம் செய்யப்படுகிறது.

சிங்களம் தமிழ் ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிகளுக்காக சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்கள் 2101 பேர்கள் தற்போது தீவுமுழுவதிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கான எழுத்துமூல பரீட்சை 2018.06.30 ஆம் திகதி நடாத்தப்பட்டு அவ்வெண்ணிக்கையினர் சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களாக நியமிக்கப்படுவதற்கு தகுதிவாய்ந்தவர்களென மாவட்ட நீதிபதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

| மொழிபெயர்ப்புச் செய்யப்படுகின்ற மொழி | சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட மொழிபெயர்ப்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிங்களம்- தமிழ் | 16 |
| சிங்களம்- ஆங்கிலம் | 100 |
| தமிழ் - ஆங்கிலம் | 20 |

| | |
|---|---|
| ஜப்பான் - ஆங்கிலம் | 13 |
| ஜப்பான் - சிங்களம் | 05 |
| பிரெஞ்சு - ஆங்கிலம் | 01 |
| பிரெஞ்சு - சிங்களம் | 01 |
| ருஷியன் - ஆங்கிலம் | 01 |
| ருஷியன் - சிங்களம் | 01 |
| **மொத்தம்** | **158** |

5.2.3.6 **போக்குவரத்துப் பிரிவு**

அனைத்து மேல்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்துறை அலுவலர்களுக்காக போக்குவரத்து வசதிகளை வழங்கல், வாகனங்களைக் காப்புறுதி செய்தல் மற்றும் வாகனப் பராமரிப்பு அலுவல்கள் இப்பிரிவின் மூலம் செய்யப்படுகின்றன.

அனைத்து மேல்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் ஏனைய நீதித்துறை அலுவலர்களுக்காக செலவின தலைப்பு 228இன் கீழ் 78 வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செலவின தலைப்பு 110 இன் கீழ் பேணப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை

| **அமைச்சின் செலவின தலைப்பின் கீழ் வாகனங்களை ஒதுக்குதல்** | **வாகனங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| மாண்புமிகு அமைச்சர் மற்றும் பணியாட்டொகுதி | 08 |
| அமைச்சின் அலுவலர்கள் | 13 |
| தொகுதி | 39 |
| மொத்தம் | 60 |

**2018.01.01 - 2018.12.31 வரையிலான வாகனங்களின் பராமரிப்பு**

| **வாகன விடயம்** | **செலவினம் ரூபா** |
|---|---|
| 110-1-1-1301 | 8,888,649.92 |
| 110-1-1-2003 | 3,170,775.70 |
| 110-1-2-1301 | 8,051,208.07 |
| 110-1-2-2003 | 2,242,031.05 |
| மொத்தம் | **22,352,664.74** |

**நீதி அமைச்சின் பணியாட்தொகுதியின் தகவல்கள்**

| **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி** | **உள்ளபடியான பணியாட்டொகுதி** | **வெற்றிடமாக உள்ள பணியாட்டொகுதி** |
|---|---|---|---|
| சிரேஸ்டமட்டம் | | | |
| செயலாளர் | 1 | 1 | - |
| மேலதிக செயலாளர் (நிருவாகம்) | 1 | 1 | - |
| மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | 1 | 1 | - |
| மேலதிக செயலாளர் (சிறைச்சாலை) | 1 | - | 1 |
| மேலதிக செயலாளர் (சட்டம்) | 2 | 1 | 1 |
| மேலதிக செயலாளர் (நீதிபதி) | 1 | 1 | - |
| பிரதான நிதி அலுவலர் | 1 | 1 | - |
| சிரேஸ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 2 | 1 | 1 |
| சிரேஸ்ட உதவிச் செயலாளர் (சட்டம்) | 1 | 1 | - |
| சிரேஸ்ட உதவிச் செயலாளர் | 1 | 1 | - |
| பிரதான கணக்காளர் | 1 | 1 | - |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | - | 1 |

| | | | |
|---|---|---|---|
| பணிப்பாளர் (புலனாய்வு) | 1 | - | 1 |
| பணிப்பாளர் (திட்டம்) | 1 | 1 | - |
| பணிப்பாளர் (பொறியியல்) | 1 | 1 | - |
| உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 5 | 5 | - |
| உதவிச் செயலாளர் (சிறைச்சாலை) | 1 | 1 | - |
| உதவிச் செயலாளர் (சட்டம்) | 4 | 4 | - |
| கணக்காளர் | 4 | 3 | 1 |
| உதவி/பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 2 | 2 | - |
| பொறியியலாளர் (ஒப்பந்தம் 1) | 3 | 3 | - |
| சட்டவாக்கத் தயாரிப்பு பற்றிய துணைக்குழுவின் சட்ட மதியுரைநர் (ஒப்பந்த அடிப்படையில்) | 1 | 1 | - |
| சட்ட மதியுரைநர் (ஒப்பந்த அடிப்படையில்) | - | 1 | - |
| மேலதிக பதிப்பாசிரியர் (ஒப்பந்த) | - | 1 | - |
| **மூன்றாம் நிலை மட்டம்** | | | |
| மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் | 1 | 1 | - |
| நிருவாக அலுவலர் | 1 | - | 1 |
| மொழிபெயர்ப்பாளர் | 7 | 7 | - |
| தகவல் தொழில்நுட்ப அலுவலர் | 1 | - | 1 |
| மொழிபெயர்ப்பாளர் (ஒப்பந்த) | 1 | 1 | - |
| நூலகர் (ஒப்பந்த) | - | 1 | - |
| இரண்டாம் மட்டம் | | | |
| அபிவிருத்தி அலுவலர் | 63 | 46 | 17 |
| பட்டதாரி பயிலுநர் | - | 10 | - |
| கணக்கு உதவியாளர் | 1 | - | 1 |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | - | 1 | - |
| அபிவிருத்தி உதவியாளர் | 1 | 2 | - |
| நிதி உதவியாளர் | 1 | 5 | - |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 66 | 64 | 2 |
| புகைப்படக் கலைஞர் | 1 | 2 | - |
| தகவல், தொலைதொடர்பு தொழில்நுட்ப உதவியாளர் | 2 | 2 | - |
| தட்டெழுத்தாளர் | 10 | 4 | 6 |
| வரவேற்பு அலுவலர் | 2 | 2 | 1 |
| ஆரம்ப மட்டம் | | | |
| தொழில்நுட்ப அலுவலர் | 24 | 19 | 5 |
| சாரதி | 30 | 25 | 5 |
| அலுவலகப் பணியாளர் சேவை | 50 | 49 | 1 |
| மின்சாரத் தொழில்வலர் | 6 | 5 | 1 |
| நீர்க்குழாய் தொழிலாளர் | 6 | 5 | 1 |
| மேசன் | 5 | 3 | 2 |
| தச்சன் | 5 | 5 | - |
| தொழிலாளி | 10 | 8 | 2 |
| சுற்று பங்களா பொறுப்பாளர் | 2 | 2 | - |
| உதவி புகைப்படக் கலைஞர் | 1 | 1 | - |

## 5.3. அபிவிருத்திப் பிரிவு

### 5.3.1 திட்டமிடல் பிரிவு

இப் பிரிவினுள் திட்டமிடல், அபிவிருத்தி, பொறியியலாளர் எனும் பிரிவுகள் உள்ளடங்குகின்றன.

#### 5.3.1.1 அறிமுகம்

திட்டமிடல் பிரிவின் மூலம் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அதைச் சார்ந்த நிறுவனங்களின் கருத்திட்டங்களை இனங்காணல் முன்னேற்ற மீளாய்வு மற்றும் மேற்பார்வை செய்யப்படுகிறது. அதன் கீழாக பின்வரும் பணிகள் திட்டமிடல் பிரிவினால் நிறைவேற்றப்படுகிறது.

- நீதித்துறைக்குத் தொடர்புடையதான கருத்திட்டங்களை இனங்காணல்.
- கருத்திட்டங்களை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளுதல்.
- வெளிநாட்டு உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்ற கருத்திட்ட மும்மொழிவுகளை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு சமர்பித்தல்.
- புதிய கருத்திட்டங்களின் அடிப்படை அங்கீகாரத்திற்காக அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்பித்தல்.
- அமைச்சின் அபிவிருத்தி கருத்திட்டங்களை அரச முதலீட்டு திட்டத்தில் உள்ளடக்குதல்.
- அமைச்சின் மற்றும் நீதி நிருவாகச் செலவு தலைப்புகள் தொடர்பான மூலதன வரவு செலவு மதிப்பீடுகளை சமர்பித்தல்.
- வரவு செலவு உரைக்கான வரவு செலவு மும்மொழிவுகளை சமர்பித்தல்.
- மூலதன ஏற்பாடுகளின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு முன்னேற்றத்தை அறிக்கைச் செய்தல்.
- அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையை தயாரித்து வரவு செலவு விவாதத்திற்காக சமர்பித்தல்.
- அமைச்சின் வருடாந்த செயலாற்று அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளுக்காக அவசியமாகும் போது அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.
- அமைச்சுக்கென இணைந்த, உபாயமார்க்கமான மற்றும் தீவிரமான திட்டங்களை தயாரித்தல்.
- அபிவிருத்தி கருத்திட்டங்கள் சம்பந்தமாக மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களை கூட்டிணைத்தல்.
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் அபிவிருத்தி கருத்திட்டங்களை பின்தொடர் நடவடிக்கைச் செய்தல்.
- நீதிமன்றங்களின் வழக்குகள் சம்பந்தப்பட்ட புள்ளிவிபரங்களை ஒன்று திரட்டி வருடாந்த புள்ளிவிபர அறிக்கையை தயாரித்தல்.

### 5.3.1.2 செயலாற்றுகை 2018.01.01 முதல் 2018.12.31 வரை

அ. <u>கருத்திட்டங்களை இனங்காணல்</u>

I. அரச முதலீட்டுத் திட்டத்திற்காக 2018-2021 வரையிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களை இனங்காணல்.

| நிறுவனம் | அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | | | |
|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 | 2021 |
| நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | இரத்தினபுரி, வெலிமடை, கிளிநொச்சி, தெல்தெனிய, பூகொட, கந்தளாய் நீதிமன்ற கட்டடத் தொகுதிகளை நிர்மாணித்தல். றம்படகல்ல மற்றும் ஹட்டன் நீதிமன்றங்களின் அலுவலக கட்டடங்களை நிர்மாணித்தல் | மாவனெல்ல, வலபனை, வாக்கர, ஹெல்பொட, நாரம்மல நீதிமன்றங்களை நிர்மாணித்தல். அக்கரைப்பற்று, மகவ, குளியாபிட்டி எம்பிலிபிட்டி, நாவலபிட்டி மற்றும் சிலாபம் நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணித்தல். கல்கிசை நீதிமன்றத் தொகுதியின் பூரண மறுசீரமைப்பு வழக்குக் கோவைகளை டிஜிட்டல் மயமாக்கல். | புத்தளம், மொறட்டுவை, பொத்துவில் மற்றும் பத்தேகம நீதிமன்றக் கட்டடத் தொகுதிகளை நிர்மாணித்தல். குச்சவெளியில் சுற்றலா விடுதியொன்றை நிர்மாணித்தல். | கம்பஹ மற்றும் உடுகம நீதிமன்ற கட்டடத் தொகுதிகளை நிர்மாணித்தல். |
| அரச பகுப்பாய்வாளர் திணைக்களம் | | தன்னியக்க சுடுகலன் பகுப்பாய்வு அமைப்பொன்றை ஸ்தாபித்தல். | | |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | மன்னார் சிறைக்கூடம் நிர்மாணித்தல் | வாரியபொல சிறைச்சாலை அபிவிருத்தி, மாத்தறை நீதிமன்றத்தை ஒன்று சேர்த்தல் வெலிக்கடை, அநுராதபுரம், களுத்துறை மற்றும் மகரையில் இராணுவ விடுதிகளை நிரமாணித்தல் சிறைச்சாலைகளுக்குள் பாதுகாப்பு கெமராக்களை பொருத்துதல் | காலி நீதிமன்றத்தை ஒன்ற சேர்த்தல் | |
| குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை | | பிரதான அலுவலகத் தொகுதியை நிர்மாணித்தல் | | |
| சட்ட உதவி ஆணைக்குழு | | தம்புள்ள, கடுவலை சட்ட உதவி நிலையங்களை நிர்மாணித்தல். பொலனறுவை, கம்பஹ, பண்டாரவளை சட்ட உதவி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் | வாழைச்சேனை, சியம்பலாண்டுவ, மற்றும் பூகொட சட்ட உதவி நிலையங்களை நிர்மாணித்தல் குளியாப்பிட்டி அநுராதபுரம், பலாங்கொடை, மாவனெல்லை சட்ட உதவி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் | உடுகம மற்றும் தெய்யந்தர சட்ட உதவி நிலையங்களை நிர்மாணித்தல் |

II. 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய 564 மறுசீரமைப்பு கருத்திட்டங்கள் 164 எண்ணிக்கையிலான நீதிமன்றங்கள் தொடர்பாக இனங்காணல்.

ஆ. கருத்திட்டங்களுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளல்.

| நிறுவனம் | மும்மொழிவுகள் |
|---|---|
| நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | மாவனெல்ல, வலப்பனை, நாரம்மல, வாகரை மற்றும் ஹெல்பொட நிதிமன்றக் கட்டடத் தொகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் கல்கிசை நீதிமன்ற கட்டடத் தொகுதியை மறுசீரமைத்தல். |
| | அக்கரைப்பற்று, மஹவ, பொத்துவில் மற்றும் குளியாப்பிட்டி சான்றுப்பொருள் அறை நிர்மாணம். |
| | சிலாபம், எம்பிலிபிட்டி, நாவலப்பிட்டி மற்றும் தெய்யந்தர நீதிபதிகளின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தல நிர்மாணிப்பு |
| | வழக்குக் கோவைகளை டிஜிட்டல் மயமாக்குதல் |
| | குடிபோதையை பரீட்சிக்கும் முறைமையை மேம்படுத்தலுக்காக இலங்கை நோயியல் சட்டமருத்துவ கல்லூரிக்கு ஏற்பாடுகளை வழங்குதல். |
| சமுதாயஞ்சார சீர்திருத்த திணைக்களம் | சமுதாயஞ்சார் சீர்த்திருத்த கட்டளைகளின் கீழாக போதைப்பொருள்கள் சம்பந்தமான தவறாளர்களை சீர்த்திருத்தஞ் செய்தல். |
| | சமுதாயஞ்சார் சீர்த்திருத்தத்தின் கீழாக மேல்மாகாணத்தில் ஹெரோயினுக்கு அடிமையாகிய தவறாளர்களுக்கென மருத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகம் செய்தல். |
| குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை | நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிகளை அறிவூட்டும் நிகழ்ச்சியில் திட்டங்களை நடாத்துதல். |
| | குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு வசதிகளை வழங்குதல் மற்றும் 2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் புலனாய்வுகளை நெறிப்படுத்துதல். |
| சட்ட உதவி ஆணைக்குழு | சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டப்பிரிவு மற்றும் கருத்திட்டப் பிரிவை முகாமைத்துவப்படுத்தல் முறைமையொன்றை ஸ்தாபித்தல். |
| | தம்புல்லை மற்றும் கடுவெலயில் சட்டஉதவி நிலையங்களை நிர்மாணித்தல் |
| | சட்ட உதவி ஒத்துழைப்புக்களை விரிவு படுத்துதலுக்காக நிகழ்ச்சித்திட்ட உதவிப் பிரிவை முறையாக்குதல். |
| | ஊள்ளக ரீதியல் இடம்பெயர்ந்தோர், அகதிகள், குடும்பப் பெண்கள், காணாமற் போனோர்களின் குடும்பங்களுக்காகச் சட்ட உதவிச்சேவைகளை விரிவுபடுத்தல். |
| மீயுயர் நீதிமன்ற கட்டடத் தொகுதி முகாமைச்சபை | மத்திய குளிரூட்டி சில்வர் உபகரணமொன்றை கொள்வனவு செய்தல். |

இ. வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்த்து வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு பின்வரும் மும்மொழிவுகள் சமர்பிக்கப்பட்டுள்ளன.

- அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு தன்னியக்க சுடுகலன் பகுப்பாய்வு உபகரணமொன்றை பெற்றுக் கொடுப்பதற்காக வெளிநாட்டு உதவி வழங்குபவரொருவரை தேடிக்கொள்ளல்.
- அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்கள விஞ்ஞான அலுவலர்களுகாக KOICA நிறுவனம் மூலம் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- அரசாங்க பகுப்பாய்வாளர் திணைகளத்திற்கு தரவு பகுப்பாய்வு அமைப்பொன்றை பெற்றுக்கொடுத்தல் மற்றும் விஞ்ஞான அலுவலர்களை பயிற்றுவிப்பதற்காக UNIDO நிறுவனத்தின் மூலம் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

ஈ. கருத்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்பிக்கப்பட்டுள்ளன.

1. ஹங்கேரியாவின் கடன் உதவிகளின் கீழாக நீதிமன்ற தன்னியக்க முன்னோடி கருத்திட்டத்தை அமுல்படுத்துதல்.

2. போதைப் பொருட்கள் சம்பந்தமாக தவறாளர்களான சமுதாயஞ்சார் சீர்திருத்தம் பெறுபவர்களை சீர்திருத்தும் கருத்திட்டத்திற்காக வரவுசெலவு மதிப்பீட்டிலிருந்து நிதியங்கள் பெற்றுக்கொள்ளல்.
3. அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்காக தன்னியக்க முப்பரிமாணமுடைய நுண்ணோக்காடி பகுப்பாய்வு இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல்.
4. மீயுயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி முகாமைச்சபைக்கு சில்வர் இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக வரவு செலவுத் திணைக்களத்தினால் நிதியங்களை பெற்றுக் கொள்ளல்.

உ. **வரவுசெலவு மதிப்பீடுகளை சமர்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் மற்றும் நீதிமன்ற நிருவாகத்தின் செலவு தலைப்புக்களுக்குத் தொடர்பான மூலதன வரவுசெலவு மதிப்பீடுகள் தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்காக 2018.08.07 ஆம் திகதி கணக்குக் கிளைக்கு வழங்கப்பட்டது.

ஊ. **வரவு செலவு மும்மொழிவுகளை சமர்ப்பித்தல்**

2019 வரவு செலவு உரைக்காக பின்வரும் மும்மொழிவுகள் சமர்பிக்கபட்டன.

1. நீதிமன்ற கட்டடங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் புதுப்பித்தல் வேலைகள்
2. நீதிமன்றங்களின் வழக்குக் கோவைகளை டிஜிட்டல் மயப்படுத்தல்
3. சிறைச்சாலைகளின் பாதுகாப்பிற்காக புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்.
4. சட்டம் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டச் செய்தல்
5. நீதிமன்றங்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
6. கஷ்டப் பிரதேசங்களின் நீதிபதிகளுக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களை நிர்மாணித்தல்.
7. ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திக் கிராமமொன்றை உருவாக்குதல்

எ. **செயற்பாட்டுத் திட்டத்தை சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டின் மூலதனச் செலவுகளுக்கான அமைச்சின் செயற்பாட்டு திட்டத்தை தேசிய வரவுசெலவுத் திணைக்களத்திற்கு மற்றும் கருத்திட்ட முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு 2018.02.15 ஆம் திகதி சமர்பிக்கப்பட்டது.

ஏ. **முன்னேற்ற மீளாய்வு**

**I. முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல்**

| அறிக்கை | எண்ணிக்கை |
|---|---|
| மூலதனச் செலவுகளுக்காக காலாண்டுரீதியில் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் | 04 |
| அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக மாதாந்தம் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் | 12 |
| நீதிமன்ற மறுசீரமைப்பு கருத்திட்டங்களின் மாதாந்த அறிக்கைகள் | 12 |

**II. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்**

| கூட்டம் | எண்ணிக்கை |
|---|---|
| அமைச்சரின் தலைமையில் நிறுவனங்களின் முன்னேற்றம் சம்பந்தமாக நடாத்தப்பட்ட கூட்டங்கள் | 04 |
| அமைச்சரின் தலைமையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் சம்பந்தமாக நடாத்தப்பட்ட கூட்டங்கள் | 02 |
| செயலாளரின் தலைமையில் அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம் சம்பந்தமாக நடாத்தப்பட்ட கூட்டங்கள் | 07 |
| மேலதிகச செயலாளர் (அபிவிருத்தி/தலைமையில் முன்னேற்றம் சம்பந்தமாக நடாத்தப்பட்ட கூட்டங்கள்) | 10 |
| **மொத்தம்** | 23 |

**III. முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்தல்**

| நிறுவனம் | முன்னேற்றம் |
|---|---|
| சனாதிபதிச் செயலகம் | - அமைச்சு மற்றும் அதற்குக் கீழான நிறுவனங்களினால் செயற் படுத்தப்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம் காலாண்டு ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>- 2015 சனவரி மாதம் முதல் 2018 யூன் வரையில் அமைச்சரவையினால் இவ்வமைச்சு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் உள்ளடங்கப்பட்ட அறிக்கை 2018.08.09 ஆம் திகதி சமர்பிக்கப்ட்டுள்ளது. |
| பிரதமரின் அலுவலகம் | - 2015-2018 வரையில் செயற்படுத்தப்பட்ட முடிந்த மற்றும் தொடர்ச்சியான கருத்திட்டங்களின் முன்னேற்றம் 2018.08.02 ஆம் திகதி ஆற்றுப்படுத்தப்பட்டது. |
| தேசிய வரவு செலவுத் திணைக்களம் | - தேசிய வரவு செலவுச் சுற்றறிக்கைகளின்படி அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தை மாதத்திற்கொருமுறை மற்றும் பௌதீக முன்னேற்றத்தை காலாண்டுரீதியில் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.<br>- வரவு செலவு மும்மொழிவுகளை செயற்படுத்தல் முன்னேற்றம் மாதாந்தம் சமர்பிக்கப்பட்டுள்ளன. |
| கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் | - ஆக்கச் செலவு மதிப்பீடு 500 மில்லியன் ரூபாவுக்கு கூடியதான அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம் மாதாந்தம் சமர்பிக்கப்பட்டுள்ளன.<br>- சகல அபிவிருத்தி கருத்திட்டங்களினதும் முன்னேற்றம் தொடர்புடைய படிவத்திற்கு அமைவாக காலாண்டு ரீதியில் சமர்பிக்கப்பட்டுள்ளன. |
| வெளிநாட்டு உள்நாட்டு அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மற்றும் வரவுசெலவு மும்மொழிவுகளின் முன்னேற்றம் | - கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு, சனாதிபதிச் செயலகத்திற்கு, அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு காலாண்டு ரீதியாக அறிக்கை செய்யப்பட்டுள்ளன. |
| கம்பஹா இரத்தினபுரி மாவட்டச் செயலகங்கள் | மாவட்ட கூட்டிணைப்புக் குழுக்களுக்காக அப்பிரதேசங்களில் செயற்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்குத் தொடர்புடையதான செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டன. |
| இலங்கை மத்திய வங்கி | இலங்கை மத்திய வங்கியின் 2017ஆம் ஆண்டறிக்கைக்கான தகவல்கள் 2018.02.15 ஆம் திகதி சமர்பிக்கப்பட்டன. |

ஒ. **வருடாந்த அறிக்கைகளை சமர்பித்தல்**

**பொது கணக்கீட்டு சுறறுநிருபம் இல. 402 மற்றும் பொதுத் திறைசேரி சுற்றுநிருபம் இல1/2004 க்கு அமைவாக கீழ்வரும் செயலாற்றுகை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**

| நிறுவனம் | அறிக்கை | முன்னேற்றம் |
|---|---|---|
| நீதி அமைச்சு | 2017 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | 2018.05.30 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டதுடன் 2018.06.07 ஆம் திகதி சபையில் முன்வகிக்கப்பட்டது. |
| பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | 2017 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | 2018.06.11 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டதுடன் 2017.06.22 ஆம் திகதி சபையில் முன்வகிக்கப்பட்டது. |
| சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 2017 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | 2018.05.28 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டதுடன் 2018.06.07 ஆம் திகதி சபையில் முன்வகிக்கப்பட்டது. |
| சட்டவரைநர் திணைக்களம் | 2017 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | 2018.09.28 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டதுடன் 2018.10.12 ஆம் திகதி சபையில் முன்வகிக்கப்பட்டது. |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 2017 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | 2018.05.23 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்ட்டதுடன் 2018.06.07 ஆம் திகதி சபையில் முன் வகிக்கப்ட்டது. |

| | | |
|---|---|---|
| கடன் இணைக்கச் சபைகள் திணைக்களம் | 2017 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | 2018.06.26 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டதுடன் 2018.07.04 ஆம் திகதி சபையில் முன்வகிக்கப்பட்டது. |
| உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களம் | 2017 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை | 2018.06.28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டதுடன் 2018.07.17 ஆம் திகதி சபையில் முன்வகிக்கப்பட்டது. |
| **சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்** | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கைகள் | 2018.09.30 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டதுடன் 2018.10.11 ஆம் திகதி சபையில் முன்வகிக்கப்பட்டது. |
| இலங்கை நீதிபதிகளின் நிறுவனம் | 2015 ஆம் ஆண்டு அறிக்கை | 2018.02.19ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டதுடன் 2018.04.05 ஆம் திகதி சபையில் முன்வகிக்கப்பட்டது. |
| மீயுயர் நீதிமன்ற கட்டடத்தொகுதி முகாமைச்சபை | 2015ஆம் ஆண்டு அறிக்கை | 2018.02.28 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டதுடன் 2018.04.05 ஆம் திகதி சபையில் முன்வகிக்கப்பட்டது. |

ஒ. இப்பிரிவிற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள புள்ளிவிபர அலுவலரினால் நீதிமன்றங்களிலிருந்து தகவல்களை ஒன்று திரட்டப்பட்டு ஆண்டு மற்றும் ஆண்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுவதுடன் 2018.01.01 முதல் 2018.09.30 வரையிலான அதன் பொழிப்பு பின்வருமாறு.

| **நீதிமன்றங்கள்** | **2017 ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** | **2018.01.01 முதல் 2018.09.30 வரையில் கோவை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** | **2018.01.01 முதல் 2018.09.30 வரையில் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** | **2018.09.30 திகதியில் தீர்க்கப்படவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 4,033 | 1,376 | 1,243 | 4,166 |
| மேன்முறையீட்டு நீதிமன்ங்கள் | 4,923 | 1,126 | 1,678 | 4,371 |
| வர்த்தக மேல் நீதிமன்றம் | 6,093 | 1,214 | 1,151 | 6,156 |
| மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் | 5,914 | 2,307 | 2,114 | 6,107 |
| மேல் நீதிமன்றங்கள் (குற்றவியல்) | 17,395 | 8,786 | 8,927 | 17,254 |
| மாவட்ட நீதிமன்றங்கள் | 196,745 | 57,991 | 43,515 | 211,221 |
| நீதிவான் நீதி மன்றங்கள் | 460,933 | 655,297 | 616,200 | 500,030 |
| சிறுவர் நீதவான் நீதிமன்றங்கள் | 1,280 | 183 | 224 | 1,239 |
| மொத்தம் | **697,316** | **728,280** | **675,052** | **750,544** |

எ. **விசேட நடவடிக்கைகள்**

சட்டத்துறையில் பலப்படுத்தப்பட வேண்டிய கிளைகளை வெளிநாட்டு உதவிகள் வழங்குகின்ற நிறுவனங்களுக்கு அறிமுகம்படுத்துதல் தொடர்பான மாநாடொன்று மாண்புமிகு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரின் தலைமையில் தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு உதவிகள் வழங்குகின்ற நிறுவனங்கள், அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினது அலுவலர்களின் தலைமையில் யுனிசெப் நிறவனத்தின் ஒத்துழைப்புடன் 2018.08.31 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

## 5.3.2 அபிவிருத்திப் பிரிவு

நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் கீழுள்ள நீதிமன்றங்கள் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பிலான காணிகளை இனங்காணுதல், நிர்ணயம், உரித்தாக்கிக் கொள்ளல், மற்றும் காணி கொள்ளல் நடவடிக்கைகள் அபிவிருத்திப் பிரிவினால் நிறைவேற்றப்படுகிறது. அவ்வாறே இதுவரையில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படாத நீதிமன்றங்கள் நிறுவனங்கள் மற்றும் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்களை பேணிச் செல்வதற்காக வாடகை அடிப்படையில் கட்டடங்களை பெற்றுக் கொள்வதும் செய்யப்படுகிறது. மேலும் நீதிமன்றங்களுக்குரிய சகல காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்காக மதிப்பீட்டறிக்கைகள் கோருதலும் மேற்கொள்ளப்படுகிறது.

### 5.3.2.1 **நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்கு காணிகளை உரித்தாக்கிக் கொள்ளல் மற்றும் நீதிமன்றங்களுக்குரிய காணிகளை நிர்ணயித்தல்**

**நீதி முறைமைக்குள் அமைந்துள்ள நீதிமன்றங்கள் மற்றும் வாசஸ்தலங்களின் காணிகளை நிர்ணயம் செய்தல் தொடர்பாக அபிவிருத்திப் பிரிவின் மூலம் 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையில் மேற்கொள்ளப்பட்ட கருமங்கள் பின்வருமாறு.**

I நீதிமன்றங்கள், உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் பிற நிர்மாணங்களுக்காக காணிகளை இனங்காணுதல் உரித்தாக்கிக் கொள்ளல் மற்றும் புதிய நீதிமன்றங்களை நிறுவுதல்.

a. 2018 ஆம் ஆண்டில் நீதிமன்றங்கள் மற்றும் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்கள் அமைந்துள்ள 07 காணிகளுக்கான சாட்டுதல் சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளது. 22 நீதிமன்றங்களின் காணிகளை நிர்ணயித்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலாளர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

b. காணிகளை அளவையிட்டு எல்லைகளை நிர்மாணித்துத் தருமாறு 07 காணிகள் தொடர்பான தகவல்கள் நிலஅளவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

c. கௌரவ உயர் நீதிமன்ற நீதியரசரின் மற்றும் சட்டவிவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டத்தின் விதப்புரைகளின் மீது 03 மேலதிக மேல் நீதிமன்றங்கள் மற்றும் விசேட நீதாய மேல் நீதிமன்றமொன்று பின்வரும் திகதிகளில் நிறுவப்பட்டுள்ளன.

- 2018.05.14 ஆம் திகதி கம்பஹ மேலதிக மேல் நீதிமன்றம்
- 2018.05.22 ஆம் திகதி இரத்தினபுரி மேலதிக மேல் நீதிமன்றம்
- 2018.09.10 ஆம் திகதி கண்டி மேலதிக மேல் நிதிமன்றம்.
- 2018.08.21 ஆம் திகதி கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்றம்

**II அமைச்சுக்குரிய காணிகள் பற்றிய தகவல்களை நாளதுவரை சீராக்கல்**

(a) காணிகளை நிர்ணயிப்பதற்காக அனைத்து மேல் நீதிமன்ற பதிவாளர்களுக்கும் மற்றும் வலய தொழில்நுட்ப அலுவலர்களுக்கு வினாத்தொடரொன்றை அனுப்பி தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் அத்தகவல்களின்படி வலயங்களுக்குரிய அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்கள் அமைந்துள்ள காணிகளின் தகவல்கள் பொழிப்பு செய்து கொண்டிருக்கின்றன.

(b) அமைச்சுக்கு உரித்தாக்கிக் கொண்டுள்ள காணிகள் மற்றும் அக் காணிகளில் அமைந்துள்ள கட்டடங்களை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 53 நீதிமன்றங்களின் தகவல்கள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. 7 நீதிமன்றங்கள் மற்றும் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்களின் மதிப்பீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

**III நீதிமன்ற நிர்மாணங்களுக்காக காணிகளைக்கொள்ளல்**

- கொழும்பு புதிய நீதிமன்ற மனை நிர்மாணத்திற்கு பி.சீ.சீ. லங்கா லிமிடட் நிறுவனத்திற்குரிய காணி கொள்ளல் நடவடிக்கைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
- கம்பளை நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் முன்பக்க பகுதி மற்றும் நுழைவாயிலை தயாரிப்பதற்காக கம்பளை நகர சபைக்குரிய காணிப் பகுதியொன்றை கொள்ளல் நடவடிக்கைகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

- வெலிமடை நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குரிய காணிப் பகுதியொன்றை கொள்ளல் நடவடிக்கைகள் இடம்பொற்றுக் கொண்டிருக்கின்றன.

**5.3.2.2 2018 ஆம் ஆண்டின் நீதிமன்ற கட்டடங்களை திறந்து வைத்தல் மற்றும் அடிக்கல் நாட்டுதல்**

(a) வத்தளை நீதிமன்ற கட்டடத் தொகுதி அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் 2018.05.31 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.





(b) இரத்தினபுரி புதிய நீதிமன்றக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுதல் 2018.09.10 ஆம் திகதி கௌரவ பிரதம நீதியரசரின் தலைமையில் இடம்பெற்றது.





(c) கிளிநொச்சி நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டுதல் 2018.09.03 ஆந் திகதி கௌரவ பிரதம நீதியரசரின் தலைமையில் இடம் பெற்றது





5.3.2.3 **நீதி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அலுவலக வாசஸ்தலங்களுக்காக கட்டடங்களை குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்**

(a) வத்தளை, மாத்தறை, காலி, இரத்மலானை, பொறளை, குருநாகல் தொழில் நியாய சபைகளை பேணிச் செல்வதற்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டடங்களுக்காக குத்தகை உடன்படிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

(b) குருநாகல் மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தை, லக்கலை சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தை பேணிச் செல்வதற்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டடங்களுக்காக குத்தகை உடன்படிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

(c) 2018.01.01 முதல் 2018.12.31 வரையிலான காலப்பகுதிக்குள் 55 உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்களுக்காக பின்வருமாறு குத்தகை உடன்படிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

| மாவட்டம் | தயார் செய்யப்பட்டுள்ள குத்தகை உடன்படிக்கைகள் | | | |
|---|---|---|---|---|
| | மேல் நீதிமன்றங்கள்/ குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதிகளின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்கள் | மாவட்ட நீதிபதி/ மேலதிக மாவட்ட நீதிபதிகளின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்கள் | நீதிவான்/ மேலதிக நீதவான் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்கள் | மொத்தம் |
| கொழும்பு | 1 | 4 | 5 | 10 |
| இரத்தினபுரி | 1 | 1 | 3 | 5 |
| குருநாகல் | 1 | - | 2 | 3 |
| கண்டி | - | 2 | 2 | 4 |
| நுவரெலியா | 1 | 1 | 1 | 3 |
| மாத்தறை | 2 | - | 2 | 4 |
| காலி | 2 | 1 | - | 3 |
| களுத்துறை | - | 3 | 3 | 6 |
| அநுராதபுரம் | 1 | - | - | 1 |
| புத்தளம் | - | - | 1 | 1 |
| அம்பாறை | 1 | - | 2 | 3 |
| திருகோணமலை | - | - | 2 | 2 |
| கேகாலை | - | 3 | - | 3 |
| கம்பஹா | - | - | 3 | 3 |
| அவிசாவளை | - | - | 1 | 1 |
| சிலாபம் | - | 1 | 2 | 3 |
| மொத்தம் | 10 | 16 | 29 | 55 |

## 5.3.3 பொறியியற் பிரிவு

### 5.3.3.1. அறிமுகம்

பயனுள்ளதும் வினைத்திறன்மிக்கதுமான நீதி நிருவாகத்திற்காக நீதிமன்ற முறைமைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் இவ்வமைச்சுக்கு சாட்டப்பட்டுள்ள பிரதான பொறுப்பொன்றாகும். அதற்காக புதிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் தற்போதைய வசதிகளை மேம்படுததல் மற்றும் பேணுதல் என்பன பொறியியல் பிரிவின் முக்கிய பணிகளாகும்.

அதன் கீழ் புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதிகளை மற்றும் நீதிபதிகளின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலங்களை நிர்மாணித்தல், திருத்துதல் மற்றும் பேணுதல் போன்ற நடவடிக்கைகள் இப்பிரிவின் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் நிறைவேற்றப்படுகின்றது.

**அ)** அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள் முக்கியமாக பல வகைகளில் செயற்படுகின்றன அதாவது:-

- வரவு செலவு மதிப்பீட்டு ஏற்பாடுகளின் கீழாக மேற்கொள்ளப்படுகின்ற பாரிய அளவிலான நிர்மாண கருத்திட்டங்கள்.
- வரவு செலவு மதிப்பீடுகள் மூலம் சிறிய அளவிலான கருத்திட்டங்களுக்கென வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழாக மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாண கருத்திட்டங்கள்.
- வரவு செலவு மும்மொழிவுகளின் கீழ் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணங்கள் மற்றும் மறுசீரமைப்பு கருத்திட்டங்கள்.
- வரவு செலவு மதிப்பீடுகள் மூலம் மறுசீரமைப்பு செலவு விடயத்தின் கீழ் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற புனர்நிர்மாண கருத்திட்டங்கள்.

**ஆ)** இவ்வாண்டின் கருத்திட்ட பொழிப்பு பின்வருமாறு:

| | கருத்திட்ட எண்ணிக்கை | 2018 ஆண்டிற்கான ஒதுக்கீட்டுத் தொகை (ரூ.மி) | 2018.12.31ஆம் திகதியின் செலவு (ரூ.மி) | கையிலுள்ள பட்டியல்கள் (ரூ.மி) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| **<u>பாரியளவிலான கருத்திட்டங்கள்</u>** | | | | | |
| வரவு செலவு மதிப்பீடுகளின் கீழ் செயற்படுகின்ற கருத்திட்டங்கள் | 14 | 1,386.84 | 1,000.84 | 87.01 | 78% |
| வரவு செலவு மும்மொழிவுகள் மூலம் செயற்படுகின்ற கருத்திட்டங்கள் | 06 | 920.26 | 240.65 | 352.77 | 64% |
| **உப மொத்தம்** | **20** | **2,307.10** | **1,241.49** | **439.78** | **73%** |
| சிறியளவிலான கருத்திட்டங்கள் | 17 | 310.00 | 194.29 | 3.01 | 64% |
| மறுசீரமைப்பு கருத்திட்டங்கள் | 532 | 230.00 | 221.80 | - | 96% |
| மொத்தம் | **569** | **2,847.10** | **1,657.58** | **442.79** | **73%** |

5.3.3.2 **2018 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாண கருத்திட்டங்கள்**

| கருத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி) | 2018 ஆம் ஆண்டின் செலவு (ரூ.மி) | குறிப்பு |
|---|---|---|---|
| வத்தளை நீதிமன்றக் கட்டடத் தொகுதி | 345.46 | 41.64 | இறுதிப் பட்டியல் செலுத்தப்படவுள்ளது. |
| பொலனறுவை நீதிபதி உத்தியோகப்பூர்வ வாசஸ்தலம் | 32.98 | 1.01 | செலவான முழுத் தொகை ரூ.மி 25.99 ஆகும். இறுதிப்பட்டியல் செலுத்தப்படவுள்ளது. |
| பிபில நீதிபதி உத்தியோகப்பூர்வ வாசஸ்தலம் | | | |
| சியம்பலாண்டுவ நீதிபதி உத்தியோகப்பூர்வ வாசஸ்தலம் | 16.21 | 12.48 | செலவான முழுத்தொகை ரூ.மி 15.95 ஆகும். இறுதிப் பட்டியல் செலுத்தப்படவுள்ளது. |
| அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தின் சிறுவர் சிநேகபூர்வ கட்டடம் | 6.4 | 1.34 | செலவான தொகை ரூ.மி 3.4 ஆகும். |
| கண்டி ஆவண அறையின் இறாக்கை பொருத்துதல் | 6.1 | 4.71 | செலவான முழுத்தொகை ரூ.மி 4.71 ஆகும். இறுதிப் பட்டியல் செலுத்தப்படவுள்ளது. |
| மகவ நீதிபதி உத்தியோகப்பூர்வ வாசஸ்தலம | 16.57 | 13.28 | மேலதிக வேலையுடன் செலவான முழுத்தொகை ரூ.மி 17.92 |

**வத்தளை நீதிமன்ற கட்டடத்தொகுதி**




பிபில நீதிபதி அலுவலக வாசஸ்தலம்



சியம்பலாண்டுவ நீதிபதி அலுவலக வாசஸ்தலம்



பொலனறுவை நீதிபதி அலுவலக வாசஸ்தலம்




5.3.3.3 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு தற்போதைக்கும் நிறைவேற்றப்படுகின்ற நிர்மாண கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | கருத்திட்ட காலம் | ஒப்பந்த தொகை (ரூ.மி) | 2017.12.31 திகதியின் திரண்ட செலவு (ரூ.மி) | 2018 ஆண்டிற்கான ஏற்பாடுகள் (ரூ.மி) | 2018.12.31ஆம் திகதியின் செலவு (ரூ.மி) | கையிலுள்ள பட்டியல்கள் (ரூ.மி) | நிதி முன்னேற்றம் % | 2018.12.31ஆம் திகதியின் பௌதீக் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாத்தறை நீதிமன்றக் கட்டடத் தொகுதி | 2016-2019 | 1,101.64 | 543.29 | 300 | 293.4 | - | 98 | 83 |
| காலி நிதிமன்றக் கட்டடத் தொகுதி | 2013-2017 | 823.15 | 378.31 | 162.74 | - | - | - | 47 |
| கம்பளை நீதிமன்றக் கட்டடத் தொகுதி | 2017-2020 | 422.95 | 107.9 | 89.86 | 46.03 | 31.24 | 51 | 37 |
| முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டடத் தொகுதி | 2017-2020 | 408.97 | 93.78 | 117 | 116.46 | - | 99.8 | 42 |
| மாங் குளம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி | 2017-2020 | 396.75 | 110.62 | 160 | 96.00 | 55.76 | 65 | 54 |
| பொலனறுவை நீதிமன்றக் கட்டடத் தொகுதி | 2017-2019 | 327.75 | 96.68 | 85.28 | 77.34 | - | 91 | 39 |
| அநுராதபுரம் நீதிமன்றக் கட்டடத் தெகுதி | 2017-2019 | 317.4 | 67.36 | 85.28 | 63.92 | - | 68 | 45 |
| ருவன்வெல்ல நீதிமன்றக் கட்டடத் தொகுதி | 2017-2019 | 235.86 | 71.03 | 62.10 | 58.85 | - | 95 | 53 |
| யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதி | 2017-2019 | 207.46 | 49.5 | 110 | 103.15 | - | 94 | 61 |
| மதவாச்சி சுற்றுலா நீதவான் நீதிமன்றம் | 2017-2019 | 130.92 | 1.47 | 36 | 34.64 | - | 96 | 15 |
| கஹட்டகஸ்திகிலிய சுற்றுலா நீதவான் நீதிமன்றம் | 2017-2019 | 97.06 | 1.09 | 29 | 28.05 | - | 97 | 17 |
| லக்கல நீதிமன்றக் கட்டடம் | 2017-2019 | 70.95 | 1.11 | 35 | 28.05 | - | 80 | 33 |
| மாத்தளை மேல் நீதிமன்றம் | 2017.2019 | 37.26 | 7.91 | 25.36 | 9.98 | - | 42 | 70 |
| கல்முனை குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றம் | 2017-2019 | 82.45 | 0.84 | 57 | 56.81 | - | 99.7 | 67 |
| வலஸ்முல்ல புதிய நீதிமன்ற கட்டட நிர்மாணம் | 2018-2019 | 68.9 | 14.62 | 14.5 | 14.37 | - | 99 | 31 |
| மின் உயர்த்தி பொருத்தல் | 2017-2018 | 32.57 | 7.4 | 14 | 13.59 | - | 97 | - |
| ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தின் ஆவண அறை சான்றுப் பொருள் அறை மற்றும் அலுவலக நிர்மாணம் | 2017-2018 | 28.03 | 7.9 | 20.13 | 17.58 | - | 87 | 95 |
| புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி அலுவலக வாசஸ்தலம | 2017-2018 | 18.35 | 5.5 | - | 10.75 | - | - | 95 |

காலி நீதிமன்றக் கட்டடத் தொகுதி



மாத்தறை நீதிமன்றக் கட்டடத் தொகுதி



கம்பளை நீதிமன்றக் கட்டடத் தொகுதி



ருவன்வெல்ல நீதிமன்ற கட்டடத் தொகுதி



யாழ்ப்பண நீதிமன்றக் கட்டடத் தொகுதி



முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டடத் தொகுதி



மாங்குளம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி



பொலனறுவை நீதிமன்றக் கட்டடத் தொகுதி



அநுராதபுரம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி




மாத்தளை நீதிமன்றக் கட்டடத் தொகுதி



கல்முனை குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றம



வலஸ்முல்ல புதிய நீதிமன்ற கட்டடம்



மாவனெல்ல நீதிமன்றத்தின் ஆவண அறை நிர்மாணம்



ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தின் ஆவண அறை சான்றுப்பொருள் அறை மற்றும் அலுவலக நிர்மாணம்





### 5.3.3.4. 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டங்கள் | கருத்திட்ட காலம் | ஒப்பந்த தொகை (ரூ.மி) | 2018 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகள் (ரூ.மி) | 2018.12.31 திகதியின் செலவு (ரூ.மி) | கையிலுள்ள பட்டியல்கள் (ரூ.மி) | நிதி முன்னேற்றம் % | 2018.12.31 திகதியின் பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி நீதிமன்ற கட்டடத் தொகுதி | 2018-2021 | 2,380.5 | 435 | 150 | 284.51 | 99.9 | 5% |
| கிளிநொச்சி நீதிமன்றக் கட்டடத் தொகுதி | 2018-2020 | 379.5 | 110 | 40 | 68.25 | 98% | 13% |
| இறம்படகல்ல நீதிவான் நீதிமன்றம் | 2018-2019 | 13.91 | 1 | | - | - | - |
| நொச்சியாகம நீதிமன்ற கட்டடம் | 2018-2019 | 25.92 | 3.5 | 3.30 | - | 94 | 20% |
| மாவனல்ல ஆவண அறை | 2018-2019 | 10.00 | 10.00 | 4.98 | - | 50 | 68% |
| இறம்படகல்ல நீதிவான் அலுவலக வாசஸ்தலம் | 2018 | 14.94 | | 3.72 | - | | 35% |
| ஆனமடுவ நீதிவான் அலுவலக வாசஸ்தலம் | 2018-2019 | 15.12 | | 4.54 | - | | 15% |
| குளியாபிட்டி மேல் நீதிமன்ற நீதிபதியின் அலுவலக வாசஸ்தலம | 2018-2019 | 20.25 | 87.33 | 4.41 | | | 60% |
| மொனறாகலை மேல் நீதிமன்ற நீதிபதியின் அலுவலக வாசஸ்தலம் | 2018 | 16.92 | | 8.66 | - | | 68% |
| குளியாபிட்டிய மாவட்ட நீதிபதியின் அலுவலக வாசஸ்தலம் | 2018-2019 | 17.02 | | - | | | 15% |

### 5.3.3.5 நிர்மாண ஆரம்ப நடவடிக்கைகள் நடைபெறுகின்ற கருத்திட்டங்கள்

- பூகொட நீதிமன்றக் கட்டடத் தொகுதி
- தெல்தெனிய நீதிமன்றக் கட்டடத் தொகுதி
- வெலிமடை நீதிமன்றக் கட்டடத் தொகுதி
- நாவுல நீதிவான் நீதிமன்ற அலுவலக வாசஸ்தலம்
- வத்தளை நீதிமன்றக் கட்டடத் தொகுதி III
- சிலாபம் / மாவட்ட நீதிவான் நீதிமன்ற மறுசீரமைப்பு
- கொழும்பு வணிக வங்கியின் புனருத்தாபன வேலைகள்

### 5.3.3.6. பெறுகைகள் தொடர்பான நடவடிக்கைகள் நடைபெறுகின்ற கருத்திட்டங்கள்

- நீதிமனை கருத்திட்டம்
- கந்தளாய் நீதிமன்றக் கட்டடத் தொகுதி

#### 5.3.3.7 மறுசீரமைப்பு கருத்திட்டங்கள்

2018.01.01 முதல் 2018.12.31 வரையிலான காலத்திற்குள் நிறைவேற்றப்பட்டுள்ள மறுசீரமைப்பு கருத்திட்டங்கள்

| இல | மறுசீரமைப்பு கருத்திட்டங்கள் அமுல்படுத்திய நிறுவனம் | 2018 ஆண்டிற்கான ஏற்பாடுகள் ரூ.மி | கருத்திட்ட எண்ணிக்கை | 2018.12.31 திகதியின் செலவு (ரூ.மி) |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு மேல் நீதிமன்றம் | 51.71 | 97 | 51.71 |
| 02 | களுத்துறை மேல் நீதிமன்றம் | 9.33 | 22 | 9.33 |
| 03 | காலி மேல் நீதிமன்றம் | 15.07 | 56 | 15.07 |
| 04 | மாத்தறை மேல் நீதிமன்றம் | 3.37 | 14 | 3.37 |
| 05 | மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் | 2.6 | 9 | 2.60 |
| 06 | யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் | 5.35 | 28 | 5.35 |
| 07 | நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் | 2.69 | 14 | 2.69 |
| 08 | கம்பஹ மேல் நீதிமன்றம் | 3.55 | 27 | 3.55 |
| 09 | குருநாகல் மேல் நீதிமன்றம் | 11.62 | 42 | 11.62 |
| 10 | கண்டி மேல் நீதிமன்றம் | 8.98 | 24 | 8.98 |
| 11 | அவிசாவளை மேல் நீதிமன்றம் | 13.42 | 25 | 13.42 |
| 12 | இரத்தினபுரி மேல் நீதிமன்றம் | 14.57 | 35 | 14.57 |
| 13 | பதுளை மேல் நீதிமன்றம் | 7.13 | 12 | 7.13 |
| 14 | அநுராதபுரம் மேல் நீதிமன்றம் | 8.74 | 14 | 8.74 |
| 15 | கேகாலை மேல் நீதிமன்றம் | 4.01 | 15 | 4.01 |
| 16 | சிலாபம் மேல் நீதிமன்றம் | 4.42 | 13 | 2.87 |
| 17 | வவுனியா மேல் நீதிமன்றம் | 2.88 | 17 | 2.88 |
| 18 | அம்பாறை மேல் நீதிமன்றம் | 6.75 | 5 | 6.57 |
| 19 | திருகோணமலை மேல் நீதிமன்றம் | 5.48 | 13 | 5.48 |
| 20 | நுவரெலியா மேல் நீதிமன்றம் | 6.56 | 6 | 6.56 |
| 21 | மொனறாகலை மேல் நீதிமன்றம் | 4.65 | 12 | 4.65 |
| 22 | பொலனறுவை மேல் நீதிமன்றம் | 4.44 | 20 | 4.44 |
| 23 | கல்முனை மேல் நீதிமன்றம் | 4.88 | 17 | 4.39 |
| 24 | தங்காலை மேல் நீதிமன்றம் | 7.4 | 10 | 7.4 |
| 25 | புத்தளம் மேல் நீதிமன்றம் | 2.24 | 15 | 2.24 |
| 26 | அமைச்சு | 11.43 | 7 | 11.43 |
|  | மொத்தம் | **223.00** | **569** | **221** |

# 5.4 சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரிவு

## 5.4.1 அறிமுகம்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரிவு மூலம் சிறைச்சாலைகள் நிருவாகத்தை விரிவான மறுசீரமைப்பொன்றுக்குட்படுத்தப்பட்டு சிறைச்சாலை அலுவலர்களின் தொழிற் பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டு சிறையிலிடப்பட்டவர்கள் விடுதலையாகும் போது அவர்களை சிறந்த பிரசைகளாக சமுதாயப்படுத்தும் நோக்கத்துடன் புனர்வாழ்வு நடவடிக்கையினை மேலும் முறையானதாக்குவதற்குத் தேவையான கொள்கைகளை தயாரித்தல். கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடவடிக்கைளை மேற்கொள்கிறது. இதன் கீழாக பின்வரும் பணிகள் இப் பிரிவனால் அமுல்படுத்தப்படுகிறது.

1. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு நடவடிக்கைகள்.
2. உத்தரவுப் பத்திரங்களின் மீது சிறைக்கைதிகளை விடுதலை செய்தல் மற்றும் உத்தரவுப்பத்திர நிபந்தனைகளை மீறிய சிறைக்கைதிகள் தொடர்பிலான நடவடிக்கைகள்.
3. சிறைக்கைதிகளை வீட்டு விடுமுறையில் அனுப்புதல் தொடர்பிலான நடவடிக்கைகள்.
4. சிறந்த நன்னடத்தையின் மீது சிறைக்கைதிகளின் தண்டனைகளை தளர்த்தல் நடவடிக்கைகள்.
5. விடுதலைபெறுவதற்குள்ள இனம் தவறாளர்களின் கோவைகள்.
6. மன்னிப்புக்களை அங்கீகாரத்திற்காக சமர்பித்தல் மற்றும் நிபந்தனைகளை மீறிய இளந்தவறாளர்கள் தொடர்பிலான நடவடிக்கைகள்.
7. சிறைச்சாலை நிர்மாணங்கள் தொடர்பாக காணிகொள்ளல் உரித்தாக்கிக்கொள்ளல், உடைமையை மீளப்பெறுதல் மற்றும் விடுதலை செய்தல் நடவடிக்கைகள்.
8. சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மற்றும் சமுதாய சீர்த்திருத்த திணைக்களத்தின் நிர்மாணவேலைகள் தொடர்பான நடவடிக்கைகள்.
9. சிறைச்சாலை அலுவலர்களின் பிணைகளை தீர்மானித்தல் சம்பந்தமான நடவடிக்கைகள்.
10. சிறைக்கைதிகளின் கோரிக்கைகள் பற்றிய நடவடிக்கைகள்.
11. சிறைச்சாலை நிறுவனங்களின் மேற்பார்வைக் குழுக்கள் சம்பந்தமான நடவடிக்கைகள்.
12. சிறைக்கைதிகளின் மீளாய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
13. சிறைக்கைதிகளை இடமாற்றஞ் செய்தல் சம்பந்தமான நடவடிக்கைகள்.

## <u>5.4.2. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பை அமுல்படுத்தல்</u>

### 5.4.2.1. <u>நகர மத்தியில் அமைந்துள்ள சிறைச்சாலைகளை நகரத்திலிருந்து வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லல்.</u>

நகர மத்தியில் இருக்கின்ற மிக உயரிய பொருளாதார பெறுமதியினைக் கொண்டுள்ள பூமிகளில் அமைந்துள்ள சிறைச்சாலைகளை நகரத்திலிருந்து வெளிப்பிரதேசங்களுக்கு ஒன்று சேர்த்தல் அரசாங்கத்தின் கொள்கையொன்றாகும். இது சிறைச்சாலைகளில் நிலவுகின்ற பெரும் இடநெரிசலுக்கான ஒரு பரிகாரமாகும்.

அதன்படி போகம்பறை சிறைச்சாலையை பல்லேகெலேக்கு ஒன்று சேர்த்தல் தற்போதைக்கும் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தங்காலை சிறைச்சாலையை மிகவும் நவீனகர அம்சங்களினால் மற்றும் மிகுந்த வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்ட அங்குணுகொல பெலெஸ்ஸ சிறைச்சாலைக்கு 2017.10.16 ஆம் திகதி ஒன்றுசேர்த்தல் செய்யப்பட்டது.

இதற்கு மேலதிகமாக களுத்துறை, காலி, திருகோணமலை, மட்டக்களப்பு, வெலிக்கடை சிறைச்சாலைத் தொகுதியை நீர்கொழும்பு மற்றும் கேகாலை ஆகிய சிறைச்சாலைகளையும் மிகுந்த இடவசதிகளைக் கொண்ட இடங்களுக்கு ஒன்று சேர்ப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி மாத்தறை சிறைச்சாலையின் நிர்மாண வேலைகள் 2019 ஆண்டில் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் வாரியபொல சிறைச்சாலையின் இடவசதிகளை மேம்படுத்தி மேலும் விரிவாக்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்நிர்மாண வேலைகள் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கு மேலதிகமாக திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு புதிய சிறைச்சாலை நிர்மாணத்திற்காக தேவையான காணிகளைக் கொள்ளல் தற்போதைக்கும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. நீர்கொழும்பு மற்றும் கேகாலை சிறைச்சாலைகளை ஒன்று சேர்ப்பதற்காக காணிகளைக் கொள்ளல் நடவடிக்கைகள் தற்போதைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலும் போகம்பரை (தும்பறை) சிறைச்சாலையின் இரண்டாம் கட்ட நிர்மாண வேலைகளுக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிர்மாணம் 2019 ஆம் ஆண்டில ஆரம்பிக்கப்படவுள்ளது.

<u>5.4.2.2. சிறைச்சாலைகள் தகவல் முகாமைத்துவ அமைப்பு</u>

சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ அமைப்பு தற்போதைக்கும் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் செயற்படுகிறது. 2018 ஆம் ஆண்டு இறுதியில் 12 சிறைச்சாலை நிறுவனங்களை வலையமைப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக 35 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இதில், 2018-12-31ஆந் திகதி 11 சிறைச்சாலை நிறுவனங்களை வலையமைப்பு பூர்த்தி செய்யப்பட்டது. அதன்படி கொழும்பு விளக்க மறியற்சாலை, புதிய மெகஸின், மகரை, பல்லேகெலே, குருவிட்ட, வீரவில, காலி, பதுளை, அநுராதபுரம், நீர்கொழும்பு மற்றும் வட்டரெக்க ஆகிய சிறைச்சாலைகளை வலையமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ரூபா மில். 31.127 செலவு செய்யப்பட்டுள்ளது. இது 88.9% நிதி முன்னேற்றத்தினையும் 91.6% பௌதீக முன்னேற்றத்தையும் கொண்டது.

<u>5.4.2.3. சிறைச்சாலைகள் பொலிஸ் புத்தஜீவிக் கூறினை மீளக்கட்டியெழுப்புதல்</u>

தொடர்ச்சியாக சிறைச்சாலைகளுக்குள் நடைபெற்ற நானாவித அக்கிரமங்கள் மற்றும் ஊழல் செயல்களை குறைப்பதற்காக சிறைச்சாலை பொலிஸ் கூறின் நடவடிக்கைகளை மீளக்கட்டியெழுப்புதல் இவ்வமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி புதிய அலுவலர்களைக் கொண்ட சிறைச்சாலை பொலிஸ் புத்திஜீவி கூறொன்று நிறுவப்பட்டு அவ்வலுவலர்களுக்கு விசேட பொலிஸ் செயலணியொன்றின் கீழ் விசேட பயிற்சியொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

<u>5.4.2.4 சிறந்த நன்னடத்தையின் மீது சிறைக்கைதிகளை விடுதலை செய்தல்</u>

சிறைச்சாலைகளுக்குள் சிறந்த நன்னடத்தையுடன் தனது புனர்வாழ்வு நடவடிக்கைகளை சிறந்த முறையில் நிறைவேற்றிய பொருமளவிலான சிறைக்கைதிகளுக்கு விடுதலை வழங்குதல் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இதன்படி சிறைக்கைதிகளை உத்தரவுப்பத்திரங்களின் மீது விடுதலை செய்தல் சிறந்த நன்னடத்தையின் மீது சிறைக்கைதிகளின் தண்டனைக் காலத்தை தளர்த்தல் போலவே சிறைக்கைதிகளைப் வீட்டு விடுமுறையில் அனுப்புதலும் நடைபெற்றது.

| தொடர் இல | தண்டனைகள் தளர்த்தப்பட்ட விதம் | விடுதலைப் பெற்றவர்களின் எண்ணிக்கை (2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை) |
|---|---|---|
| 1. | உத்தரவுப் பத்திரங்களின் மீது விடுதலை செய்தல் | 177 |
| 2 | வீட்டு விடுமுறையில் அனுப்புதல் | 378 |
| 3. | ஜனாதிபதி மன்னிப்பு – தேசிய சுதந்திரதினம் | 495 |
| 4. | ஜனாதிபதி மன்னிப்பு – வெசாக் போயா தினம் | 423 |

## 5.5 நிதிப் பிரிவு

### 5.5.1 அறிமுகம்

அமைச்சின் முக்கிய நோக்கமான நீதி நிருவாகத்திற்காக தாபிக்கப்பட்ட நீதிமன்ற முறைமையின் நடவடிக்கைகளை தடையின்றி கொண்டு செல்வதற்காக தேவையான நிதியங்களை திரட்டுதல் மற்றும் அவைகளை வினைத்திறனாக, பயனுள்ளதாக மற்றும் பொருளாதார ரீதியில் நெறிப்படுத்துவதன் மூலம் நிதி முகாமைத்துவப்படுத்தல் மற்றும் அதற்கான கணக்கு நடவடிக்கைகளை பேணலும், நிதி தகவல்களை தேவையான பிற திறத்தவர்களுக்கு வழங்குதல் நிதிப் பிரிவு மூலம் செய்யப்படுகிறது.

அவ்வலுவல்களை நிறைவேற்றும் போது,

i. வினைத்திறனான மற்றும் பயனுள்ள நிதி முகாமை முறைமையொன்றை செயற்படுத்தல்.
ii. நிதி ஆலோசனைகள் மற்றம் வழிகாட்டுதல்
iii. நிறுவனத்துக்குரிய சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்,
iv. அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக நிதி பயன்படுத்தல்.
v. கணக்கியல் மற்றும் அறிக்கை செய்தல் ஆகிய அலுவல்களின் மீது விசேட கவனம் செலுத்தப்படுகிறது.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக நீதிமன்ற நிருவாகம் A பெறுகைகள், கணக்குகள் மற்றும் செலுத்துதல்களாக நிதிப் பிரிவினுள் கணக்காளர்களின் கீழ் 04 துணைப்பிரிவுகள் தொழில் படுகின்றன.

### 5.5.2. நிதி ரீதியான செயலாற்றுகை - 2018.12.31

2018 ஆண்டில் அமைச்சு நிருவாகம் மற்றும் நீதிமன்ற நிருவாகம் செலவின் தலைப்புக்களின் கீழ் முறையே 1,066.8 மில்லியன் ரூபா மற்றும் 9,725.03 மில்லியன் ரூபா தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வேற்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு கைப்பற்றிக் கொள்ளப்பட்ட நிதி முன்னேற்றம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

**அ) செலவினத் தலைப்பு 110 - நீதி அமைச்சு**

| விபரம் | ஏற்பாடுகள் (மில்.ரூபா) | செலவினம் (2018.12.31) (மில்.ரூபா) | முன்னேற்றம் % |
|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 237.6 | 222.2 | 90% |
| பிரயாணச் செலவுகள் | 24.0 | 22.3 | |
| வழங்கல் சேவைகள் மற்றும் பிற | 660.9 | 589.9 | |
| மொத்தம் | **922.5** | **834.4** | |
| **மூலதனச் செலவினம்** | | | |
| சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் | 23.3 | 8.9 | 42% |
| சொத்துக்களைக் கொள்ளல் | 23.2 | 3.4 | |
| பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி | 14.5 | 8.7 | |
| பிற | 83.3 | 40.3 | |
| மொத்தம் | **144.3** | **61.3** | |
| முழு மொத்தம் | **1,066.8** | **895.7** | **84%** |

## ஆ) செலவினத் தலைப்பு 228 நீதிமன்ற நிருவாகம்

| விபரம் | ஏற்பாடுகள் (மில்.ரூபா) | செலவினம் (2018.12.31) (மில்.ரூபா) | முன்னேற்றம் % |
|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 5,180.31 | 5,179.54 | |
| பிரயாணச் செலவு | 58.34 | 56.66 | |
| வழங்கல் சேவைகள் மற்றும் பிற | 1,275.74 | 1,249.56 | |
| மொத்தம் | **6,514.39** | **6,485.76** | 99% |
| **மூலதனச் செலவினம்** | | | |
| சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் | 256.55 | 240.37 | |
| சொத்துக்களைக் கொள்ளல் | 124.00 | 109.63 | |
| கட்டடங்களை நிர்மாணித்தல் | 2,692.10 | 1458.95 | |
| பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி | 118.00 | 100.16 | |
| பிற | 20.00 | 15.97 | |
| **மொத்தம்** | **3,210.65** | **1,925.08** | 59% |
| முழு மொத்தம் | **9,725.04** | **8,410.84** | **86%** |

**2018 ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிப்பிரிவின் துணைப் பிரிவுகளின் செயலாற்றுகை வெவ்வேறாக பின்வருமாறு.**

### 5.5.2.1 நீதிமன்ற நிருவாகப் பிரிவு

தீவு முழுவதிலும் அமைந்துள்ள மேல் நீதிமன்றங்கள் மாவட்ட நீதிமன்றங்கள், நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின் கணக்கு அலுவல்கள் 25 வலய மேல் நீதிமன்றக் கணக்கு அலுவலகங்களின் மூலம் நிதி அலுவல்களின் கண்காணிப்பு மற்றும் கூட்டிணைப்பு செய்தல் செய்யப்படுகிறது. நீதிமன்றங்களால் திரட்டப்படுகின்ற தண்டப்பணங்கள், பிணைப் பணங்கள் மற்றும் நானாவித கட்டணங்களாக சேர்க்கப்படுகின்ற பணத்தை மத்திய அரசாங்கத்திற்கு மற்றும் மாகாண சபைகளுக்கும் பெற்றுக் கொடுத்தல் பிரதான பணிகள் என்பதுடன் 2018 ஆண்டின் டிசம்பர் மாதம் வரையிலான வருமானங்கள், வைப்புக்கள், பெறுகைகள் மற்றும் செலுத்துதல்கள் பின்வருமாறு.

(அ). **வருமானங்கள்-**

| விபரம் | 2018. மதிப்பீடு (மில். ரூபா) | 2018.12.31.க்கு வருமானம் திரட்டுதல் (மில். ரூபா) | 2017 ஆண்டிற்கான வருமானம் திரட்டுதல் (மில்.ரூபா) |
|---|---|---|---|
| தண்டப்பணம் மற்றும் பறிமுதல் செய்தல்கள் சம்பந்தப்பட்ட வருமானம் திரட்டுதல் | 725.00 | 1,034.51 | 746.00 |
| ஏனைய வருமானத் திரட்டுதல் | 238.63 | 265.59 | 389.00 |
| முழு மொத்தம் | 963.63 | 1,300.1 | 1,135.00 |

(ஆ). **வைப்புக்கள்**

| விபரம் | வைப்புப் பெறுகைள் (மில்.ரூபா) | வைப்புச் செலுத்துதல்கள் (மில். ரூபா) |
|---|---|---|
| பிணை வைப்புக்கள் | 418 | 689 |
| மூன்றாம் தரப்பினருக்கு மீளச் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்து வைத்துக் கொள்ளும் வைப்புக்கள் | 7.690 | 7,747 |

| | | |
|---|---|---|
| மாகாண சபைகளுக்கு வருமானங்களை அனுப்புதல் | 3,069 | 3,372 |
| ஒப்பந்த வைப்புக்கள் | 25 | 103 |
| கேள்விப்பத்திர வைப்புக்கள் | 10 | 11 |
| முழு மொத்தம் | **11,212** | **11,922** |

### 5.5.2.2. பெறுகைப் பிரிவு

இப்பிரிவின் மூலம் நீதிமன்றங்களின் வினைத்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கு மற்றும் நிருவாக அலுவல்களை இலகுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான அலுவலக உபகரணங்களைக் பெற்றுக் கொடுப்பதற்கு பின்வருமாறு பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| தொடர் இல | விபரம் | அளவு | பெறுமதி (ரூ.மி) |
|---|---|---|---|
| 01 | இரும்பு அலுமாரி | 110 | 10.1 |
| 02 | கணனி மேசைகள் | 250 | |
| 03 | கணனி நாற்காலி | 500 | |
| 04 | எழுதுவினைஞர் நாற்காலி | 250 | |
| 05 | அச்சு இயந்திரம் | 160 | 2.73 |
| 06 | ஏனைய வழங்கல் | | 3.01 |
| 07 | கொழும்பு நீதாய விசேடமேல் நீதிமன்றங்களுக்கான உபகரணங்களை வழங்கல் | | 7.3 |
| 08 | கணனி | 29 | 3.6 |
| 09 | 25 நீதிமன்ற வலயங்களுக்கு அலுவலக உபகரணங்கள் மற்றும் நீதிபதிகளின் உத்தியோகப் பூர்வ வாசஸ் தளங்களுக்கான பொருட்களை கொள்வனவு செய்தல் | | 73.8 |
| 10 | ஒலிப்பதிவு இயந்திரங்கள் | 205 | 5.2 |

### 5.5.2.3. கணக்குப் பிரிவு

கணக்குப் பிரிவினால் பின்வரும் பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

i. செலவினத் தலைப்பு 110 மற்றும் 228 இன் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் ஏனைய கணக்குகள் தயார் செய்யப்பட்டு 2018.07.31 ஆம் திகதி தேசிய வரவுசெலவு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுள்ளன.

ii. செலவினத் தலைப்பு 110 மற்றும் 228 இன் 2017 ஆண்டிற்கான வருடாந்த ஒக்கீட்டுக் கணக்கு மற்றும் ஏனைய கணக்குகள் தயார் செய்யப்பட்டு 2018.03.31 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

iii. செலவினத் தலைப்பு 110 மற்றும் 228 இன் அரசாங்க அலுவலர்களின் முற்பண கணக்கு அலுவல்கள் செய்யப்பட்டு வருடாந்த கணக்குகள் 2018.04.30 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

iv. 2017 ஆண்டு தொடர்பில் அமைச்சின் மற்றும் நீதிமன்றங்களின் வருடாந்த மதிப்பீட்டுச் சபை அலுவல்களைக் கூட்டிணைத்தல் மற்றும் ஏலவிற்பனைகளை நடாத்துவதற்கு அங்கீகாரம் வழங்குதல்.

v. பிற திணைக்களங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் நிதி முகாமை மற்றும் கணக்கு அலுவல்களைக் கூட்டிணைத்தல்.

vi. நீதி அமைச்சு சுற்றறிக்கை இல.07/2018 இன் படி நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்பட்ட மண் மற்றும் மரங்களை மதவழிபாட்டுத் தலங்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

vii. நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை ஏலத்தில் விடுவதன் மூலம் 2018.12.31 ஆம் திகதியின் போது 116.5 மில்லியன் ரூபாவாகிய வருமானத்தை திரட்டியுள்ளது.

### 5.5.2.4. செலுத்தற் பிரிவு

நிதிப் பிரிவின் செலுத்தற் கிளையின் மூலம் அமைச்சு நிருவாக செலவினத் தலைப்பின் கீழான (செலவினத் தலைப்பு 110) பின்வரும் கருத்திட்டங்களுக்குத் தொடர்புடையதான சகல மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலுத்துதல் முதன்மையாக செய்யப்படுகிறது.

110-1 அமைச்சரின் அலுவலகம்

110-2 அமைச்சின் நிருவாக அலுவல்கள்

110.-3 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு

அதற்கு மேலதிகமாக அமைச்சின் நிருவாக செலவு விடய தலைப்புக்குரிய சகல அலுவலர்களினதும் சம்பளம் செலுத்துதல், வருமானத்திலிருந்து மீளச் அறவிடுதல்கள், வைப்பு பெறுகைகள் செலுத்துதல் கட்டுநிதி நிருவாகம் ஆகிய அலுவல்கள் நிறைவேற்றப்படுவதுடன் **2018** டிசம்பர் **31** ஆம் திகதியாகும் போது மீண்டுவரும் செலவினம் **834.4** மில்லியன் ரூபா மற்றும் மூலதனச் செலவினம் **61.3** மில்லியன் ரூபாவாக **895.7** மில்லியன் ரூபா செலவுகள் செய்யப்பட்டுள்ளன.

## 5.6 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

### 5.6.1 <u>அறிமுகம்</u>

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள், மீயுயர் நீதிமன்ற முகாமைச் சபை, நீதிபதிகளின் பயிற்சி நிறுவனம். மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு ஆகிய மூன்று நியதிச்சட்ட நிறுவனங்கள், அமைச்சு நிருவாக செலவு விடயத்தின் துணைக் கருத்திட்டமொன்றாக தொழில்படுகின்ற மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, நீதிமன்ற நிருவாக செலவு விடயத்தின் துணைக் கருத்திட்டமொன்றாக தொழில்படுகின்ற தொழில்நியாய சபைச் செயலகம், நீதிமன்ற நிருவாக செலவு விடயத்தின் கீழான மேல்நீதிமன்றங்கள், குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் செய்யப்படுகிறது.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியாட்டொகுதி

- பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (வெற்றிடம்)
- பிரதான முகாமைத்துவ உதவியாளர்
- 05 நிதி உதவியாளர்கள்
- 04 அபிவிருத்தி அலுவலர்கள்
- 02 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும்
- 02 அலுவலகப் பணியாளர்களைக் கொண்டுள்ளது.

இவ்வலுவலர்கள் முறைகள் கணக்காய்வின் மீது விசேட கவனத்துடன் மேற்கூறிய நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்களைச் செய்வதுடன் 2018 சனவரி 01 ஆம் திகதி முதல் 2018 டிசம்பர் 31ஆம் திகதி வரை 57 பூரண கணக்காய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன அவையாவன:-

- 17 மேல் நீதிமன்றங்கள்
- 11 மாவட்ட/ நீதவான் நீதிமன்றங்கள்
- 07 மாவட்ட நீதிமன்றங்கள்
- 11 நீதவான் நீதிமன்றங்கள்
- 02 திணைக்களங்கள்
- நீதி அமைச்சின் 04
- நிறுவனங்கள் 02
- விசேட 03

## 06. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை

### 6.1 சட்டமா அதிபர் திணைக்களம்

**நோக்கு**

இலங்கைக்காகவும் அங்கு வாழ்கின்ற சகல மக்களுக்காகவும் நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றுவதற்காக பயனுள்ளவாறு பதிலளிக்கும் செயற்பாட்டின் முன்னோடி அரச நிறுவனமாக செயல்படுதல்

**பணி**

- இலங்கையின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்காக மதிப்புடனும் அபிமானத்துடனும் நேர்மையாகவும் செயலாற்றுதல் மற்றும் எம்மால் இயன்றளவில் இலங்கை மக்களுக்கு சேவை செய்தல்
- சமுதாய மற்றும் பொருளாதார சுபீட்சம், சம சந்தர்ப்பங்கள் மற்றும் மனிதநேயத்தை ஊக்குவிக்கும் முயற்சியின் போது இலங்கை மக்களுக்காக நீதி, பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்காக பாரபட்சமின்றியும் நீதியாகவும் இலங்கையின் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் முயற்சிக்கும்.

**நோக்கம்**

- இலங்கை அரசாங்கம், அரசாங்க நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்காகத் தேவையான சகல சட்ட முறையான சேவைகள் மற்றும் சட்ட ஆலோசனைகளை உடனடியாக வழங்கல் மற்றும் அரசாங்கத்தின் விரிவான குறிக்கோள்களை விஸ்தரிப்புச் செய்யும் செயற்பாட்டின் போது விசேடித்த பணியொன்றை நிறைவேற்றுதல்.

#### 6.1.1 அறிமுகம்

சட்டமா அதிபர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பாக தோன்றும் தலைமைச் சட்ட ஆலோசகர் என்பதுடன் திணைக்களத்தின் தலைவராகவும் பொறுப்புக் கூறும் உத்தியோகத்தராகவும் கடமையாற்றுகின்றார். சட்டமா அதிபர் திணைக்களமானது "ஏ" வகுப்பு திணைக்களம் என்பதுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.21 ஆம் திகதிய 1993/13 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி பிரகடனத்தின் பிரகாரம் நீதி அமைச்சின் கண்கானிப்பின் கீழ் வருகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களமானது, மத்திய அரசு, மாகாண சபைகள், அரச திணைக்களங்கள், நியதிச் சட்டச் சபைகள் மற்றும் அரச பங்களிப்பு நிறுவனங்களுக்கு சட்ட உதவியை வழங்கி வருகின்றது. திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்கள், சிவில், குற்றவியல், அரசியலமைப்பு மற்றும் வர்த்தக விடயங்களில் அரச மற்றும் அரச சார்பான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் இலங்கையிலுள்ள உயர் நீதிமன்றம் ஏனைய நீதிமன்றங்கள் தொழில் நியாய சபைகள் என்பவற்றில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் சார்பாகத் தோன்றுவர்.

சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்காக திணைக்களத்தில் முறையே சிவில் பிரிவு குற்றவியல் பிரிவு மற்றும் அரச சட்டத்தரணிகள் பிரிவு ஆகிய மூன்று அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தாபனப் பிரிவும் கணக்குப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேற்கூறப்பட்ட அலகுகளுக்கு மேலதிகமாக சட்டமா

அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் முறையாக நடைபெறுவதற்கு கூட்டுத்தாபனப் பிரிவு, மேலதிக அவசரகால சட்டத்தின் கீழ் கடமைகளை மேற்கொள்ள மேலதிக அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான பிரிவு, சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுப் பிரிவு, பொதுமக்கள் மனுப் பிரிவு மற்றும் உயர்நீதிமன்ற அலகு ஆகியன தாபிக்கப்பட்டுள்ளன.

### 6.1.2 சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமைகள்

- சிவில், குற்றவியல், அரசியலமைப்புச் சட்டம், வர்த்தகம் போன்ற விடயங்கள், சர்வதேச சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் என்பன தொடர்பாக அரசாங்கத்திற்கும் அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கல்

- உயர் நீதிமன்றம் ஏனைய நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தல்

- புதிய சட்டங்களை சட்டவாக்கம் செய்யும் போதும் நடைமுறையிலுள்ள சட்டங்களைத் திருத்தும் போதும் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

மேற்கூறப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் பின்வரும் பிரிவுகள் உதவுகின்றன.

- குற்றவியல் பிரிவு
- சிவில் பிரிவு
- அரச சட்டத்தரணிகள் பிரிவு
- உயர் நீதிமன்றப் பிரிவு
- கூட்டுத்தாபனப் பிரிவு

மேலும் திணைக்களத்தின் தங்குதடையின்றிய செயற்பாடுகளுக்கு சிறப்பாக இனங்காணப்பட்ட பொறுப்புக்களையுடைய சிறப்புப் பிரிவுகள் உள்ளன.

- பொதுமக்கள் மனு அலகு (இப் பிரிவு மக்கள் மனுக்கள் தொடர்பில் வழக்குகளை கையாளும்)
- சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு (இப் பிரிவு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளை கையாள்வதற்கு தாபிக்கப்பட்டுள்ளது)

மேற்கூறப்பட்ட பிரிவுகளும் அலகுகளும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் முக்கிய செயற்பாடுகளை கையாளுகின்றன. அத்துடன் இத் திணைக்களத்தின் நிருவாக நடவடிக்கைகளுக்காக கணக்குப் பிரிவும் தாபனப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன.

### 6.1.3 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான காலப்பகுதிக்கான ஒவ்வொரு பிரிவுகளினதும் செயலாற்றுகை

| பிரிவுகள் | வழக்குகளின் வகைகள் | 2018.01.01**இல் உள்ள வழக்குகள்** | **2018.01.01**லிருந்து **2018.12.31 வரை** கோவையிடப்பட்ட வழக்குகள் | **2018.01.01**லிருந்து **2018.12.31 வரை** முடிவுறுத்தப்பட்ட வழக்குகள் | **2018.12.31 இல்** மீதியாகவு **ள்ள வழக்குகள்** |
|---|---|---|---|---|---|
| **சிவில் பிரிவு** | அறிவுரை கோவைகள் | - | 970 | 587 | 383 |
| | தோற்றுதல் கோவைகள் | - | 1,920 | 25 | 69 |
| **அரச சட்டத்தரணிகள் பிரிவு** | சிவில் பிரிவிலிருந்து - எல் | 8,173 | 2,404 | 3,840 | 6,737 |
| | எஸ்பி | 348 | 115 | 294 | 169 |
| | எல்ஏ | 13 | 04 | 03 | 14 |
| | **மொத்தம்** | **8,534** | **2523** | **4,137** | **6,920** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குற்றவியல் பிரிவு | 1.கொலை எத்தனிப்பு | 14,080 | 812 | 935 | 13581 (207 கோவைகள் திருப்பி அனுப்பப்பட்டுள் ளன.) |
| | 2.அபாயஓளடத சட்டம் | | 828 | 1,064 | |
| | 3. சிறுவர் துஷ்பிரயோகம் 364 | | - | - | |
| | 4.கற்பழிப்பு 365 | | 288 | 343 | |
| | 5.பாலியல் தொழில் 360 | | 18 | 31 | |
| | 6.தீங்குவிளைவிக்கும் ஆயுத | | 70 | 164 | |
| | 7.பயங்கரவாத தடுப்பு சட்டம் | | 24 | 06 | |
| | 8.மோட்டார் விபத்து 298 | | 32 | 26 | |
| | 9. பொதுச் சொத்து | | 16 | 17 | |
| | 10.நிதி மோசடி 383 | | 334 | 231 | |
| | 11. வேறு குற்றங்கள் | | 1,003 | 900 | |
| | | **14,080** | **3,425** | **3,717** | **13,581** |
| உயர் நீதிமன்றப் பிரிவு | | 847 | 496 | 498 | 845 |
| கூட்டுத்தாபனப் பிரிவு | | 6,122 | 2,088 | 2,365 | 5,845 |
| பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு | | 17,582 | 2,057 | 2,717 | 16,084 (838கோவைகள் நீக்கப் பட்டுள்ளன. ) |
| பொதுமக்கள் மனுக்கள் பிரிவு | | 619 | 672 | 823 | 468 |
| மொத்தம் | | **47,784** | **14,151** | **14,869** | **44,195** |

- சிவில் பிரிவில் பதியப்பட்ட அதிகமான வழக்குகள் அரச சட்டத்தரணிகள் பிரிவினால் கையாளப்படுகின்றன என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

### 6.1.4 சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | மொத்த மதிப்பீடு ரூபா மில். | 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு | 31/12/2017 வரைக்குமான மொத்த செலவு | 2018.12.31- நிதி ரீதியான முன்னேற்றம் | | 2018.12.31 பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா மில். | % | |
| புதிய அலுவலக கட்டிடம் அமைத்தல் | 1,182.00 | 402.75 | 373.00 | 295.05 | 79% | 59% |
| மன்னார் அரச விடுதி அமைத்தல் | 53.00 | 36.49 | 26.00 | 21.74 | 84% | 95% |
| வவுனியா அரச விடுதி அமைத்தல் | | | | | | |
| **மொத்தம்** | **1,235.00** | **439.24** | **399.00** | **316.79** | | -- |

### 6.1.5 2018.01.01 - 2018.12.31 வரையான நிதி ரீதியான செயலாற்றுகை

| விபரம் | 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூபா மில்) | 2018.12.31 வரையான செலவு (ரூபா மில்) | 2018.12.31 நிதி ரீதியான முன்னேற்றம் |
|---|---|---|---|
| *மீண்டெழும் செலவினம்* | 1,139.30 | 872.40 | 77% |
| *மூலதன செலவினம்* | 484.50 | 402.23 | 83% |
| **மொத்தம்** | **1,623.80** | **1,274.63** | **78%** |

## 6.2. சட்டவரைஞர் திணைக்களம்

**நோக்கு**

அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதன் மூலம் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்குத் துணைபுரிதல்.

**பணி**

அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அத்தகைய சட்டவாக்கத்தின் வரைதல் அரசியலமைப்பிற்கிணங்கச் செய்யப்படுதல்.

### 6.2.1 அறிமுகம்

சட்டவரைஞர் திணைக்களம்,"A"தரத்திலான அரசாங்கத் திணைக்களமொன்றாகவுள்ளது. இத் திணைக்களத்தின் முக்கியபணி, அரசியலமைப்புக்கிணங்கவும் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட முடிபுகளுக்கு இணங்கவும் பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதலாகும். அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுகின்ற நடைமுறையில் இத்திணைக்களமானது, புதியசட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் சட்டமூலங்களை வரைகின்றதுடன், பல்வேறு அரசாங்க அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் மீளாய்வு செய்கின்றது. இத்திணைக்களத்துக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏனைய கடமைகள், வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனை செய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படும்போது பாராளுமன்றத்தில் சமூகமாயிருப்பதனையும் பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதனையும் உள்ளடக்கும். அரசகூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான குழுக்களும் உட்பட, இத்திணைக்களம் எல்லா அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சேவைகளை வழங்குகின்றது. பல்வேறு சட்டமூலங்களையும் துணைநிலைச் சட்டவாக்கங்களையும் தயாரித்தல் தொடர்பாக இத்திணைக்களமானது அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்டமதியுரையையும் வழங்குகின்றது.

### 6.2.2 சட்டமூலங்களை வரைதல் தொடர்பாக திணைக்களத்தின் பணிகள் பின்வருமாறாகும்

(1) புதிய சட்டவாக்கங்களை மும்மொழிகளிலும் ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் என சட்டமூலங்களை வரைதல்.

(2) துணை நிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தலும் மற்றும் (அவசியமானவிடத்து) அவற்றை மும்மொழிகளிலும் வரைதலும்.

(3) சட்டங்களைத் தயாரித்தலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.

(4) மாகாண சபை நியதிச்சட்டங்களை வரைதல்.

(5) தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை (கூட்டிணைத்தல்களின் வரைவுச் சட்டமூலங்கள்) மும்மொழிகளிலும் மீளாய்தல்.

சட்டங்களையும், துணைநிலைச் சட்டவாக்கங்களையும், மாகாணசபை நியதிச்சட்டங்களையும் வரைதல் தொடர்பில் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

இத்திணைக்களத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்னவெனில், இத்திணைக்களம் அதன் சொந்தக் கட்டமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித் திட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். இதற்கான காரணம், திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டம், தேவைப்பட்ட கொள்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல், கொடுக்கப்பட்டவொரு நேரத்தில், அரசாங்க அமைச்சுக்களினதும், அத்தகைய அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களினதும் சட்டமாக்கல் தேவைகளின் மீது அவசியமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளமையாகும். ஆதலால், சட்டவரைஞர் திணைக்களத்தின் செயல் நிறைவேற்றுகைப் பதிவு, ஏதேனும் குறிப்பிட்ட ஆண்டு பூராகவும் முறையான துறைசார் அமைச்சுக்களினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதனிலை மற்றும்

திருத்தச் சட்டவாக்கங்களுக்காக அத்துடன் துணைநிலைச் சட்டவாக்கங்களுக்காகச் செய்யப்பட்ட வேண்டுகோள்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதன் அடிப்படையின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாகவுள்ள சட்டவாக்கங்களை வரைதலின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஏதேனும் வடிவத்திலான சட்டவாக்கம் வேண்டுகோள் விடுக்கும் அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு அது அனுப்பப்படுவதற்கு முன்னர் மும்மொழிகளிலும் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

### 6.2.3 2018.01.01 இலிருந்து 2018.12.31 வரையான முன்னேற்றமீளாய்வு

### 6.2.3.1 வேலைகள் முடித்துக்கொண்டுள்ள கோவைகளின் விபரம் – (2018.01.01 - 2018.12.31

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| கடமையின் தன்மை | 01.01.2018 அன்றுள்ளவாறு முதனிலை அல்லது பூர்த்திசெய்யப்பட்ட சட்ட மூலங் களாகச் சமர்ப்பிக்கப்பட்டு,ஆனால் சட்டத் துறைத் தலைமை யதிபதியினது அல்லது ஏனைய அமைச்சுக்களினதும் திணைக்களங் களினதும் அவதானிப்புகள் அல்லதுஅறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறவுள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை | 2018.01.01 அன்றுள்ளவாறு வரைதல் பூர்த்திசெய்யப்பட்டிராத கோரிக்கைகளின் எண்ணிக்கை (முன் கொணர்ந்த மீதி) | ஆண்டினுள் திறத்தவர்களிட மிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | இவ்வாண்டிலும் முன்னையஆண்டுகளிலும் மூன்று மொழி களிலும் பூாத்தி செய்யப்பட்டு இயைபானதிறத்தவர்களுக்குதிருப்பிஅனுப்பப்பட்டவையும் மற்றும் மேலதிகதிருத்தங்களுக்காகபுதியஅறிவுறுத்தல்களுக்காக மீள்அனுப்பப்படவையும் | மொத்தம் |
| சட்டமூலங்களைவரைதல் (முதன்மைச் சட்டவாக்கங்களும்.சட்டவாக்கங்களின் திருத்தமும்) | 156 | 10 | 70 | 12 | 248 |
| தனிப்பட்டஉறுப்பினர்களின் (கூட்டிணைத்தல்) சட்டமூலங்கள் | 130 | | 07 | | 137 |
| துணைநிலைச் சட்டவாக்கங்களின் திருத்தம். (முதனிலைமற்றும் திருத்த) | 126 | 31 | 185 | 19 | 361 |
| மாகாணசபைகளின்.நியதிச்சட்டங்கள் | 08 | 01 | - | - | 9 |

| | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| கடமையின் தன்மை | மும்மொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட்டு 31.12.2018 இயைபானதிறத்தவர்களுக்கு திறத்த வர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டவையுமான கோரிக்கைகள் (பலதடவைகள் வெளியே அனுப்பப்பட்டவையுமான இறுதி வரைவுகள், ஒவ்வொரு தடவையும் அனுப்பப்பட்ட வரைவு உள்ளடங்கலாக | நீண்டகாலமாக அறிவுறுத்தலின் மையால் மூடப் பபட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 31.12.2018 அன்றுள்ளவாறு முதனிலை அல்லது பூர்த்தி செய்யப்பட்ட சட்டமூலங்களாகச் சமர்ப்பிக்கப்பட்டு, ஆனால் சட்டத்துறைத் தலைமையதிபதியினதுஅல்லது ஏனைய அமைச்சுகளினதும் திணைக்களங்களினதும் அவதானிப்புகள் அல்லது அறிவுறுத்தல்களுக்காகஎதிர்பார்க்கப்பட்டுள்ளவையுமான கிடைக்கப்பெற்றுள்ளவையுமான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 31.12.2018 அன்றுள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத வரைவுகள் தொடர்பிலான கோரிக்கைகளின் எண்ணிக்கை |
| சட்டமூலங்களை வரைதல் (முதன்மைச் சட்டவாக்கங்களும் சட்டவாக்கங்களின் திருத்தமும்) | 60 | 10 | 167 | 11 |
| தனிப்பட்ட உறுப்பினர்களின் (கூட்டிணைத்தல்)சட்ட மூலங்கள் | 1 | - | 136 | |
| துணைநிலைச் சட்டவாக்கங்களின் திருத்தம். (முதனிலை மற்றும் திருத்த) | 167 | - | 163 | 31 |
| மாகாணசபைகளின் நியதிச்சட்டங்கள் | 1 | - | 7 | 1 |

### 6.2.3.2 1-1-2018 தொடக்கம் 31-12-2018 வரையான காலப்பகுதியில் வேண்டுகோள்கள் மற்றும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கோவைகள்

| கோவைகள் | 1-1-2018 தொடக்கம் 31-12-2018 வரையான காலப் பகுதியில் வேண்டுகோள்கள | மும்மொழிகளில் அனுப்பப்பட்ட சட்டங்கள் |
|---|---|---|
| சட்டமூலங்கள் வரைதல் | 70 | 60 |
| பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட சட்டங்கள் | 7 | 1 |
| துணைநிலை சட்டங்கள் (கட்டளைகள், சட்டங்கள், நியதிகள்) | 185 | 167 |
| மாகாண சபைகளின் நியதிச் சட்டங்கள் | - | 1 (முன்பு வந்தது) |
| மொத்தம் | 262 | 229 |

### 6.2.3.3 01.01.2018 இலிருந்து 31.12.2018 வரையிலான நிதி முன்னேற்றறிக்கை

| விபரம் | 2018 ஆம் ஆண்டுக்கான நிதியேற்பாடுகள் (ரூபா.மி) | 31.12.2018 அன்றுள்ளவாறான செலவினம் (ரூபா.மி) | 31.12.2018 அன்றுள்ளவாறான முன்னேற்றறிக்கை % |
|---|---|---|---|
| மீண்டும் வரும் செலவினம் | 122.49 | 114.54 | 94% |
| மூலதனச் செலவினம் | 38.20 | 31.27 | 82% |
| **மொத்தம்** | **160.69** | **145.82** | **91%** |

## 6.3 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

1969ம் ஆண்டின் 03ம் இலக்க இலங்கை சட்டஆணைக்குழு சட்டத்தின்மூலம் இலங்கை சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இது சட்ட மறுசீரமைப்பை மேற்கொள்ளும் பிரதான அரசாங்க நிறுவனமாகும். சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் பிரதான பணி தேவையான நிருவாக மற்றும் ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதாகும்.

**நோக்கு**

- நல்லாட்சிக்காக சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்தல்.

**செயற்பணிகள்**

- சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்துவதற்காக 1969 ம் ஆண்டின் 03 ம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தால் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட பணிகளை அமுல்படுத்தல்.

### 6.3.1 நோக்கமும் தொழிற்பாடுகளும்

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் சட்ட மறுசீரமைப்பை விருத்திசெய்வதாகும். அதற்காக சட்டஆணைக்குழு பின்வரும் பணிகளை ஆற்றுகிறது.

I. சட்டத்தை குறியீடுசெய்தல்
II. முரண்பாடுகளை ஒழித்தல்
III. சட்டத்தை முறையாக அபிவிருத்தி செய்து மறுசீரமைப்பதற்காக பொருள் அளவிலானதும் நடவடிக்கைமுறை சார்ந்ததுமான சட்டத்தை மீளாய்வு செய்தல்
IV. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை அகற்றுதல்
V. சட்டத்தை எளிதாக்குதலும் நவீனமயப்படுத்தலும்
VI. சட்டத்தை மறுசீரமைப்பதற்காக எவ்வாறான பிரேரணைகளையும் பெற்று பரிசீலித்தல்
VII. மறுசீரமைப்பதற்காக காலத்திற்குகாலம் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆராய்வு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து அமைச்சருக்கு வழங்குதல்
VIII. ஏனைய நாடுகளின் சட்டமுறை சம்பந்தமான தகவல்களை பெறல்
IX. துணைச் சட்டவாக்கங்கள் நன்கு ஏற்றுக்கொண்ட கோட்பாடுகளுக்கும் சட்டத்திற்கும் இயைபானதென்பதை, பாதுகாக்கும் எண்ணத்துடன் பாராளுமன்றம் அல்லாத வேறு சபைகளால் துணைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அமுல்படுத்துவதை நிரந்தரமாக மீளாய்வு செய்தல்.
X. வழக்காடுதல் சம்பந்தப்பட்ட நிருவாகத் தன்மையின் நடவடிக்கை முறை உட்பட சட்ட நடவடிக்கை முறைகளை பகுத்தறிவு செய்தல் மற்றும் இலகுபடுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகத் தயார் செய்தல்.
XI. சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகியமொழிகளில் சட்டத்தை குறியீடுசெய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயார் செய்தல்.

### 6.3.2 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான முன்னேற்றம்

| | |
|---|---|
| **1) நீதிமன்றத்தை அவமதித்தல் சட்டம்** | |
| பின்னணி | முன்மொழியப்பட்ட சட்டத்தின் பிரதான குறிக்கோள் நீதிமன்றத்தை அவமதித்தல் சட்டத்தை தொகுப்பதற்கும் மற்றும் அதன் விடயப்பரப்பை தெளிவுபடுத்துவதுமாகும். |
| தற்போதைய நிலைமை | திரு. ஜே.எம். சுவாமிநாதன் அவர்களால் தயாரிக்கப்பட்ட முன்மொழி யப்பட்ட நீதிமன்றத்தை அவமதித்தல் சட்டத்தின் வரைவொன்றை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டுள்ளது. |
| **2) நீதிமன்ற வழக்குடன் தொடர்புடைய விடயப் பொருட்களை விற்றுத் தீர்த்தல் தொடர்பான சட்டம்** | |
| பின்னணி | நீதிமன்றத்தின் களஞ்சியசாலை காப்பாளரின் கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள விடயப் பொருட்களை அவை வழக்கு விளக்கத்தின் போது நீதிமன்றில் |

| | |
|---|---|
| | சமர்ப்பித்து அத்தகைய விடயப் பொருட்களை வல்லுனர் சான்றில் வெளிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. அவைகளை வழக்கு விளக்கம் முடிவடைந்த பின்னர் நீதிமன்றத்தின் கட்டளையொன்றினால் மாத்திரமே விற்றுத் தீர்க்க முடியும். |
| தற்போதைய நிலைமை | நீதிமன்ற விடயப் பொருட்களை விற்றுத் தீர்த்தல்-வகைப்படுத்தல் தொடர்பில் திரு. சன்ஜீவ ஜயவர்த்தன ஜனாதிபதி சட்டத்தரணி அவர்களால் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட வரைவை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. |
| **3) விவாகரத்து, கட்டுக்காப்பு மற்றும் விவாகரத்து கொடுப்பனவு தொடர்பான சட்டம்** | |
| பின்னணி | சீர்செய்ய முடியாத விவாகரத்து தொடர்பிலான விவாகரத்து, கட்டுக்காப்பு மற்றும் விவாகரத்து கொடுப்பனவு தொடர்பாக ஏற்கனவே இருக்கின்ற சட்டம் மற்றும் கட்டளைச் சட்டங்கள் என்பவற்றில் உள்ள விடயங்களை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு முறைமை ஒன்றை அறிமுகப்ப டுத்துவதற்கு மேலுள்ள விடயங்களுக்கு ஒரு தனிச் சட்டத்தை தயாரித்தல்.<br>• புரிந்துணர்வு ரீதீயான ஒரு நிலைமை<br>• திறத்தவர் ஒருவர் விவாகரத்துக்கு விருப்பில்லாததன் காரணமாக பரஸ்பர சம்மதமில்லாத ஒரு நிலைமை<br>கட்டுக்காப்பு: பிள்ளையின் சிறந்த அக்கறை<br>விவாகரத்து கொடுப்பனவு: நியாயமானதும் மற்றும் சமத்தவமானதுமான நியாயாதிக்கம்<br>பராமரிப்பு: இது தொடர்பான நியாயாதிக்கம் நீதவான் நீதமன்றத்துக்கு அல்லாமல் மாவட்ட நீதமன்றத்துக்கு வழங்கப்படவுள்ளது என்பதோடு அதற்கு ஒரு துணை இணைப்பாக போதிய வலுவுட்டல் மற்றும் தண்டனைக்குரிய தத்துவங்களை மாவட்ட நீதிமன்றத்துக்கு வழங்கப்படவுள்ளது. |
| தற்போதைய நிலைமை | தலைவரின் வழிகாட்டல்களின் கீழ், மேலே சொல்லப்பட்ட முடிவு செய்யப்பட்ட வரைவை பின் தொடர்வதற்கு 13.09.2018 ஆம் திகதியுடைய கடிதத்தின் மூலம் நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. |
| **4) சிறுவர்கள் இறப்பு தொடர்பில் இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்தல்** | |
| பின்னணி | *கவனயீனம் அல்லது திடீர் விபத்தொன்றின் காரணமாக பராயமடையாத பிள்ளை ஒருவரின் மரணம், ஏற்பட்டபோது. அதன் பிரதிபலனாக அப்பிள்ளையின் பெற்றோருக்கு ஏற்படுகின்ற உள மற்றும் மனவேதனைக்காக வழக்கொன்றை தொடுப்பதனால் நட்டஈடுசேதம் அறவீடுசெய்துகொள்வதற்கு. அப்பெற்றோர்களுக்கு முடியாமை உரோமடச்சுசட்டத்தின் நிலைப்பாடாகியுள்ளது.*<br><br>*மேற்கூறிய நிலைப்பாடு தற்காலத்தில் நீதியின் கோட்பாடுகளுக்கு இசைவாக இல்லை. மூன்றாம் திறத்தவரின் கவனயீனம் காரணமாக பராயமடையாதபிள்ளை ஒருவரின் மரணம் நடைபெற்றபோது அதன்பிரதிபலனாக பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற உளமற்றும் மனவேதனைக்காக நட்டஈடுசேதம் அறவீடுசெய்து கொள்வதற்கு அப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு முடிந்ததாக இருக்கவேண்டும். மூன்றாம் திறத்தவரின் கவனயீனம்பராயமடையாத பிள்ளை ஒருவரின் மரணத்திற்கு காரணமாகும் போது, அப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற மனவேதனைக்காகவும்,அப்பிள்ளையின் எதிர்கால உழைப்பு இழப்புக்காகவும் நட்டஈடுசேதம் அறவீடுசெய்து கொள்வதற்கு அப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு முடிந்ததாக இருக்கவேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்காக சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கான திருத்தம்.* |
| தற்போதைய நிலைமை | தங்கி வாழ்பவர் ஒருவரின் இறப்புக்கான இழப்புக்களைப் பெற்றுக் கொள்தல் மீதான இறுதி வரைவுச் சட்டத்தை 29.06.2018 ஆம் திகதி சட்டவரைஞர் திணைக்களத்தால் நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| **5) தடை எச்சரிக்கை** | |
| பின்னணி | • தடை எச்சரிக்கை சட்டத்தரணியின் சான்றிதழ் ஒன்றின மூலம் கோப்பிடப்பட வேண்டும் என்பதோடு அது நல்லெண்ண உரிமைக் கோரிக்கையென அவர் திருப்திப்படவும் வேண்டும்.<br>• அத்தகைய சான்றிதழ் ஒன்றை சட்டத்தரணி உதாசீனமாக சமர்ப்பித்தால், அதற்கான இழப்புக்களைச் செலுத்துவதற்கான பொறுப்பை அவரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.<br>• கடமை தொடர்பான உதாசீனம் தொடர்பில் உயர் நீதிமன்றத்துக்கு முறையிடப்பட முடியும். |
| தற்போதைய நிலைமை | சட்ட ஆணைக்குழுவின் கலந்துரையாடலுக்காக, 1923 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஆவணங்கள் கட்டளை சட்டத்தின் பதிவு தடை எச்சரிக்கை பிரிவு 32, மீது ஒரு வரைவு ஆய்வுப் பத்திரம் ஒன்றை திரு ஜீ.ஜீ. அருள்பிரகாசம் அவர்கள் முன் வைத்துள்ளார். |
| **6) பாலியல் இலஞ்ச சட்டத்துக்கான திருத்தம்** | |
| பின்னணி | அதிகாரமுடைய அல்லது தத்துவமுடைய பதவி ஒன்றில் உள்ள எவரேனும் ஆள், அவர் இந்த அதிகாரத்தைப் பிரயோகிப்பதில், தொழில், ஒரு பதவி உயர்வு, ஒரு உரிமை, ஒரு சிறப்புரிமை அல்லது ஏனைய வேறு சேவை, விருப்பு அல்லது ஏதேனும் வகையிலான அனுகூலத்தை வழங்குவதற்காக நிபந்தனை ஒன்றாக பாலியல் உதவிகளை வழங்குதல் அல்லது ஏற்றுக் கொள்தல் மூலம் இந்த |

| | |
|---|---|
| | சட்டத்தின் கீழ் குற்றமொன்றை செய்தததாகக் கருதப்படும் என்பதோடு அதற்கு ரூபாய் தொகைக்கு மேற்படாத குற்றப் பணத்தை விதித்தல் அல்லது மூன்று வருடங்களுக்கு மேற்டாத சிறைத்தண்டனை அல்லது இவை இரண்டு தண்டனையையும் விதிப்பதற்கு குற்றவாளியாகக் கருதப்படும்.<br>மேலே சொல்லப்பட்ட … பிரிவின் குறிக்கோள்களுக்காக ஒரு ''பாலியல் உதவி'' என்பது<br>அ) பாலியல் உறவு, அல்லது<br>ஆ) பாலியல் உறவாக அமையாத ஏதேனும் செயலை, ஆனால் அது ஒரு பாலியல் தன்மையின் உடலியல் ரீதியான, வாய்மொழிமூல அல்லது வாய்மொழியல்லாத முறையில் அமையக் கூடிய அல்லது உண்டாக்கக் கூடிய விடயம் ஆக இருக்கும். |
| தற்போதைய நிலைமை | திரு.சஞ்ஜீவ ஜயவர்த்தன ஜனாதிபதி சட்டத்தரணி அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆய்வுப் பத்திரம் சபைக்கு சமர்ப்பிக்கபபட்டு கலந்துரையாடப்பட்டது. பாலியல் தொல்லை தொடர்புடைய சட்டத்துடன் முன்மொழியபபட்ட திருத்தமானது பகுதியளவில் ஒத்திருக்கின்றதா என்பது தொடர்பில் பேராசிரியர் கெமெனா குணரத்ன அவர்கள் கருத்துரை வழங்கினார்.<br>மேலுள்ள விடயம் தொடர்பில் ஆய்வு செய்வதற்கு துணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. |
| 07) **மத்தியஸ்த சபை சட்டத்துக்கான திருத்தம்** | |
| பின்னணி | இவ்வகைப்படுத்தல்களைக் குறித்துரைக்கும்போது அவ் வழக்குகளை மத்தியஸ்தம் செய்தல் சம்பந்தமாக அமைச்சரால் வர்த்மானியில் வெளியிடப்பட்டு கட்டளை யிடப்படும். |
| தற்போதைய நிலைமை | மேலுள்ள தலைப்பு தொடர்பில் ஆய்வு செய்து அவர்களின் கருத்துக்களை சமர்ப்பிப்பதற்கு திரு. திசத் விஜயகுணவர்த்தன தலைவர் அவர்களோடு மற்றும் திரு. நவீன் மாரபன அவர்களும் உள்ளடங்கிய ஒரு துணைக்குழுவை ஆணைக் குழு நியமித்தது. |
| 08) **பொது நம்பிக்கை கட்டளைகள் சட்டத்துக்கான திருத்தம்** | |
| பின்னணி | முன்மொழியப்பட்ட நியதிச் சட்ட ஏற்பாடுகள் வேறுவகையில் நடைமுறையில் கட்டடற்ற பொது நம்பிக்கையின் தத்துவங்கள் மீது விதிக்கப்படுகின்ற சரிபார்த்தல்கள் மற்றும் நிலுவைகள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றமையால், அவற்றை இலங்கை நியதிச் சட்டத்துக்கு சேர்த்துக் கொள்தல் மற்றும் கூட்டிணைப்புச் செய்தல். |
| தற்போதைய நிலைமை | திரு.சஞ்ஜீவ ஜயவர்த்தன ஜனாதிபதி சட்டத்தரணி அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆய்வுப் பத்திரம் சபைக்கு சமர்ப்பிக்கபபட்டு கலந்துரையாடப்பட்டது.<br>உள்நாட்டு சடடத்துடன் ஒப்பிட்டு சிங்கப்பூர் நாட்டின் சட்டத்தில் உளளடங்கியுள்ள நேர் அம்சங்களை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.<br>இலங்கையில் பொது நம்பிக்கையின் கடமைகள் மற்றும் குறிக்கோள்களை மேலும் ஆய்வு செய்வதற்கு ஆணைக்குழு உடன்பட்டது என்பதோடு உள்நநாட்டு சட்டத்தில் மேலே சொல்லப்பட்ட அம்சங்களை கூட்டிணைப்புச் செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. |
| 09) **வணிக மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம்** | |
| பின்னணி | வர்த்தக பிணக்கை விசாரணை செய்வதற்காக ஏற்கனவே உள்ள நிதியியல் பெறுமதி 5 மில்லியன் தொகையை 25 மில்லியனாக திருத்துவதற்கு முன்மொழியப்பட்டது. |
| தற்போதைய நிலைமை | 27.09.2018 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மேலுள்ள பரிந்துரை தொடர்பில் சட்ட ஆணைக் குழுவின் தலைவர் உத்தியோக பூர்வமாக நீதி அமச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார். |
| 10) **கைது செய்தல் மற்றும் தடுப்புக் காவலில் வைத்தல் தொடர்பிலான சட்டம்** | |
| பின்னணி | பொலிஸ் உத்தியோகத்தர்களால் கைது செய்வதற்கான நியதிச்சட்ட தத்துவத்துக்கான திருத்தப்பட்ட நடத்தை முறை கோவை. |
| தற்போதைய நிலைமை | கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. |

### 6.3.3 2018.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கம் (ரூபா. மில்.) | செலவு (ரூபா. மில்.) | 2018-12-31 (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 19.34 | 13.17 | 68% |
| மூலதன செலவினம் | 2.12 | 1.79 | 84% |
| **மொத்தம்** | **21.47** | **14.96** | **70%** |

## 6.4 அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

**நோக்கு**

நியாயமான சட்டத்தை மதிக்கின்ற சமுதாயத்தைக் கட்டியேழுப்புதல்

**செயற்பணிகள்**

நீதிமன்றங்கள், சட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு சட்ட மருத்துவ, மற்றும் உணவு விஞ்ஞானம் பற்றிய பகுப்பாய்வு, அறிவுரை மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்.

### 6.4.1 செயற்பாடுகள்

இலங்கையிலுள்ள ஒரேயொரு சட்ட ஆய்வுகூடமான அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் உணவு விஞ்ஞானப்பிரிவு, தடயவியல் விஞ்ஞானப்பிரிவு ஆகிய இரு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. உணவு விஞ்ஞானப் பிரிவானது உணவு, மதுபானம், பால் மற்றும் நீர் ஆகிய நான்கு ஆய்வுகூடங்களை உள்ளடக்கியுள்ளது. தடயவியல் விஞ்ஞானப் பிரிவானது எறிபடை தடயவியல் பிரிவு, நீர்ப்பாய தடயவியல் மற்றும் DNA பிரிவு, நச்சு தடயவியல் பிரிவு, வெடிபொருட்கள் மற்றும் தீ புலனாய்வுப் பிரிவு, போதைப் பொருள் தடயவியல் பிரிவு, சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் தடயவியல் பிரிவு, மற்றும் நானாவித தடயவியல் பிரிவு ஆகிய ஏழு துறைகளைக் கொண்ட உப பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அறிவுரைகள் ஆலோசனைகள் மற்றும் விஞ்ஞான சேவைகள் வழங்குவதன் மூலம் இது சேவை வழங்கும் ஒரு திணைக்களமாவதுடன் நீதிமன்றங்கள், பொலிஸ், சுங்கத் திணைக்களம், மதுவரி திணைக்களம், துறைமுகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், சுகாதாரம், பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் இருந்துபெறப்படும் சான்றுப் பொருட்களை விஞ்ஞான பரிசோதனை மற்றும் ஆய்வு செய்து ஆய்வு அறிக்கைகளை வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்க அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற உணவுகள், மதுபானங்கள், பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள் தரக்கட்டுப்பாட்டு அலுவல்களுக்காக பரிசோதனை செய்யப்படுவதுடன் இலங்கை சுங்கத்தால் ஆற்றுப்படுத்தப்படுகின்ற மாதிரிகள் தரம் மற்றும் சுங்கவரி வகைப்படுத்தலுக்காக பரிசோதனை செய்யப்படுகின்றன. மேலும் நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தேகத்திற்குரிய ஆவணங்களை பரிசோதனை செய்து அறிக்கையிடுதலும் இத் திணைக்களத்தின் மூலம் செய்யப்படுகின்றது.

பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படும் சான்றுப் பொருட்கள் அல்லது மாதிரிகள், உணவு மற்றும் மருந்துகள் சட்டம், தேசிய சுற்றாடல் சட்டம், மதுவரிக் கட்டளைச் சட்டம், புகையிலை மற்றும் மதுபான தேசிய அதிகாரசபை சட்டம், ஒப்பனைப் பொருட்கள் அவுடதங்கள் மற்றும் சாதனங்கள் சட்டம், பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம், சுடுகலன் கட்டளைச் சட்டம், விசம், அபின் மற்றும் அபாயகர ஔடத சட்டம், வெடிபொருள் சட்டம், தீங்கு விளைவிக்கும் ஆயுத சட்டம், மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம், குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, சான்றுகள் கட்டளைச்சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்களின் கீழ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை வழங்குதல் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக பிற அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவு பெறுகின்ற நிறுவனங்களிற்கு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் விஞ்ஞான மதியுரைஞராகவும் இத்திணைக்களம் செயலாற்றுகிறது. விசேஷமாக, இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு தரத்தை உருவாக்குவதில் இந்நிபுணர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். இந்நிபுணர்கள் பாதுகாப்பு அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு உதவிபுரிகின்றனர்.

#### 6.4.2 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்

| பகுதி | 2018.01.01 இல் உள்ள வழக்குகள் | 2018.12.31 வரை பெறப்பட்ட வழக்குகள் | 2018.12.31 வரை அறிக்கையிடப்பட்ட வழக்குகள் | 2018.12.31 இல் அறிக்கையிடப்படாது உள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|
| போதை வஸ்துக்களும் பிற மருந்துகளும் | 1,484 | 14,643 | 11,242 | 4,885 |
| சுடுபடைக்கலன்களும் யுத்த தளபாடங்களும் | 280 | 412 | 434 | 258 |
| வெடிபொருளும் தீப்பிடித்தலும் | 153 | 464 | 497 | 120 |
| நச்சுப்பொருட்கள் | 1,306 | 2,714 | 2,371 | 1,649 |
| இரத்தம் மற்றும் பிற சரீர திரவங்கள் | 1,999 | 1,751 | 1,052 | 2,698 |
| ஆட்சேபனைக்குரிய பத்திரங்கள் – எச். | 467 | 880 | 853 | 494 |
| ஏச் டி | 211 | 708 | 327 | 592 |
| பல்வேறு சட்ட மருத்துவப் பொருட்கள் | 204 | 462 | 362 | 304 |
| குடி வகைகள் | 20 | 5,483 | 5,417 | 86 |
| பல்வேறு குடிவகை மற்றும் புகையிலை | 29 | 3,118 | 3,047 | 100 |
| உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள் | 13 | 9,016 | 8,759 | 270 |
| பல்வேறு- உணவு வகைகள் | 02 | 2,515 | 2,286 | 231 |
| **மொத்தம்** | **6,168** | **42,166** | **36,647** | **11,687** |

### 6.4.3 பிற நடவடிக்கை

| **நடவடிக்கை** | **எண்ணிக்கை** |
|---|---|
| நீதிமன்றங்களில் வாய்மூல சாட்சியங்கள் அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் | 416 |
| குற்றம் நடைபெற்ற இடங்களுக்கு சமூகமளித்த சந்தர்ப்பங்கள் | 194 |
| நச்சு தடயவியல் பிரிவின் அலுவலர்கள் பங்குபற்றிய விசேட VIP உணவுப் பரிசோதனை | 33(அலுவலர் நாட்கள்) |
| விரிவுரைகள் | 47 நாட்கள் |
| தொழில் நுட்ப குழுக்கூட்டங்களில் பங்கேற்றல் | 06 நாட்கள் |
| வெளிநாட்டு பயிற்சி | 108 (அலுவலர் நாட்கள்) |
| உள்நாட்டு பயிற்சி | 211 (அலுவலர் நாட்கள்) |
| வெளிநாட்டில் முதுகலைமாணி கல்வி கற்ற அலுவலர்கள் | 04 |
| கலாநிதி பட்டம் | 01 |

### 6.4.4 2018.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ற்கான ஒதுக்கம் (ரூபா மில்.) | 2018.12.31 ற்கான செலவு (ரூபா மில்.) | 31.12.2018 நிதிரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 336.96 | 319.67 | **94%** |
| மூலதன செலவினம் | 98.74 | 49.40 | 50% |
| **மொத்தம்** | **435.70** | **369.07** | **85%** |

## 6.5 பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

**நோக்கு**

அர்ப்பணிப்பு நோக்குள்ள ஸ்தாபகர்களால் பொது நம்பிக்கை பொறுப்பாளரில் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தி பயனாளிகளின் நோக்கை எய்தல்

**குறிக்கோள்**

திணைக்களத்திடம் உள்ள வளங்கள் மற்றும் இயலுமைக்கு அமைய உயர் சேவையை வழங்கக் கூடிய வகையில் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படும் மற்றும் அனுப்பப்படும் பொறுப்புகள் இறந்த நபர்களின் பூதல் பயனாளிகள் உள்ளடங்கலாக உரிய சகல தரப்பினருக்கும் திருப்திகொள்ளும் விதத்தில் நிர்வகித்தல் ஆகும்.

### 6.5.1 அறிமுகம்

#### 6.5.1.1 சட்டப் பின்னணி

1931 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க 1938ம் ஆண்டின் 59 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினாலும் 1973ம் ஆண்டின் 44 ஆம் இலக்க மற்றும் 1975 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டத்தாலும் 1983ம் ஆண்டின் 41 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1922ம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கை பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் மூலம் இலங்கையினுள் பொது நம்பிக்கையாளர் பதவியை சுயாதீனமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு பொது முத்திரையுடன் தாபிக்கப்பட்டுள்ளதோடு அப் பதவியின் பெயரால் வழக்கு தொடுக்கவும் வழக்காடுவதற்கும் சட்ட வல்லமை உள்ளதாகும்.

நம்பிக்கை சம்பந்தமாக பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச்சட்டத்திற்கு மேலதிகமாக 1918 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, 1934 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலமும் 1968 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மற்றும் 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1917 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் அமுலுக்கு வருவதுடன் அவ் அதிகாரச்சட்டம் நிசப்தமாயிருக்கும் சந்தர்ப்பத்தில் ஆங்கிலச் சட்டத்தில் உள்ள ஒப்புரவு (Law of Equity) உரித்தானதாகும்.

#### 6.5.1.2 பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் அதிகாரமும் கடமைகளும்

பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டம், குடியியல் நடவடிக்கை முறை சட்டக் கோவை, நீதிமன்ற அமைப்பு முறை சட்டம் மற்றும் வேறு எழுத்து மூல விதிகளின் படி கீழ் காணப்படும் கடமைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1. சாதாரண நம்பிக்கைப் பொறுப்பாளர்,
2. பாதுகாப்பு வழங்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது பாதுகாப்பான நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்படுதல்.
3. சொத்து திரட்டல் கட்டளையின் கீழ் சொத்து திரட்டல்
4. பராயமடையாத ஒருவரின் சொத்து நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது உதவு நண்பனாக (பாதுகாப்பு முகாமையாளராக) செயற்படுதல். (மாவட்ட நீதிமன்றினால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில்)
5. மனவளர்ச்சி குன்றிய நபரின் சொத்து முகாமையாளராக செயற்படுதல் (மாவட்ட நீதிமன்றினால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில்)
6. அசையா சொத்தின் ஒப்பந்த முகாமையாளராக செயற்படுதல்
   (பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்படும் போது அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்ட “நம்பிக்கைச் சபையால் காலத்திற்கு காலம் எடுக்கப்படும் தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு மட்டும் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளர் பிணிக்கப்படுகின்றார்.)
7. வெளிநாட்டிலுள்ள இலங்கையர் ஒருவருக்கு அற்றோனிதத்துவகாரராக அவருக்கு கொடுக்கப்பட வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ள அல்லது செலுத்த நடவடிக்கை எடுத்தல்
8. குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளின் கீழ் நீதிமன்றினால் சொத்து சம்பந்தமாகவும் மற்றும் வேறு விடயம் சம்பந்தமாகவும் செயற்படுதல்
9. நீதிமன்றம் கையேற்கும் சந்தர்ப்பத்தில் மரணசாதனமற்ற நபரின் நிருவாகியாக செயற்படுதல்
10. நீதிமன்ற அமைப்பு முறை சட்டத்தின் கீழ் சொத்து சேகரிப்பாளராக செயற்படுத்தல்.

11. குற்றம் புரிந்தமைக்காக சிறையிலிடப்பட்டுள்ளவரின் சொத்துக்கு முகாமையாளராக செயற்படுதல்.
12. விகாரைக்குரிய சொத்துக்களின் பொறுப்பாளராக செயற்படுதல்.

**6.5.1.3 <u>மேற்குறித்த கடமைகளை விட வேறு விடயங்களில் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளரின் தலையீடுகள்</u>**

பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் பின் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களுக்கு அமையவும் வேறு எழுத்துமூல விதிகளுக்கு அமையவும் வழங்கப்பட்டுள்ள வேறு கடமைகள்

- 1988 ஆம் ஆண்டின் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச்சட்டத்தின் 10 (அ) பிரிவிற்கு அமைய பணிபுரிவதற்காக வெளிநாட்டில் இருப்போர், வெளிநாட்டில் இருக்கும் போது மரணித்தால் அவர்களுக்காக வழங்கப்படும் நட்டஈடு தங்கிவாழ்பவர்களுக்கும் அல்லது சட்டப்படியான வாரிசுகளுக்கிடையே பங்கீடு செய்யும் செயற்பாட்டை சரியான முறையில் பிழையின்றி நடாத்துவது மற்றும் அக் கடமையை இலகுபடுத்தும் முகமாக சம்பந்தப்பட்ட பணிபுரிபவர்களை பதிவு செய்தல்.
- 1944 ம் ஆண்டின் 42 ஆம் இலக்க விகாரையின் காணி (நட்டஈடு) கட்டளைச் சட்டத்தை செயற்படுத்தல்.
- 1981 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பௌத்த விகாரை தேவாலகம சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடமைகளை புரிதல்
- 1973 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க ஐக்கிய புதினப் பத்திரிகை நிறுவனத்தில் உள்ள பங்குகளுக்கு அரசின் சார்பில் நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்படுதல்.

**6.5.1.4 பொதுநம்பிக்கையாளரது சேவைகள்**

பொது நம்பிக்கையாளர் நீதிமன்றத்தின் வழிநடத்துதலுடன் அல்லது தீர்மானத்துடன் அல்லது நிதியங்கள் மற்றும் இறுதி விருப்பு ஆவணங்களின் நோக்கங்களுக்கு அமைவாக பொதுமக்களுக்க சேவை செய்வார்.

- கல்விகளில் நிதி கஷ்டங்களை எதிர்கொள்ளும் திறமை வாய்ந்த பிள்ளைகளுக்கு புலமைபரிசுகள் வழங்கல்
- அத்தியாவசிய மற்றும் மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படும் நோயாளிகள் மருதுவ சிகிச்சைக்கான ஏற்பாடுகள்
- நிதியங்கள் மற்றும் அல்லது இரதவிருப்பு ஆவணம் எனபனவற்றின் நோக்கங்களின்படி சமயம் சார்ந்த இடங்களை மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் விருத்தி செய்யவும் நிதி உதவி வழங்குதல்.
- தேவைப்படும் நபர்கள் மற்றும் அல்லது நிறுவனங்களுக்கு நன்கொடை வழங்குதல்
- சமய நடவடிக்கைகள் மற்றும் பலவித காரணங்களுக்காக உதவியை எதிர்பார்த்து உள்ள நபர்களுக்கு நன்கொடைகள் வழங்குதல்
- பண்ணை சொத்துக்கள் அல்லது நம்பிக்கை நிதி முகாமைத்துவம்
- வரையறுக்கப்பட்ட ஐக்கிய புதினப் பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு இருவரையும் மற்றும் தலைவரையும் நியமித்தல்
- பிறநாட்டு நஷ்டஈடுகளை வழங்குதல்
- பௌத்த ஆலயங்களுக்கு நஷ்டஈட்டை பங்கிடுதல்
- அரச நிறுவனமாக சம்பாதித்த வருமானத்தில் சதவிகிதத்தை அரச திறைசேரிக்கு வழங்குதல்

**6.5.2 நம்பிக்கைப் பொறுப்பு மரணசொத்தின் எண்ணிக்கை**

| ஆண்டு | அமுல்படுத்தப்படுகின்ற நம்பிக்கை பொறுப்புகளின் எண்ணிக்கை | அமுல் படுத்தப்படுகின்ற மரணசாதனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2015 | 1,044 | 137 |
| 2016 | 1,067 | 140 |
| 2017 | 1,081 | 141 |
| 2018 | 1,097 | 143 |

### 6.5.3 பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ள நிதியின் அளவு

பொது நம்பிக்கைப் பொறுப்பு திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள மற்றும் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணசாதனங்களுக்குத் தொடர்புடைய பொது நம்பிக்கை பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும்.

| ஆண்டு | தொகை (ரூபா) |
|---|---|
| 2015 | 10,188,334.08 |
| 2016 | 14,986,797.37 |
| 2017 | 11,209,507.45 |
| 2018 | 16,609,742.32 |

### 6.5.4 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல்

| செயற்பாடு | மதிப்பிடப்பட்ட தொகை - 2018 | | உள்ளபடியான தொகை – 31/12/2018 | |
|---|---|---|---|---|
| | நலன்பெறுனர்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா. மில் | நலன்பெறுனர்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா. மில |
| மாணவர் உதவிக் கொடுப்பனவு | 687 | 6.20 | 479 | 4.95 |
| மருத்துவ உதவிக் கொடுப்பனவு | 238 | 9.09 | 160 | 5.67 |
| மதத் தலங்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்கான கொடுப்பனவு | 493 | 26.32 | 279 | 31.00 |
| புண்ணிய உதவிக் கொடுப்பனவு | 267 | 8.50 | 55 | 2.78 |
| உதவி அற்றோருக்கான உதவிக் கொடுப்பனவு | 211 | 4.02 | 155 | 2.46 |
| பொறுப்பு நோக்கத்தின் படி ஏனைய கொடுப்பனவுகள் | 137 | 15.67 | 131 | 16.63 |
| விகாரை நட்டஈடு விடுவிப்பு | - | - | 49 | 132.79 |
| வெளிநாட்டு நட்டஈடு விடுவிப்பு | - | - | 165 | 322.45 |
| பொறுப்பு / பூதல் ஆதன முகாமைத்துவம் (தோட்ட பிரிவு/ தேறிய இலாபம்) | 12 | 14.28 | 11 | 2.61 |
| மொத்தம் | **2,045** | **84.08** | **1,484** | **521.34** |

### 6.5.5 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையிலான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | **2018ற்கான ஒதுக்கம் (ரூபா மில்)** | **31.12.2018 ற்கான செலவு (ரூபா மில்)** | **2018.12.31** நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 56.98 | 55.31 | 97% |
| மூலதனச் செலவினம் | 11.05 | 10.98 | 99% |
| **மொத்தம்** | **67.03** | **66.29** | **98%** |

## 6.6 கடன் இணக்க சபை திணைக்களம்

**நோக்கு**

அசையா சொத்து சம்பந்தப்பட்ட கடனை திருப்பி செலுத்துவதற்கு பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு ஒரு நிவாரண ஏற்பாட்டை வழங்குதல்.

**செயற்பணிகள்**

கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீது பெறப்பட்ட கடன்களை குறைந்த வட்டி வீதத்துடன் தவணைமுறையில் செலுத்துவதன்மூலம் பிணையாக வைக்கப்பட்ட விவசாய நிலங்கள், வீடு போன்ற அசையா சொத்துக்களை திரும்பப் பெறுவதற்கு கடன்பட்டோருக்கு சட்டப் பாதுகாப்பையும் உதவியையும் வழங்கல்

**குறிக்கோள்**

அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீதான கடன்களை மீளச் செலுத்துவதன்மீது தீர்வொன்றை எட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உதவுதல்.

### 6.6.1 அறிமுகம்

1941ம் ஆண்டின் 39 ம் இலக்க கடன் இணக்க சபை கட்டளைச்சட்டத்தின் கீழ் இத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இத் திணைக்களமானது காணி, நெல்வயல்கள், பெருந்தோட்டங்கள், வீடுகள் போன்ற அசைவற்ற ஆதனங்களின் உறுதியை நிபந்தனையுடன் பிணைவைத்து பெற்றுக்கொண்ட கடன்களின் மூலமும் சத்தியக்கடதாசி மற்றும் காசோலை போன்ற ஆவணங்களின்மீது பெறப்பட்ட பிணையற்ற கடன்களின் மூலம் ஏற்பட்ட கடன்சுமைக்கு உள்ளான மக்களுக்கு ஏதாவது நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

1999ம் ஆண்டின் 29ம் இலக்க திருத்த சட்டம் கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அறுதியுறுதிகளின் மீது இச்சபை இடையீடு செய்வதற்கு வழிவகுத்து இதன் நிவாரண உதவி நடவடிக்கைகளை மேலும் விரிவடையச் செய்துள்ளது.

இச் சபையின் செயற்பாட்டின் மூலம் கடன் கொடுத்தவர்களால் கடன்பட்டவர்கள் சுரண்டப்படுவதற்கு உள்ள சந்தர்ப்பங்கள் முடக்கப்படுகின்றன. சபையின் தலையாய நோக்கம் இது எனினும் கடன் கொடுத்தவர்களுக்கும் அநீதி ஏற்படுவதற்கு இடமளிக்காது. ஈட்டு உறுதிகளின் மீது மற்றும் நிபந்தனையுடனான அறுதிஉறுதிகளின் மீது வைக்கப்பட்டுள்ள அசைவற்ற ஆதனங்கள் தொடர்பில் கடனாளிக்கு இலகுவானதும் கடன் கொடுத்தவர் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான நிபந்தனைகள் மீது அவ்வாதனங்களை மீட்டுக் கொள்வதற்கு உதவியளித்தல் இச்சபையின் நோக்கமாகிறது.

கடன் இணக்க சபையானது அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஐந்து (5) உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் அவரில் ஒருவர் சபையின் தலைவராக அமைச்சரால் நியமிக்கப்படுவார். சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு எந்தவித கட்டணங்களும் அறவிடப்படுவதில்லை. அத்துடன் இச்சபையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு முத்திரைத் தீர்வை எதுவும் கிடையாது. வர்த்தமானி மற்றும் அறிவித்தல் கட்டணமாக ஒரு சிறிய தொகை மாத்திரமே அறவிடப்படுகிறது. ஆகவே கடன் சுமையால் பாதிக்கப்பட்ட சராசரி நபரொருவருக்கு மிகப்பெரிய சேவையொன்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் சட்டத்தரணிகள் மூலம் தம்மை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியது கட்டாயமில்லாதிருப்பது பொதுமக்களுக்கு ஆறுதலாக உள்ளது.

இச்சபையின் நடைமுறை நீதிமன்ற நடைமுறையிலிருந்து வேறுபட்டது. இச்சபையில் எட்டப்படும் உடன்படிக்கைகள் கட்சிக்காரர்களினது இணக்கத்துடன் *ஏற்படுவதேயன்றி சபையின் பணிப்பின்மூலம் அமுல்படுத்தப்படுவதல்ல.* அவ்வாறாயினும் நியாயமற்ற வட்டிகளை குறைப்பதற்கு சபையினால் முன்வைக்கப்படுகின்ற நியாயமான முன்மொழிவுகளை கடன் கொடுத்தவர்கள் ஏற்றுக்கொள்ளாதுவிடின்

அது தொடர்பாக கட்டளைச் சட்டத்தின் கீழ் கடனாளிக்கு சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கும் சபைக்கு தத்துவங்கள் உள்ளன. அத்துடன் கடன் கொடுத்தவர் இறுதி விசாரணைக்காக வழங்கப்பட்ட அறிவித்தலின் படி விசாரணைக்கு சமூகமளிக்காவிடின் மறுகட்சியின்றி வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் கடனாளிக்கு சான்றிதழ் ஒன்று வழங்கப்படுகின்றது. ஆயினும் அவ்வாறு செய்யப்படுவது பதிவு அஞ்சலில் அல்லது கிராம உத்தியோகத்தர் மூலம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு கடன்கொடுத்தவரிற்கு அறிவித்து கடன் கொடுத்தவர் வேண்டுமென விசாரணைக்கு சமூகமளிப்பதை தவிர்த்துக் கொள்கிறார் என சபை உணருமிடத்து மாத்திரமே இத்தகைய சந்தர்ப்பமொன்றில் அத்தகைய சான்றிதழ் ஒன்றை வழங்குவதனால் ஏற்படும் நன்மை கடனாளியைச் சேரும்.

நீதிமன்றத்தில் அந்த விடயம் சம்பந்தமாக வழக்கு விசாரணை ஒன்று நடைபெறும் சந்தர்ப்பத்தில் இச் சான்றிதழை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால் கடன் செலுத்துவதற்கு அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரை கால அவகாசம் வழங்குவதற்கும் வட்டியை குறைந்த வட்டி விகிதமா க மாற்றுவதற்கும் கடன் இணக்க கட்டளைச்சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### 6.6.2 2018.01.01 தொடக்கம் 2018.12.31வரையான காலப்பகுதிக்கான செயலாற்றுகை

| விபரம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| முன்கொண்டு-வரப்பட்ட விண்ணப்பங்கள் 2018.01.01 | 829 |
| புதிய விண்ணப்பங்கள் | 381 |
| மீளாய்வுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 42 |
| மொத்த விண்ணப்பங்கள் 2018.12.31 | **1,252** |
| தீர்க்கப்பட்ட விண்ணப்பங்கள் | 175 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 193 |
| மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் | 45 |
| சான்றிதழ் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் | 09 |
| மீளப்பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 45 |
| நடவடிக்கை எடுக்கப்பட்டமொத்த விண்ணப்பங்கள் | **467** |
| வருடஇறுதியில் இல் உள்ளவாறான மிகுதி விண்ணப்பங்கள் | **785** |

### 6.6.3 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ஒதுக்கம் (ரூபா மில்) | 31.12.2018 செலவு (ரூபா மில்) | (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 27.72 | 14.25 | 51% |
| மூலதன செலவினம் | 0.85 | 0.61 | 72% |
| **மொத்தம்** | **28.57** | **14.86** | **52%** |

## 6.7 சிறைச்சாலைகள் திணைக்களம்

### 6.7.1 அறிமுகம்

1832 ஆண்டில் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சி காலத்தில் கெமரன் என்ற ஆளுனரால் அறிமுகம் செய்யப்பட்ட நீதி மறுசீரமைப்புகளின் காரணமாக சிறைச்சாலைகள் தோற்றம் பெற்றன. அதற்கிணங்க 1844 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்ட மற்றும் நீதிக் கட்டளைச் சட்டத்தின் படி பிரித்தானியா பொஸ்டல் முறைக்கு நேரொத்ததாக வெலிக்கடை சிறைச்சாலை கட்டியெழுப்பப்பட்டது. அதன் பின்னர், 1877 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சிறைச்சாலைகள் சட்டத்திற்கமைவாக 1905 ஆம் ஆண்டு யூலை 16 ஆம் திகதி தொடக்கம் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஒருவரின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற புறம்பானதொரு திணைக்களமாக ஒழுங்கு விதிமுறைப்படுத்தப்பட்டது. சமூக விரிவாக்கத்துடன் இச் சேவையின் தேவை மேலும் அதிகரித்தது. அதன் பிரதிபலனாக 1875 இல் இங்கிலாந்து பீன் பீல்ட் சிறைச்சாலை முறைக்கு நேரொத்ததாக போகம்பரை சிறைச்சாலை நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாறு விரிவடைந்த சிறைச்சாலை முறைமை தற்கால சமூக சிக்கல்களுக்குள் மிக முக்கியத்துவமும் அத்தியவசியமும் கொண்ட நிறுவனமாக மாற்றமடைந்துள்ளது.

இதற்கமைய ஆரம்ப கால யுகத்தில் சிறைக்கைதிகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பவற்றை வழங்கி வந்த சிறைச்சாலைகள் திணைக்களம் தற்காலத்தில் அதற்கு அப்பால் சென்று சிறைக்கைதிகளை மிகவும் சிறப்பாக புனர்வாழ்வளிக்கும் சமூக சீர் திருத்தக் கூடமாக மாறியுள்ளது. இந்தப்பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்காக தீவு முழுவதிலும் பரந்துள்ள 03 சிறைச்சாலைகள் , 19 விளக்க மறியல் சிறைச்சாலைகள், 02 இளம் தவறாளிகளுக்கான சீர்திருத்த நிலையங்கள், 02 திறந்த வேலை முகாம்கள், 09 வேலை முகாம்கள், 20 சிறைக் கூடங்கள் மற்றும், ஒரு சிறைச்சாலை பாடசாலை என்பன சிறைச்சாலை அத்தியட்சகர்களின் கண்காணிப்பின் கீழ் நிருவகிக்கப்படுகின்றன. அவற்றில் பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்படுகின்ற சிறைக் கைதிகள் மற்றும் சந்தேக நபர்களின் எண்ணிக்கை சுமார் 23,684 ஆகும்

**நீதிமொழி**

பாதுகாப்பு, பராமரிப்பு, புனர்வாழ்வு

**நோக்கு**

சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து சிறந்த பிரசைகளாகச் சமூகமயப்படுத்தல்.

**பணிக் கூற்று**

பாதுகாப்பு, பராமரிப்பு, புனர்வாழ்வு ஆகிய முக்கிய இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சிறைக்கைதிகள் மற்றும் சிறைச்சாலை அலுவலர்களுக்கிடையே சிறந்த தொடர்பொன்றை ஏற்படுத்தி நேர்க்கணிய சிந்தனையைக் கட்டியெழுப்பி அலுவலர்களின் தொழில் திருப்தியை அதிகரிப்பதன் ஊடாக மற்றும் சிறைக்கைதிகளின் நலன்புரி அலுவல்களை விதிமுறைப்படுத்தி அவர்களின் உழைப்பை நாட்டின் அபிவிருத்திக்குப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்துதல்"

**குறியிலக்குகள்**

i. சிறைக் கைதிகளை முறையாகப் புனர்வாழ்வளிப்பதன் மூலம் சட்டத்தை மதிக்கும் மனித நேயமுடைய நபர்களாக மாற்றி சிறந்ததொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவுதல்.

ii. சிறைச்சாலை அலுவலர்களை ஊக்குவித்தல் மற்றும் திணைக்களக் குழு உணர்வைக் கட்டியெழுப்புதல்.

**பணிகள்**

i. நாட்டினுள் ஏதேனும் நீதிமன்ற அதிகாரத்தின் கீழ் சிறைப்படுத்தப்படுகின்ற மற்றும் விளக்க மறியல் சிறையில் அடைக்கப்படுகின்ற அனைத்துத் தரங்களையும் கொண்ட சிறைக்கைதிகளை வரவேற்றல் மற்றும் சிறைச்சாலை சட்டதிட்டங்களுக்கு இசைவாக அவர்களிட்குப் பாதுகாப்பு வழங்குதல், பராமரித்தல் மற்றும் நீதிமன்றங்களுக்கு சிறைக்கைதிகளை ஆஜர்படுத்தல்.
ii. அனைத்து சிறைச்சாலைகளின் சிறைக் கூடங்கள் மற்றும் சீர்திருத்த நிலையங்கள் தொடர்பான பொதுவான கட்டளைகள் மற்றும் சிறந்த நிருவாகம் என்பவற்றை மேற்கொள்ளல்.
iii. அனைத்து சிறைச்சாலை சிறைக் கூடங்கள் மற்றும் சீர்திருத்த நிலையங்கள் என்பவற்றின் கைதிகளுக்கு தொழிநுட்ப, விவசாய கால்நடை வளர்ப்பு மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்குதல்.
iv. அனைத்து சிறைச்சாலை சிறைக் கூடங்கள் மற்றும் சீர்திருத்த நிலையங்கள் ஆகியவற்றுக்கு நலனோம்பல் வசதிகளை வழங்குதல்
v. சீர்திருத்தத் துறையை வலுவூட்டுவதற்காக தேவையான பயிற்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

**முன்னுரிமைகள்**

சிறைக்கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்குதல், பராமரித்தல் மற்றும் புனர் வாழ்வளித்தல்

### 6.7.2. நிறுவன அமைப்பு

| | |
|---|---|
| 01. சிறைச்சாலைத் தலைமையகம் | |
| 02. ஆராய்ச்சி, சீர்திருத்தப் பயிற்சி நிலையம் | |
| 03. பாதுகாப்பு சிறைச்சாலைகள் 03 | வெலிகடை, புதிய தும்பர, மஹர |
| 04. விளக்க சிறைச்சாலைகள் - 19 | அநுராதபுரம், கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு, காலி, புதிய மகஸின், அங்குணகொலபெலஸ்ஸ, பதுளை, மாத்தறை, மட்டக்களப்பு, கேகாலை, திருகோணமலை, யாழ்ப்பாணம், குருவிட்ட, பூஸா, மொனராகலை, பொலனறுவை, வாரியபொல, வவுனியா |
| 05. வேலை முகாம்கள் 09 | ஹோமாகம, மீதிரிகல, வீரவில, அநுராதபுரம், குருவிட்ட, ஹுங்கிலிபொல, கந்தெவத்த, துங்கம, அம்பேபுஸ்ஸ |
| 06. தி.வே. முகாம்கள் - 02 | பல்லேகெலே, அநுராதபுரம் |
| 07. இளம் தவறாளர்களின் சீர்திருத்த நிலையங்கள் - 02 | பல்லாஞ்சேனை, தல்தென |
| 08. சிறைச்சாலைக் கல்லூரி | வட்டரெக்க |
| 09. சிறைக்கூடங்கள் - 20 | அம்பாறை, அவிசாவளை, பலாங்கொட, பலபிட்டிய, சிலாபம், எல்பிட்டிய, எம்பிலிபிட்டிய, கம்பஹா, கம்பளை, அம்பாந்தோட்டை, குளியாப்பிட்டிய, குருநாகல், மகவ, மன்னார், மாத்தளை, நுவரெலியா, கல்முனை, பாணந்துறை, ஹட்டன், புத்தளம் |

### 6.7.3 2018 .01.01. ஆம் திகதி தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரை சிறைக்கைதிகள் தொடர்பான நிருவாகத் தகவல்கள்

| சிறைக்கைதிகள் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| நீதி மன்றங்கள் மூலம் சிறையில் அடைக்கப்பட்ட சிறைக்கைதிகள் எண்ணிக்கை | 24117 | 517 | 24634 |
| நீதி மன்றங்கள் மூலம் சிறையில் அடைக்கப்பட்ட சந்தேக நபர்கள் எண்ணிக்கை | 99139 | 5180 | 104319 |

| விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆயுள் தண்டனை சிறைக் கைதிகள். | 504 | 30 | 534 |
| ஆயுள் தண்டனை சிறைக் கைதிகள்.(மேன் முறையீடு) | 107 | 17 | 124 |
| மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறைக் கைதிகளின் எண்ணிக்கை | 433 | 05 | 438 |
| மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறைக் கைதிகளின் எண்ணிக்கை (மேன் முறையீடு) | 788 | 36 | 824 |
| வெளிநாட்டு சிறைக்கைதிகள் எண்ணிக்கை | 85 | 15 | 100 |
| வெளிநாட்டு சந்தேக கைதிகள் எண்ணிக்கை | 186 | 18 | 204 |
| பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை | 32 | 01 | 33 |
| பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகக்கைதிகளின் எண்ணிக்கை | 59 | 01 | 60 |
| பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் (மேன் முறையீடு) | 06 | 01 | 07 |
| கட்டுக்காப்பில் (சிறையில்) உள்ள போது மரணமடைந்த சிறைக்கைதிகள் எண்ணிக்கை | 28 | - | 28 |
| கட்டுக்காப்பில் (சிறையில்) உள்ள போது மரணமடைந்த ம.த.வி சிறைக்கைதிகள் எண்ணிக்கை | 03 | | 03 |
| கட்டுக்காப்பில் உள்ள போது மரணமடைந்த ஆயுள் சிறைக்கைதிகள் எண்ணிக்கை | 05 | 03 | 08 |
| கட்டுக்காப்பில் உள்ள போது மரணமடைந்த சந்தேக நபர்களின் எண்ணிக்கை | 55 | 04 | 59 |

- கட்டுக் காப்பிலிருந்து தப்பியோடிய சி.கை.எண்ணிக்கை - 107
- கட்டுக் காப்பிலிருந்து தப்பியோடிய ச.கை.எண்ணிக்கை - 46
- மீளக் கைது செய்த எண்ணிக்கை – 81

| விடுதலை செய்யப்பட்டவர்கள் | எண்ணிக்கை |
|---|---|
| சிறைச்சாலை பொது மன்னிப்பு | 6,005 |

### 6.7.4 அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்- 2018.01.01 – 2018.12.31

| செலவு விடய இல | மொத்தச் செலவு மதிப்பீடு ( மில். ரூபா) | 2018.12.31 திகதிக்கு திரண்ட செலவு ( மி.ரூபா) | 2018 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ( மி.ரூபா) | 2018.12.31 செலவு (மி.ரூபா) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| பல்லேகல சிறைச்சாலை நிர்மாணம் | 4,363 | 1,537 | 273 | 100 | 99% |
| யாழ்ப்பாண சிறைச்சாலைக் கட்டிடத் தொகுதி (II ஆம் கட்டம்) | 1,137 | 786 | 288 | 144 | 82% |
| தங்காலை அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை | 4,996 | 4,566 | 110 | 30 | 98% |
| மன்னார் சிறைச்சாலை சிறைக்கூடம் நிர்மாணம் | 43 | 0.00 | 26 | தொல்பொருட்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அக் காணியை வழங்க முடியாதென அறிவித்துள்ளார் | |

### 6.7.5 மனித வளங்கள் திறன் விருத்தி (செலவு விடய இலக்கம் - 2401)

| கருத்திட்டம் | 2018 வருடத்திற்கான ஒதுக்கீடு ( ரூபா மில்) | 2018.12.31 ஆம் திகதிக்கு செலவு ( ரூபா மில்) | பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை | செலவு ஒதுக்கீடுகளின் % வீதமாக |
|---|---|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி | 4.0 | 3.0 | 1042 | 76% |
| வெளிநாட்டுப் பயிற்சி | 2.0 | 1.9 | 19 | 99% |
| மொத்தம் | 6.0 | 4.9 | 1061 | 83% |

### 6.7.6 சிறைக்கைதிகள் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (செலவு விடய இலக்கம் - 2509)

| 2018 வருடத்திற்கான ஒதுக்கீடு (ரூபா மில்) | 2018.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரூபா மில்) | நிறைவு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | செலவு ஒதுக்கீடுகளின் % வீதமாக |
|---|---|---|---|
| 3.5 | 3.44 | 385 | 98.17% |

### 6.7.7 சிறைச்சாலைத் தகவல் முகாமைத்துவ முறைமை (செலவு விடயம் - 2016)

| 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூபா மில்) | 2018.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரூபா மில்) | செலவு ஒதுக்கீடுகளின் % ஆக |
|---|---|---|
| 35.50 | 31.36 | 88.35% |

- 11 சிறைச்சாலை நிறுவனங்களை வலையமைப்புச் செய்தல் அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- இலங்கை அரச வலையமைப்பு (LGN) இணைப்பு மூலம் சிறைச்சாலைத் தகவல் முகாமைத்துவ முறைமையில் சிறைக் கைதிகளைப் பதிதல் அலுவல்களை ஏனைய சிறைச்சாலை நிறுவனங்களில் ஆரம்பிப்பதற்குத் தேவையான அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 6.7.8 கைத்தொழில் மற்றும் விவசாய அலுவல்கள்

| 2018 குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடு (மில்.ரூபா) | 2018.12.31 ஆம் திகதிக்கு செலவு (மில்.ரூபா) | 2018.12.31 ஆம் திகதிக்கு வருமானம் (மில்.ரூபா) |
|---|---|---|
| 100 | 86 | 155.7 |

### 6.7.9 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றுகை

நிதி ஒழுங்கு விதிகளுக்கு இசைவாக சீராகவும், சரியாகவும் நிதியைக் கையாளுதல் தொடர்பாக மேற்பார்வை செய்தல் மற்றும் விசாரணை அலுவல்களை மேற்கொள்ளல் என்பன தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2018 ஆம் வருடத்திற்கான அனுமதிக்கப்பட்ட அமுலாக்கல் திட்டத்திற்கமைவாக 2018.12.31 ஆம் திகதிக்கு காலி, நீர்கொழும்பு, வீரவில, யாழ்ப்பாணம், களுத்துறை, குருவிட்ட, திருக்கோணமலை மற்றும் தும்பர, பல்லேகல, தலுபொத்த, வெலிக்கடை, பதுளை, கேகாலை ஆகிய சிறைச்சாலை நிறுவனங்கள் பரீட்சிக்கப்பட்டதோடு, உரிய காலப்பகுதியினுள் 03 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

### 6.7.10 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ஒதுக்கம் (ரூபா மில்) | 31.12.2018 செலவு (ரூபா மில்) | (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 5,297.07 | 5,168.48 | 98% |
| மூலதன செலவினம் | 896.10 | 422.93 | 47% |
| **மொத்தம்** | **6,193.17** | **5,591.41** | **90%** |

## 6.8 சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

### 6.8.1 அறிமுகம்

1999 இல் சமுதாயஞ்சார் சீர்திருத்த முறை ஒரு செயற்திட்டமாக நீதி அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டம் உருவாக்கப்பட்டு சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்திட்டம் 3 நீதிவான் நீதிமன்றங்களில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த செயற்திட்டம் 2008 ஆம் ஆண்டு நீதி அமைச்சின் கீழ் திணைக்களமாக மாறியது. இன்று நாடளாவியரீதியில் 125 சுற்றுலா மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் நடைபெறுகின்றது. சிறு தவறாளர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பெற்றுக்கொடுப்பதனால் சிறைச்சாலை சன நெருக்கடியையும் அரசு செலவு செய்யும் பாரிய செலவையும் குறைக்க முடியும். சிறு தவறாளர் சிறைச்சாலையில் அடைக்கப்படுவதால் சிறையிலுள்ள பாரிய குற்றவாளிகளுடன் தொடர்புபடுவதால் அவர்களும் பாரிய குற்றவாளிகளாக மாறி சமூகத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுவார்கள் என கருதப்படுகிறது. இதை மாற்றியமைப்பதற்காக அவர்களை வினைத்திறன் மிக்க புனர்வாழ்வு செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றத்தின் மூலம் சிறு தவறாளர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் எதிர்பார்ப்பது கட்டளையாளர்களை அவர்களின் குற்றம் சார்ந்த செயற்பாடுகளில் இருந்து விடுவித்து நாட்டிற்கு சிறந்த பிரசையாக மாற்றுவதற்கு தேவையான விடயங்களை செய்தல்.

இதற்காக நீதிவான் நீதிமன்றங்களில் உள்ள சமுதாயஞ்சார் சீர்திருத்த பிராந்திய காரியாலயங்களில் உள்ள எமது சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்கள் மூலம் பல்வேறு சீர்திருத்த நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படுகின்றன. கட்டளையாளர்களை சீர்திருத்தம் செய்வதே திணைக்களத்தின் நோக்கம்.

தவறாளர்கள் மற்றுமின்றி தவறுகள் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படும் நபர்களையும் சீர்திருத்தம் செய்வது காலத்தின் தேவையாகும். அந்த வகையில் இந்த விடயங்களை கருத்தில் கொண்டு திணைக்களம் தமது செயற்பாடுகளை பல கோணங்களில் விரிவு படுத்தியுள்ளது. இந்த விடயங்களை மேலும் நேர்த்தியாக செய்ய பிரதேச செயலகங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைப்பு செய்துள்ளோம்.

### 6.8.2. சேவைகள்

**1.** **1999** ஆம் ஆண்டின் **46** ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தை செயல்படுத்துவதன் ஊடாக சிறு குற்றங்களை புரியும் தவறாளர்களை சிறைச்சாலை செல்வதை தவிர்ப்பதும் சமூகத்தில்வைத்தே அவர்களை சீர்செய்வதுமாகும்.

2. சிறு குற்றங்களை புரியும் தவறாளர் ஒருவர் சிறைச்சாலை செல்வதை தடுப்பதும் சிறைச்சாலைகளில் உள்ள சன நெருக்கடியையும் இதனால் அரசுக்கு ஏற்படும் செலவுகளை கட்டுபடுத்துவதும் ஆகும்.

3. சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களின் உழைப்பை தேசத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்துதல்.

4. சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களை உளரீதியாக மற்றும் ஆன்மீகரீதியாக முன்னேற்றத்திற்காக செயல்படுவது.

5. தவறுகள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுபவர்கள் மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பெற்றவர்களின் குடும்பத்தவர்களின் பொருளாதார மற்றும் ஆன்மீகரீதியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்.

### 6.8.3 செயலாற்றுகை 2018.01-01 - 2018.12.31

அ) மாகாண அடிப்படையில் கட்டளையாளர்களின் தொகை

| **மாகாணம்** | **கட்டளையாளர்களின் தொகை** |
|---|---|
| மேல் மாகாணம் | 5,382 |
| மத்திய மாகாணம் | 825 |
| ஊவா மாகாணம் | 495 |
| தெண் மாகாணம் | 1,972 |
| சப்ரகமுவ மாகாணம் | 1,191 |
| கிழக்கு மாகாணம் | 496 |
| வட மேல் மாகாணம் | 890 |
| வட மத்திய மாகாணம் | 214 |
| வட மாகாணம் | 1,318 |
| மொத்தம் | **12,783** |

**ஆ) தவறுகள் அடிப்படையில் சீர்திருத்த கட்டளைள் - (2018.01.01 – 2018.12.31)**

| **தவறுகள்** | **கட்டளை எண்ணிக்கை** |
|---|---|
| ஹெரோயின் | 3,131 |
| கஞ்சா | 1,418 |
| சட்டவிரோத மது | 3,788 |
| பொதுமக்கள் தொல்லை | 907 |
| திருட்டு | 42 |
| ஏமாற்றுதல் | 2 |
| சட்டவிரோத ஆயதம் | 18 |

| | |
|---|---|
| குளவாடப்பட்ட பொருட்களை தன்வசம் வைத்திருத்தல் | 4 |
| சூதாட்டம் | 956 |
| கலகம் | 5 |
| இதர | 2,512 |
| மொத்தம் | **12,783** |

**இ) சீர்திருத்த கட்டளை ச்பந்தமான தகவல்கள் (2018.01.01 முதல் 2018.12.31 வரை)**

| மொத்த கட்டளை | முடிக்கப்பெற்ற கட்டளைகள் | கட்டளை மீறினவர்கள் |
|---|---|---|
| **12,783** | **7,086** | **2,207** |

ஈ) நடாத்தப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சிகள் (2018.01.01 முதல் 2018.12.31 வரை)

| **நிகழ்ச்சிகள்** | **எண்ணிக்கை** |
|---|---|
| உளவள ஆலோசனை | 3,227 |
| ஆன்மீக அபிவிருத்தி | 278 |
| சிரமதானம் | 792 |
| தொழில் பயிற்சி | 293 |
| மருத்துவ சிகிச்சை | 151 |
| மொத்தம் | 4,741 |

### 6.8.4 அபிவிருத்தி செயற்திட்ட முன்னேற்றம் 2018.01.01 முதல் 2018.12.31 வரை

இந்த செயற்திட்டம் வட மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் நீதிவான் நீதிமன்றங்களின் மூலம் கட்டளையாளர்கள் 4053 பேர் சீர்திருத்த கட்டளைபெற்றனர். இந்த கட்டளையாளர்களில் போதைவஸ்து அடிமையான கட்டளையாளர்களாக 3140 பேர் கிடைக்கப் பெற்றனர்.இவர்களில் நேரடியாக (ஹெரோயின், கஞ்சா மற்றும் சட்ட விரோத மதுபானம்) இவர்களில் போதைவஸ்துக்கு கிடைக்கப்பெற்ற மொத்த கட்டளையாளர்கள் 2386 பேர்.

இந்த செயற்திட்டத்தின் அடிப்படையில் போதைவஸ்துக்கு அடிமையான கட்டளையாளர்கள் விசேட போதை ஒழிப்புக்காக உளவள ஆலோசனையின் பின்னர் மருத்துவ சிகிச்சைக்காக அனுப்பட்டனர். அவர்களில் வைத்தியரின் ஆலோசனையின்படி சிலரை தங்கி சிகிச்சை பெறவும் மற்றவர்களை மருந்து கொடுத்தும் அனுப்பபட்டனர். மருத்துவ சிகிச்சை பெற்று வீடு வந்தவர்களின் குடும்ப அபிவிருத்திக்காக மற்றும் அவர்களை கண்காணிப்பதற்காக அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் உதவியை பெறுவது பற்றி பயிற்சிகள் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டது. போதை வஸ்துகளில் இருந்து மீண்டு வந்ததன் பின்னர் நிரந்தர வருமானத்தை பெறுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தி கொடுத்தல் அவர்களுக்கு தேவையான சுய உதவி தொகைகள் மற்றும் தொழில் புரிவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. சுய தொழில் ஒன்றை புரிவதற்கு விருப்பமான தகுதியான திறமைகள் உள்ள சீர்திருத்த கட்டளையாளர்களுக்கு தொழில் ஒன்றை செய்வதற்கு ஆரம்பமாக சுயமாக தொழில் ஒன்றை ஆரம்பம் செய்வதற்கு இந்த செயற்திட்டத்தின் மூலம் ரூபா 50,000.00 பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதனடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்ட முழு தொகை ரூபா மில்லியன் 8.81 ஆகும்.

**இதனடிப்படையில் மாகாணரீதியில் இந்த செயற்திட்டத்தின் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.**

**அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றம் 2018.01.01 முதல் 2018.12.31 வரை**

| செயற் திட்டத்தின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மி | செலவு ரூபா.மி | நிதிரீதியான முன்னேற்றம் (%) | பௌதிக ரீதியான முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| போதைவஸ்துக்களுக்கு அடிமையான கட்டளை யாளர்களை சீர்திருத்தம் செய்யும் செயற்திட்டம். வட மேல் மாகாணம் மற்றும் சப்ரகமுவ மற்றும் தென்மாகாணங்களில்) | 8.82 | 8.81 | 99% | **வட மேல் மாகாணம்**<br>பயனாளிகள் 68.13%<br>பெற்ற கட்டளையாளர்கள் 877<br>சிகிச்சை பூர்த்தி செய்த கட்டளையாளர்475 - பேர் .<br>சீர்திருத்தம் பெற்ற கட்டளையாளர்கள்325- பேர்<br>சுய உதவி ஊக்குவிப்பு தொகை 156<br>சுய உதவி ஊக்குவிப்பு பெற்றுக்கொடுக்கப்பட்ட தொகை ரூபா 2,054,060.00 |
| | | | | **சப்ரகமுவ மாகாணம்**<br>பயனாளிகள் 88.53%<br>பெற்ற கட்டளையாளர்கள் 1,089<br>சிகிச்சை பூர்த்தி செய்த கட்டளையாளர்349 - பேர் .<br>சீர்திருத்தம் பெற்ற கட்டளையாளர்கள்309 - பேர்<br>சுய உதவி ஊக்குவிப்பு தொகை 33<br>சுய உதவி ஊக்குவிப்பு பெற்றுக்கொடுக்கப்பட்ட தொகை ரூ 476,000 |
| | | | | **தென்மாகாணம்**<br>பயனாளிகள 94.90%<br>பெற்ற கட்டளையாளர்கள்1174 பேர்.<br>சிகிச்சை பூர்த்தி செய்த கட்டளையாளர்255 - பேர் .<br>சீர்திருத்தம் பெற்ற கட்டளைய ாளர்கள்249- பேர்<br>சுய உதவி ஊக்குவிப்பு தொகை 80<br>சுய உதவி ஊக்குவிப்பு பெற்றுக்கொடுக்கப்பட்ட தொகை ரூபா 1,475,250.00 |

## 6.8.5 2018 ஆம் வருடத்தில் உத்தியோகத்தர்களின் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கான செலவு 2018.01.01 முதல் 2018.12.31 வரை

| உத்தியோகத்தர் | நிகழ்ச்சி | செலவு செய்த தொகை ரூபா.மி |
|---|---|---|
| உதவி ஆணையாளர், கணக்காளர், சிரேஸ்ட சீர்திருத்த உத்தியோகத்தர், சீர்திருத்த உத்தியோகத்தர்கர் (மாகாணம்), அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர். | **23** | **1.71** |

### 6.8.6 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ஒதுக்கம் (ரூபா மில்) | 31.12.2018 செலவு (ரூபா மில்) | (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 276.96 | 264.49 | 95% |
| மூலதன செலவினம் | 13.5 | 13.27 | 98% |

## 6.9 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு

**நோக்கு**

மத்தியஸ்தத்தினூடாக நல்லிணக்கம் மற்றும் சமுதாய சகவாழ்வு

**பணி**

இலங்கைப் பிரசைகள் சம்பந்தப்பட்ட வினைத்திறனான பிணக்குகளைத் தீர்க்கும் மாற்றுவழி நடைமுறையொன்றை தீவு முழுவதிலும் விஸ்தரித்தல்.

### 6.9.1 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு பற்றிய அறிமுகம்

- 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் மூலம் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
- நீதிமன்றச் செயற்பாட்டை இலகுபடுத்தும் நோக்கத்துடன் நீதிமன்றங்களிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற சிறு பிணக்குகளைத் தீர்க்கும் மாற்றுவழி நடைமுறையொன்றாக மத்தியஸ்த செயற்பாட்டை வலுப்படுத்தல் மத்தியஸ்த சபைகள் தாபிப்பதற்கான தலையாய நோக்கமாகும்.
- மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மத்தியஸ்த செயற்பாட்டின் மூலம் இரு திறத்தவர்கள் அல்லது அதற்கு மேற்பட்டோர்களுக்கிடையே ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்காக மூன்றாம் திறத்தவராக மத்தியஸ்தர்கள் செயலாற்றுகின்றனர்.
- தமது பிணக்குகளைத் தீர்க்கும் வசதியான மற்றும் குறைந்த செலவிலான பொறிமுறையொன்றாக மத்தியஸ்த சபைகள் நடைமுறையின் மீது சமுதாயம் கவனம் செலுத்தப்பட்டதும் ஒவ்வொரு வருடத்திலும் சுமார் மூன்று இலட்சம் அளவிலான பிணக்குகள் மத்தியஸ்த சபைகளிடம் ஆற்றுப்படுத்தப்படுகின்றன.
- மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற பிணக்குகளின் எண்ணிக்கை மற்றும் பிணக்குகளைத் தீர்க்கும் நூற்றுவீதத்தின் மீது மத்தியஸ்த சபைகளின் முன்னேற்றம் அளவிடப்படுகிறது.

### 6.9.2 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் அமைப்பு, தத்துவங்கள் மற்றும் செயற்பாடு

- **அமைப்பு**

  இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களால் மூன்று (03) வருட பதவிக் காலத்துக்காக ஐந்து பேர்களைக் கொண்ட மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுகிறது.

- **தத்துவங்கள் மற்றும் செயற்பாடு**

  மத்தியஸ்த சபைகள் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கருமத்திற்காக மத்தியஸ்தர்களை நியமித்தல், மாற்றஞ் செய்தல், சேவையிலிருந்து விலக்குதல் மற்றும் அவர்களின் ஒழுகாற்றைக் கட்டுப்படுத்தலும், மத்தியஸ்தர்களால் இச் சட்டத்தின் கீழ் தமது பணி மற்றும் கருமத்தை நிறைவேற்றுதலை கண்காணித்தல் மற்றும் நிருவகித்தலும் அம் மத்தியஸ்தர்களுக்குத் தேவைப்படக் கூடிய பணிப்புரைகளை வழங்குதலும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் செயற்பாடாகும்.

### 6.9.3 மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள்

1. மத்தியஸ்த சபைகள் சட்டத்தின்படி இலங்கை முழுவதிலும் மத்தியஸ்த சபைகளைத் தாபித்தல் மற்றும் தேவையான வசதிகளை ஏற்படுத்தல்.

- ❖ மத்தியஸ்தர்களை ஆட்சேர்ப்பு செய்துகொள்வதற்காக பெயர் நியமனங்களைக் கோருதல், நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் ஐந்து நாள் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி மத்தியஸ்தர்களைப் பயிற்றுவித்து ஆட்சேர்ப்பு செய்து கொள்ளல்,
- ❖ மத்தியஸ்த்தர்கள் குழாத்துக்களினூடாக நாடளாவிய ரீதியில் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக தலையிடுதல்.

2. 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் (விசேட வகுதிகளின் பிணக்குகள்) சட்டத்தின் கீழ் காணிப் பிணக்குகள் பற்றிய 05 மத்தியஸ்த சபைகள் பின்வரும் மாவட்டங்களில் தாபித்தல்,

   - ❖ யாழ்ப்பாணம், அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி.

3. பாடசாலை மத்தியஸ்த கூறுகளைத் தாபித்தல் மற்றும் பாடசாலை மத்தியஸ்த பட்டறைகளை நடாத்துதல்.

4. மத்தியஸ்தம் தொடர்பாக சமுதாயத்திற்கு விழிப்புணர்வை அளித்தல்.

### 6.9.4 2018.01.01 - 2018.12.31 வரையிலான முன்னேற்றம்

| விடயம் | பிணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2018 ஆண்டின் தொடக்கத்தில் தீர்ப்பதற்கிருந்த பிணக்குகள் | 62,512 |
| 2018.01.01 முதல் 2018.12.31 வரை பெறப்பட்ட பிணக்குகள் | 248,805 |
| **மொத்தம்** | **311,317** |
| 2018.01.01 முதல் 2018.12.31 வரை கலந்துரையாடப்பட்ட மொத்த பிணக்குகள் | 124,668 |
| 2018.01.01 முதல் 2018.12.31 வரை தீர்க்கப்பட்ட மொத்த பிணக்குகள் | 83,867 |
| | **67%** |

### 6.9.5 2018.01.01 - 2018.12.31 பிணக்குகளின் ஆற்றுப்படுத்தல்

| பிணக்குகளின் ஆற்றுப்படுத்தல் மூலங்கள் | ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை | நூற்றுவீதம் |
|---|---|---|---|
| நீதிமன்றத்தால் | 14,833 | 7,937 | 6% |
| பொலிசாரால் | 47,855 | 23,283 | 49% |
| வங்கிகள் / நிதி நிறுவனங்களினால் | 165,930 | 44,847 | 27% |
| பிணக்குக்காரர்களால் | 17,335 | 6,765 | 39% |
| பிற | 2,852 | 1,035 | 36% |
| **மொத்தம்** | **248,805** | **83,867** | **-** |

### 6.9.6 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை மத்தியஸ்த சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள மாகாண மட்டத்தில் பிணக்குகளைத் தீர்த்தல்

| மாகாணம் | கலந்துரையாடப்பட்ட பிணக்குகள் | தீர்க்கப்பட்ட பிணக்குகள் | நூற்றுவீதம் |
|---|---|---|---|
| மேற்கு | 26,206 | 16,449 | 63% |
| மத்திய | 17,089 | 12,068 | 71% |
| தெற்கு | 16,812 | 10,241 | 61% |
| வடமேல் | 21,900 | 17,165 | 78% |
| வடமத்திய | 8,147 | 4,960 | 61% |
| ஊவா | 8,181 | 5,654 | 69% |
| சப்ரகமுவ | 11,607 | 6,927 | 60% |
| கிழக்கு | 10,280 | 7,283 | 71% |
| வடக்கு | 4,446 | 3,120 | 70% |
| **மொத்தம்** | **124,668** | **83,867** | **67%** |

**6.9.7 2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2018.12.31 வரையான காலப்ப குதியில் நடாத்தப்பட்டசெயலமர்வுகள்**

நடாத்தப்பட்டுள்ள மொத்த ஐந்து நாள் பட்டறைகள் - 68
நடாத்தப்பட்டுள்ள மொத்த ஒரு நாள் பட்டறைகள் - 46
நடாத்தப்பட்டுள்ள விசேட பட்டறைகள் - 26
பங்குபற்றிய மொத்த பயனடைந்தோர் - 4982
செலவினம் - ரூபா 5,593,200/-

நடாத்தப்பட்டுள்ள பாடசாலை மற்றும் சமுதாய மத்தியஸ்த பட்டறைகள் - 232
செலவினம் - ரூபா 4932250/-
பங்குபற்றிய மொத்த பயனடைந்தோர் - 10440

சனாதிபதி அலுவலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பிள்ளைகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்டுள்ள பாடசாலை மத்தியஸ்த கூறுகளை தாபிக்கும் பட்டறைகள் - 85
பங்குபற்றிய மொத்த பயனடைந்தோர் - 3400
செலவினம் - ரூபா 6,502,500/-

**6.9.8 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை நிதி முன்னேற்றம்**

| விபரம் | 2018ற்கான ஒதுக்கம் (ரூபா மில் ) | 31.12.2018 ற்கான செலவு (ரூபா மில்) | நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 282.70 | 261.17 | 92% |
| மூலதனச் செலவினம் | 1.35 | 0.41 | 31% |
| **மொத்தம்** | **284.05** | **261.58** | **92%** |

## 6.10 தொழில் நியாயசபைகள் செயலாளர் அலுவலகம்

**நோக்கு**

அரசு சாரா ஊழியர்களின் வேலைப் பாதுகாப்புக்கான உத்தரவாதம்

**செயற்பணிகள்**

"விரைவானதும், நீதியானதும், திறமையான நிர்வாகத்தின் மூலமும் ஆற்றல் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களின் உதவியுடனும் அரசு சாரா ஊழியர்களின் வேலைப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தல்"

**6.10.1 அறிமுகம்**

1950ம் ஆண்டின் 43ம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31 (ஆ) பிரிவின் பிரகாரம் பெறப்படும் பிணக்குகளை விசாரித்து கையுதிர்வு செய்தல் தொழில் நியாய சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதான பணியாகும். அரசு சாரா நிறுவனங்களில் ஊழியர்களை வெளியேற்றுதல், போன்ற சம்வங்களின்போது நீதியை பெற்றுக்கொடுக்கும் நிறுவனமென தொழில் நியாய சபையை வரையறை செய்யலாம் என்பதுடன் இது அத்தகைய திறத்தினருக்கு கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமாகும். தொழில் நியாய சபை தலைமை அலுவலகத்தின் கீழ் 39 தொழில் நியாயசபைகள் செயற்படுகின்றன.

தொழில் நியாய சபைகளைப் பேணுவதற்குத் தேவையான மனிதவளங்கள், கூட்டு வளங்கள் மற்றும் நிதிவளங்கள் ஆகியவற்றை வழங்குதலும் முகாமைசெய்தலும் தொழில் நியாய சபைகளின் தலைமை அலுவலகத்தின் பிரதான பணிகளாகும்.

**பிரதேச ரீதியான தொழில் நியாயசபைகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன .**

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு - 01 | எம்பிலிபிட்டிய (சுற்று) | கம்பஹா | இரத்மலானை |
| கொழும்பு - 02 | பலாங்கொடை | பாணந்துறை | மகரகம |
| கொழும்பு - 08 | திருகோணமலை | மாத்தறை | கொட்டபொல |
| கொழும்பு - 13 | அவிசாவளை | அனுராதபுரம் | பண்டாரவளை |
| பத்தரமுல்ல 1/ மேலதிக. | கண்டி | நாவலப்பிட்டிய | தலவாக்கலை |
| பத்தரமுல்ல 2/ மேலதிக. | காலி | கேகாலை | பலாபத்வெல |
| இரத்தினபுரி | பதுளை | சிலாபம் | அம்பாறை |
| நுவரெலியா | நீர்கொழும்பு 21 | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் |
| ஹற்றன் | நீர்கொழும்பு 21மேலதிக | கடுவெல | குளியாபிட்டிய |
| களுத்துறை | குருநாகல் | வத்தளை | |

### 6.10.2 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான முன்னேற்றம்

| 2018.01.01 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை | | 2018.12.31 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|
| | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகள் | |
| 4,689 | 2,434 | 2,289 | 4,834 |

### 6.10.3 2018.01.01 தொடக்கம் 201 8.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 31.12.2018 ற்கான செலவு (ரூபா மில்) | 2018-12-31 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 351.69 | 345.97 | 98% |
| மூலதன செலவினம் | 11.55 | 7.45 | 64% |
| **மொத்தம்** | **363.24** | **353.42** | **97%** |

## 6.11 நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம்

**செயற்பணிகள்**

பொதுமக்களுக்கு விரைவான சிறந்த சேவையை வழங்குவதை பிரதான நேக்கமாகக் கொண்டு நீதித்துறை அலுவலர் தவிர்ந்த நீதிச் சேவை யிலுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத அலுவலர்களுக்கு நீதிமன்ற வழக்குகளை விசாரணை செய்து முடித்துக் கொள்ளும் செயல்பாட்டில் ஏற்படும் தாமதத்தை சமாளிப்பதற்கு பயிற்சியளிப்பதன் மூலம் நீதிச் சேவையின் திறனையும் தரத்தையும் உயர்த்தல்.

### 6.11.1 அறிமுகம்

நீதிமன்றங்களில் சேவை செய்கின்ற நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை நிறை வேற்றுவதற்காக இந்நிறுவனம் 2010 ஆம் ஆண்டில் பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள நீதிமன்றக் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டது. அதன்படி, இந்த பயிற்சி நிறுவனம் பின்வரும் குறிக்கோள்களை அடை வதற்காக நீதித்துறையல்லாத அலுவலர்களுக்கு பல நிகழ்ச்சிகளை நடாத்தியது.

1. மனப்பாங்குகளையும் ஒழுக்கத்தையும் விருத்தி செய்தல்
2. கடமைகளை விளங்கிக்கொள்வதற்கான விழிப்புணர்வு
3. நவீனமயமாக்கல் மற்றும் கண்டுபிடிப்பு
4. இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல்

**6.11.2 2018 ஜனவரி 01 இல் இருந்து 2018 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிகளில் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.**

**அ) பத்தரமுல்ல நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்**

| இல | பயிற்சி நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | கணக்கியல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 07 | 282 |
| 02 | குடியியல் சட்டம், குற்றவியல் சட்டம், அலுவலக முகாமைத்துவம், ஒழுக்காற்று நடவடிக்கை முறை மற்றும் பொது முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 07 | 259 |
| 03 | நீதிமன்ற குடும்ப உளவள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 04 | 96 |
| 04 | நீதிமன்ற பதிவாளர் தரம் III ஆம் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 95 |
| | மொத்தம் | **20** | **732** |

**அ) பத்தரமுல்ல நீதித்துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையத்திற்கு வெளியே நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்**

| இல | பயிற்சி நிகழ்ச்சிகள் | நடைபெற்ற நிறுவனம் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | கட்டளைச் சேவகர், எழுத்தானை நிறைவேற்றுனர் மற்றும் நீதிமன்றக் கூவுநர், கட்டியக்காரர் பதவியின் தொழில் நியாய சபைப் பேச்சு மொழிபெயர்ப்பாளர் பதவியின் நியமனக்கடிதங்களை வழங்குதல் மற்றும் பயிற்சிப்பட்டறை | அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 01 | 136 |
| 02 | நுவரெலிய வலய பயிற்சி நிகழ்ச்சித்தட்டம் | நுவரெலியா மாவட்ட செயலகம் | 01 | 100 |
| 03 | பதுளை வலய பயிற்சி நிகழ்ச்சித்தட்டம் | பண்டாரவளை கன்மார்க் விடுதி | 01 | 136 |
| 04 | நீதிமன்ற பதிவாளர் தரம் III ஆம் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய அலுவலர்களுக்கான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | கொழும்பு நீதவான் நீதிமன்றம் | 01 | 50 |
| 05 | நீதிமன்ற மொழி பெயர்ப்பாளர் தரம் III ஆம் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய அலுவலர்களுக்கான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு கார்யாலயம் | 01 | 17 |
| 06 | மட்டக்களப்பு வலய பயிற்சி நிகழ்ச்சித்தீட்டம் | மட்டக்களப்பு நீதிமன்றத் தொகுதி | 01 | 105 |
| 07 | கல்முனை வலய பயிற்சி நிகழ்ச்சித்தட்டம் | கல்முனை, சாய்ந்தமருது தேசிய இளைஞர் சேவை | 01 | 113 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மன்ற கட்டடிடம் | | |
| 08 | அம்பாந்தோட்டை வலய பயிற்சி நிகழ்ச்சித்தட்டம் | அம்பாந்தோட்டை, மாவட்ட செயலக கேட்போர் கூடம் | 01 | 120 |
| 09 | எம்பிலிபிட்டிய வலய பயிற்சி நிகழ்ச்சித்தட்டம் | எம்பிலிபிட்டிய செஞ்சூரிய விடுதி | 01 | 120 |
| | மொத்தம் | | 09 | 897 |

**6.11.3 2018.01.01 தொடக்கம் 201 8.12.31 வரையுள்ள காலப்பகுதிக்கான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | 2018 ற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 31.12.2018 ற்கான செலவு (ரூபா மில்) | 2018-12-31 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 8.00 | 5.75 | **72%** |
| மூலதன செலவினம் | 6.00 | 0.01 | **0.07%** |
| **மொத்தம்** | **14.00** | **5.76** | **26%** |

## 6.12 இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் (உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட)

நீதி அமைச்சினால் 2013 ஆண்டில் இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையத்தை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. உலக வர்த்தக நிலையத்தின் 22 ஆம் மாடியின் ஒரு பகுதியை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையத்தை தாபிப்பதற்காக அது பழுதுபார்க்கப்பட்டது. மாண்புமிகு பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அவர்களால் 2015 யூன் மாதம் 05 ஆம் திகதி சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் வைபவரீதியில் திறந்த வைக்கப்பட்டது.

அதன் பின்னர், உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் 2016 திசெம்பர் 20 ஆம் திகதி வெற்றிகரமாக கூட்டிணைக்கப்பட்டது. கம்பெனிகள் அமைப்புவிதியின் கீழ் தற்போதைய பணிப்பாளர் சபை பின்வரும் ஆட்களைக் கொண்டுள்ளது.

- கலாநிதி அசங்க குணவங்ச - தலைவர்
- சனாதிபதி சட்டத்தரணி திரு. திலால் பிலிப்ஸ்
- சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி திரு. ஹர்ஷ கப்ரால்
- திரு நெவில் ஏ அபயரட்ண
- திரு. சாரதா த சில்வா
- சட்டத்தரணி திரு. சுதத் ஜயசுந்தர
- சட்டத்தரணி திரு. குமார் ஏகரத்ன
- சனாதிபதி சட்டத்தரணி திரு. ஜீ. அழகரத்னம்
- திரு ஏ கே டி டி அரந்தர

உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு மையத்தின் பணிப்பாளர் சபை ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை கூடுவதுடன் மையத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு அரசாங்கத்திடமிருந்து நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் தற்போது பேச்சுவார்தைகள் நடைபெறுகின்றன. அதற்கு மேலதிகமாக, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடுத்தீர்ப்பாளர்கள் மற்றும் அறிஞர்கள் அத்துடன் இலங்கையின் சிரேட்ட நடுத்தீர்ப்பு நிபுணர்களைக் கொண்ட நிருவாக சபையொன்றை நியமிப்பதற்கான முன்மொழிவு பணிப்பாளர் சபையால் ஆராய்ந்துப் பார்க்கப்படுகிறது. உறுப்பினர்களால் தற்போது ஆராய்ந்துப் பார்க்கப்படுகின்ற ஆட்கள் ஆவது பேராசியர் திரு. கஜ்ஹோபர் (சுவீடன்) திரு. நிருபிள்ளை (சிங்கப்பூர்), திரு. வினாயக் பிரதான் (மலேசியா), சனாதிபதி சட்டத்தரணி திரு. சிப்லி அஸீஸ் (இலங்கை), சனாதிபதி சட்டத்தரணி திரு.கே. கனகீஸ்வரன் (இலங்கை) மற்றும் நீதிபதி திரு. ஜீ.பீ.எஸ். த சில்வா (இலங்கை) என்பவர்களாகும்.

## 07. அமைச்சின் கீழுள்ள பொதுத்தொழில் நிறுவனங்களின் முன்னேற்றம்

### 7.1 சட்ட உதவி ஆணைக்குழு

சட்ட உதவி ஆணைக்குழுவானது, 1978, 27 ஆம் இலக்க சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தினால் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாகும். வறுமையின் காரணமாக நீதியின் துணையை பெற முடியாதிருக்கும் இலங்கையர்களுக்கு சட்ட உதவி வழங்குவது இதன் பிரதான குறிக்கோளாகும். குறைந்த வருமானமுடைய மக்களுக்கு கட்டணமின்றி சட்டத்தரணி உதவி பெற்றுக் கொடுத்தல், எவருக்கும் சட்ட ஆலோசனை பெற்றுக் கொடுத்தல், சட்டம் பற்றி முழு சமுதாயத்துக்கும் அறிவூட்டல், புதிய சட்டவாக்கத்தின் போதும் சட்ட புனரமைப்பின் போதும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன ஏனைய செயற்பாடுகளில் பிரதானமானவையாகும்.

7.1.1 <u>**சட்டப் பிரிவு**</u>

1) நீதியின் அனுசரணையைப் பெற்றுக் கொள்ள இயலாதவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவது.
2) எவருக்கும் இலவசமாக சட்ட ஆலோசனை வழங்குவது.
3) புதிய சட்ட உருவாக்கத்திலும் சட்ட மீளமைப்பிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவது.

நேரடியாக தலைமைக் அலுவலகத்தின் கீழ் செயற்படும் கொழும்பு சட்ட உதவி மத்திய நிலையம் உட்பட, சட்ட உதவி அலுவலகங்கள் 83 ஆகும். அவை இலங்கை முழுவதுமுள்ள நீதிமன்றங்களுக்கு அண்மியதாக அமைக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற நடவடிக்கைகளின் போது, கிராம உத்தியோகத்தரின் மூலமான வருமான அறிக்கை கவனத்திற்கொள்ளப்படினும், பராமரிப்பு, வீட்டு வன்முறை, குற்றச் செயல் பாதிப்புக்குள்ளானோர், பிள்ளைகள் சம்பந்தப்பட் வழக்கு ஆகிய நடவடிக்கைகளின் போது அது பற்றி கவனத்திற்கொள்ளப்படும்.

**அ) சட்ட உதவி ஆணைக் குழு வின் சட்டப் பிரிவின் முன்னேற்றம்.**

| வழக்கு விபரம் | வழக்கு எண்ணிக்கை |
|---|---|
| 2017 ஆண்டிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 29,783 |
| 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் 31 வரை புதிதாக கோவையிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 12,723 |
| 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் 31 வரை நடைபெற்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 42,506 |
| 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் 31 வரை முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 10,075 |
| 2019 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதிக்கு கொண்டு செல்லப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 32,431 |
| 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் 31 வரை வழங்கப்பட்ட மொத்த ஆலோசனை | 120,675 |
| **2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் 31 வரை வழங்கப்பட்ட மொத்த சேவைகள்** | **163,181** |

ஆ) <u>வழக்குகளுக்காக முன்னிற்றலின் முன்னேற்றம்</u>

| விபரம் | மொத்தம் |
|---|---|
| விவாகரத்து | 7,016 |
| பராமரிப்பு | 23,614 |
| காணி | 1,115 |
| பங்கீடு | 46 |
| பணம் வசூலிப்பு | 1,938 |
| உயர் நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகள் | 196 |
| மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகள் | 225 |
| விபத்துக்கள் | 1,489 |
| பிணை | 364 |
| சிறுவர் உரிமை | 684 |
| தொழிலாளர் நியாய சபை | 1,110 |
| குற்றவியல் | 986 |
| உச்ச நீதிமன்ற | 138 |
| குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் | 1,162 |
| விஷேட | 325 |
| பாதுகாவலர் மற்றும் தத்தெடுத்தல் | 93 |
| வீட்டு வன்முறை | 466 |
| ஏனையவை | 1,539 |
| **மொத்தம்** | **42,506** |

**இ) சட்ட உதவி ஆணைக்குழுவினால் மாகாண மட்டத்தில் சேவைகள் வழங்கல்**

| மாகாணம் | 2018.01.01 ம் திகதியன்று மீதியாக இருந்த வழக்குகள் | புதிய வழக்குகள் (2018.01.01 -2018.12.31 வரை) | மொத்தம் | முடிவுறுத்தப்பட்ட வழக்குகள் 2018.12.31 வரை | இடைநிறுத்தப்பட்ட வழக்குகள் 2018.12.31 வரை | 2018.12.31 ஆம் திகதி முன் கொணர்ந்த வழக்குகளின் எண்ணிக்கை | சட்ட ஆலோசனை 2018.12.31 வரை |
|---|---|---|---|---|---|---|---|
| மேற்கு | 7,766 | 2,898 | 10,664 | 1,561 | 590 | 8,513 | 33,881 |
| ஊவா | 2,060 | 1,017 | 3,077 | 410 | 234 | 2,433 | 11,075 |
| தெற்கு | 3,867 | 1,631 | 5,498 | 869 | 319 | 4,310 | 17,803 |
| வடக்கு | 2,972 | 1,188 | 4,160 | 739 | 112 | 3,309 | 11,776 |
| சப்ரகமுவ | 2,197 | 1,028 | 3,225 | 499 | 353 | 2,373 | 8,953 |
| வடமேற்கு | 3,154 | 1,308 | 4,462 | 725 | 277 | 3,460 | 16,122 |
| மத்தி | 2,217 | 855 | 3,072 | 879 | 139 | 2,054 | 7,051 |
| கிழக்கு | 3,214 | 1,790 | 5,004 | 1,363 | 298 | 3,343 | 8,234 |
| வடமத்தி | 2,336 | 1,008 | 3,344 | 438 | 270 | 2,636 | 5,780 |
| **மொத்தம்** | **29,783** | **12,723** | **42,506** | **7,483** | **2592** | **32,431** | **120,675** |

### 7.1.2 நிகழ்ச்சி திட்டம் மற்றும் செயல் திட்ட பிரிவு

**அ) மக்கள் ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள்**

| நிகழ்ச்சிகள் | எண்ணிக்கை |
|---|---|
| ரூபவாஹினி நிகழ்ச்சிகள் | 21 |
| வானொலி நிகழ்ச்சிகள் | 06 |
| பத்திரிகை நிகழ்ச்சிகள் | 39 |
| மொத்தம் | **66** |

**ஆ) அறிவூட்டல் மற்றும் சமூக பங்குபற்றல் சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்கள்**

| நிகழ்ச்சித் திட்டம் | நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கை |
|---|---|
| சட்டவியல் அறிவை வழங்குதல், உரிமைகளைப் பாதுகாத்தல், சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆதரவு வழங்கும் நோக்கில் சிறுவர், பெண்கள், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோரை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட நிகழ்சித் திட்டங்கள். | 28 |
| சட்டவியல் அறிவை வழங்குதல்,பண்பியல் மற்றும் செயற்றிறன் மிக்க அரச சேவையை கிட்டவாக்குதல் | 05 |
| அழைப்பு விரிவுரைகள், சட்ட ஆலோசனை என்பவற்றினூடாக வளவாளர் பங்களிப்பு வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் (நீல பணி ஜனாதிபதி மக்கள் சேவை, வளமான நாளை தேசிய நிகழ்ச்சித் திட்டம், திறந்த பொருளாதாரத்தின் 40 ஆவது ஆண்டு தொடர்பாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம், மர நடுகை நிகழ்ச்சித் திட்டம்) | 31 |
| தோட்டத் தொழிலாளர், மீனவர் சமூகம், சேரி மற்றும் குடிசை வாசிகள் ஆகியோரை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | 02 |
| சிறைச்சாலை நிகழ்சிகள் | 63 |
| சட்டத்தரணிகளுக்கான நிகழ்சிகள் | 06 |
| கிராமிய சமூகத்தை தெளிவு படுத்தல் நிகழ்ச்சிகள் | 13 |
| வெளிநாடுகளில் பணிபுரிவோர் குடும்பங்களை தெளிவு படுத்தல் நிகழ்ச்சிகள் | 01 |
| சட்டஉதவி கிளினிக் | **13** |
| தன்னார்வ சட்டத்தரணிகளுக்கான பயிற்ச்சி நிகழ்சிகள் | **02** |
| **மொத்தம்** | **164** |

### 7.1.3 அபிவிருத்தி சட்ட உதவிப் பிரிவு

**அ) வெளிநாடு செல்லும் இடம்பெயர் தொழிலாளர் சம்பந்தமான அலகு**

**பிரச்சினைகளுக்கு** முகம் கொடுத்த வெளிநாட்டில் ஊழியம் செய்பவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இப்பிரிவின் மூலம் வெளிநாட்டில் ஊழியம் செய்யும் குடும்பங்களுக்கும் புரிந்துணர்வை அளிக்கும் நிகழ்சித் திட்டமொன்று 2018-05-22ஆந் திகதி சிலாபம் மயிலக்குளத்தில் நடாத்தபடபட்டது.

**ஆ) சிறைக் கைதிகளுக்கான அலகு**

2018 ஜனவரி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் இலங்கையிலுள்ள சிறைச் சாலைகளில் 47 சட்ட உதவி நிகழ்ச்சிகள் நடாத்தப்படதுடன் 705 சிறைக் கைதிகள் . சட்ட உதவியை நாடியதோடு, அவர்களில் 680 பேரும் தெரிவு செய்யப்பட்டு, அதில் 320 பிணை மனுக்கள் கோவைபடுத்தப்பட்டதுடன், தற்போது 102 பிணை கட்டளைகள் பெறப்பட்டுள்ளன.

**இ) பயிலுனர் சட்டத்தரணிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி திட்டம்**

இந்த வருடம் ஜனவரி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குழுவில் 263 சட்டத்தரணிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதோடு, அதற்காக சிரேஷ்ட கற்றறிந்த பிரபல ஜனாதிபதி சட்டத்தரணிகளை உள்ளடக்கிய வளவாளர்கள் 07 பேரின் வெளிவாரி சேவையை ஆணைக் குழு பெற்றுக் கொள்கின்றது.

### 7.1.4 அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு

**அ)** அலுவலகர்களை பயிற்றுவித்தல் 1-1-2018தொடக்கம் 31-12-2018 வரைக்கும் 7 சட்டத்தரணிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்

## ஆ) புதிய மத்திய நிலையங்கள் ஆரம்பித்தல்

2017 வருடம் டிசம்பர் 31 ஆந்திகதியின்போது இலங்கை சட்ட ஆணைக்குழுவுக்குச் சொந்தமான பிராந்திய நிலையங்களின் எண்ணிக்கை 82 என்பதுடன் அது 83வரை வளர்ச்சிடைந்துள்ளது.

| மத்திய நிலையம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி |
|---|---|
| வத்தளை | 2018-09-26 |

## இ) புதிய ஆட்சேர்ப்பு

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| சட்ட அதிகாரிகள் | 08 |
| முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| அலுவலக உதவியாளர் | 03 |
| **மொத்தம்** | **15** |

## ஈ) சட்டஉதவி நிலையங்கள் நிர்மாணம் சம்பந்தமான விபரங்கள்

### 1) சட்ட உதவி திலையங்கள் நிர்மாணம்

2018 வருடத்தில் கல்முனை மற்றும் தெகியத்த கண்டிய மத்திய நிலையங்களுக்கான புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் குருநாகல் புதிய கட்டிட வேலைகள் 30 % முடிவடைந்துள்ளது.

### 2) மறுசீரமைப்பு திட்டங்கள்

திஸ்ஸமகாராம, வலஸ்முல்ல, மாத்தறை, கொழும்பு, அத்தனகல்ல, கெட்டிபொல, திருகோணமலை, காலி, கட்டிடங்களில் மறுசீரமைப்பு வேலைகளுக்கான திட்டங்கள் 2018ஆம் ஆண்டு நடைபெற்றது.

### 3) நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள வேலைகள்

| கருத்திட்டம் | மதியுரைஞர் | முன்னேற்றம் |
|---|---|---|
| களுத்துறை புதிய கட்டிட நிர்மானம் | கட்டிட நிர்மான திணைக்களம் | கட்டிட நிர்மான திட்ட அனுமதியை பெற்றுக்கொள்ள நகர சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது |
| கடுவெல புதிய கட்டிட நிர்மானம் | கட்டிட நிர்மான திணைக்களம் | கட்டிட நிர்மான திட்ட அனுமதியை பெற்றுக்கொள்ள நகர சபைக்கு முன்வைக்க நீதிமன்ற வளாகத்தில் 05 வருடங்களுக்குள் புதிய அளவீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திட்டத்தை பெற்றுக்கொள்ள நீதி அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது |
| தம்புள்ள புதிய கட்டிட நிர்மானம் | கட்டிட நிர்மான திணைக்களம் | கட்டிட நிர்மான திட்ட அனுமதியை பெற்றுக்கொள்ள நகர சபைக்கு முன்வைக்க நீதிமன்ற வளாகத்தில் 05 வருடங்களுக்குள் புதிய அளவீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திட்டத்தை பெற்றுக்கொள்ள நீதி அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது |

## 7.1.5 2018.01.01 முதல் 2018.12.31 வரை நிதி முன்னேற்றம்

| விபரம் | 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூ. மி.) | 2018.12.31 திகதிக்கு செலவினம் (ரூ. மி. | 2018.12.31 திகதிக்கு நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீணடெழும் செலவினம் | 198.90 | 198.90 | 100% |
| மூலதன செலவினம் | 25.00 | 17.90 | 72% |
| மொத்த செலவினம் | **223.9** | **216.8** | **98%** |

## 7.2 மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை

**நோக்கு**

- நாட்டில் சிறப்பாக முகாமை செய்யப்படுகின்ற நியதிச்சட்ட சபையாக மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச்சபையை அபிவிருத்தி செய்வதாகும்.

**செயற்பணிகள்**

- நீதி மற்றும் சட்ட தொழில்துறையில் ஈடுபட்டுள்ள யாவருக்கும் தற்போதிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துகின்றமையால் அவற்றைப் பராமரித்து மேலும் விருத்தி செய்து அவர்களுக்கேற்ற சூழலை வழங்கலாம் என்பதோடு அது அவர்கள் சேவை வழங்கக்கூடிய வழக்குத் தொடுனர்கள், மற்றும் அத்துடன் தொடர்புடயவர்களுக்கு செயற்திறனானதும், நியாயமானதும் நீதியானதுமான சேவையை வழங்கும் நோக்கத்தோடு அவர்களின் செயற்பாடுகளைப் புரிவதற்கும் உதவியாக இருக்கும் என்பதோடு அதன் மூலம் மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைந்து கொள்ளல்.

### 7.2.1 அறிமுகம்

1987ம் ஆண்டின் 50ம் இலக்க மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபை சட்டத்தின் பிரகாரம் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதியையும் அதன் கட்டிடங்ளையும் பரிபாலித்து கட்டுக்கோப்போடு நிர்வகித்து பராமரித்து மேலும் வசதி வாய்ப்புக்களை மேம்படுத்தவேண்டிய தேவை ஏற்படுமிடத்து உரிய மாற்றங்களையும், சீர் திருத்தங்களையும் மேலதிக மாற்றங்களையும் செய்யும் நோக்கில் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைச்சபை ஏற்படுத்தப்பட்டது.

நிர்வாக சபை பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது.

- பிரதம நீதியரசர்
- பிரதம நீதியரசரினால் நியமனஞ் செய்யப்படும் உயர் நீதிமன்ற நீதியரசரொருவர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசரால் நியமனஞ் செய்யப்படும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரொருவர்
- நீதிஅமைச்சின் செயலாளர்
- உள்ளூராட்சி, வீடமைப்பு, கட்டிட நிர்மாண அமைச்சின் செயலாளர்
- இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்
- கொழும்பு மாநகரசபை ஆணையளர்
- நிதி அமைச்சரின் பிரதிநிதி
- அதிமேதகு இலங்கை சனாதிபதியால் நியமிக்கப்படும் இரு அங்கத்தவர்கள்.

### 7.2.2 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான காலப்பகுதிக்கா செயலாற்றுகை

**புனருத்தாபனமும் திருத்தவேலைகளும்**

- மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புனருத்தாபனமும் திருத்தவேலைகளும்
- மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் கீழ்வரும் நீதிபதிகளின் வாச ஸ்தலங்களின் புனருத்தாபனமும் திருத்தவேலைகளும்

**சொத்துகளைக் கொள்வனவு செய்தல்**

- வீட்டு உபகரணங்கள் கொள்வனவுசெய்தல்
- தளபாடங்களை கொள்வனவு செய்தல்
- அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல்
- இயந்திரங்களை கொள்வனவு செய்தல்

### 7.2.3 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ஒதுக்கம் (ரூ.மில்) | 31.12.2018 செலவு (ரூ.மில்) | 2018.12.31 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 166.02 | 159.352 | 96% |
| மூலதன செலவினம் | 20.00 | 13.85 | 69% |
| மொத்தம் | **186.02** | **173.20** | **93%** |

## 7.3 இலங்கை நீதிபதிகள் நிறுவனம்

### 7.3.1 அறிமுகம்

இலங்கை நீதிபதிகள் நிறுவனமானது 1985ம் ஆண்டு 46ம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. இந் நிறுவனம் கௌரவ பிரதம நீதியரசர் மற்றும் அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்படும் இரு உயர்நீதிமன்ற நீதியரசர்களை உள்ளடக்கிய 5 உறுப்பினர்களைக்கொண்ட முகாமையாளர் சபையினால் நிருவகிக்கப்படுகிறது. இந் நிறுவனத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கங்கள் அமைச்சினால் ஒதுக்கப்படுகிறது. .

**விடயங்களும் பணிகளும்**

I. நீதித்துறை அலுவலர்களுக்கு நீதித்துறை மற்றும் சட்டம் சம்பந்தமாக தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு வசதி செய்தல்.
II. நீதித்துறை அலுவலர்கள் தமது தொழில்சார் நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்கும் தமது அறிவையும் திறமைகளையும் விருத்திசெய்வதற்கும் கூட்டங்கள், மகாநாடுகள், விரிவுரைகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்குசெய்தல்.
III. நீதி நிருவாகம் சம்பந்தமான பலதரப்பட்ட விடயங்களில் ஆராய்ச்சிப் பாடநெறிகளை நடாத்துவதுடன் நீதித்துறை அலுவலர்களுக்கு நூலக வசதிகள் மற்றும் கல்வி சம்பந்தமான பொருட்களை வழங்குதல்.
IV. நீதிதுறை அலுவலா்களுக்கு நூலக வசதிகளையும் ஏனைய கல்வி சாா் பொருட்களையும் வழங்குதல்.

### 7.3.2 2018 தொடக்கம் 2018.12.31 வரையிலான முன்னேற்றம்

**அ**) ஜனவரி 2018 முதல் 31 டிசம்பர் 2018 வரை காலப்பகுதியில் நடைபெற்ற கருத்தரங்குகள

| | கருத்தரங்கின் பெயர் | பங்குபற்றுனர்கள் | கருத்தரங்குகளின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை | கிரயம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆவணச் சான்று, இலத்திரனியல் சான்று, ஏற்பு மற்றும் குற்ற ஒப்புதல் தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகள் | நீதித்துறை அலுவலர்கள் (G1,G2, G3) | 03 | 186 | 164,900 |
| 02 | அரசாங்க இரசாயனவியல் பகுப்பாய்வாளரினால் இனால் பயன்படுத்தப்படுகின்ற நவீன தொழிநுட்பம் மற்றும் விஞ்ஞான ரீதியான மூலோபாயங்கள் மீது நீதித்துறை அலுவலர்களுக்கான விசேட கருத்தரங்கு | நீதித்துறை அலுவலர்கள் | 01 | 27 | 11,250 |
| 03 | குவாசி நீதிபதிகளுக்கான கருத்தரங்கு | குவாசி நீதிபதிகள் | 01 | 61 | 56,900 |
| 04 | நீதவான் நீதிமன்றில் தண்டனை வழங்குதலின் முக்கியத்துவம் மற்றும் நீதிமன்ற நிருவாகம் | புதிதாக நியமிக்கப்பட்ட நீதித்துறை அலுவலர்கள் | 01 | 19 | 62,050 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 05 | வங்கியியல் சட்டம் தொடர்பில் சகல மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்கள் போன்றோர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு. | நீதித்துறை அலுவலர்கள் | 02 | 190 | 1,053,414 |
| | மொத்தம் | | **08** | **483** | **1,348,514** |

**ஆ) ஜனவரி 2018 முதல் 31 டிசம்பர் 2018 வரை காலப்பகுதியில் நடைபெற்ற செயலமர்வுகள்**

| | செயலமர்விெ் பெயர் | பங்குபற்றுனர்கள் | செயலமர்வுகளின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை | கிரயம் |
|---|---|---|---|---|---|
| 01 | கணனிக் குற்றங்கள் மற்றும் இலத்திரனியல் சான்று மீது நீதித்துறை அலுவலர்களுக்கான வதிவிட செயலமர்வு(குழு 3) | நீதித்துறை அலுவலர்கள் | 01 | 70 | 43,448 |
| 02 | கடற்றுறை வளங்கள் தொடர்பான சட்டங்கள் மீது கரையோரப் பிரதேசத்தில் சேவையாற்றுகின்ற நீதவான்களுக்கான வதிவிட செயலமர்வு | நீதித்துறை அலுவலர்கள் | 02 | 95 | - |
| 03 | சர்வதேச மனிதாபிமான சட்டம் தொடர்பில் நீதித்துறை அலுவலர்களுக்கான 01 நாள் செயலமர்வு | நீதித்துறை அலுவலர்கள் | 01 | 212 | 17,550 |
| 04 | நீதிமன்றச் சிறப்புக்கான சர்வதேச கட்டமைப்பை அமுல்படுத்தல் தொடர்பில் மேல் நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்கள் போன்றோர்களுக்கான செயலமர்வு | மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அலுவலர்கள் | 01 | 60 | 579,940 |
| 05 | இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றின் பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் மற்றும் பொது மேற்பார்வை தொடர்பில் சட்டவாக்கம் | மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அலுவலர்கள் | 01 | 78 | 392,750 |
| 06 | தொழில் நியாய சபை தீர்ப்புக்களின் வலுவாக்கம் தொடர்பில் தொழில் நியாய சபைத் தலைவர்களுக்கான செயலமர்வு | தொழில் நியாய சபைத் தலைவர்கள் | 01 | 33 | 812,232 |
| 07 | அரச காணிகள் தொடர்பான சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு, வடமேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் உள்ள மேல் நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்கள் போன்றோர்களுக்கான செயலமர்வு. | மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அலுவலர்கள் | 01 | 35 | 667,400 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 08 | தொழில் நியாய சபைத் தலைவர்களுக்கான வதிவிட செயலமர்வு. | தொழில் நியாய சபைத் தலைவர்கள் | 01 | 32 | 871,000 |
| 09 | மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான வதிவிட செயலமர்வு. | மேல் நீதிமன்ற நீதிபதிகள் | 01 | 67 | 3,098,000 |
| 10 | குற்றம் மற்றும் வழக்கு முகாமை நடவடிக்கை முறைகள் தொடர்பில் மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான வதிவிட செயலமர்வு. | மேல் நீதிமன்ற நீதிபதிகள் | 01 | 65 | - |
| 11 | மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்கள் போன்றோர்களுக்கான வருடாந்த செயலமர்வு. | நீதித்துறை அலுவலர்கள் | 01 | 194 | 5,689,793 |
| | மொத்தம் | | **12** | **846** | **12,172,113** |

**இ) ஜனவரி 2018 முதல் 31 டிசம்பர் 2018 வரை காலப்பகுதியில் நடைபெற்ற நீதித்துறை அலுவலர்களுக்காக வடிவமைக்கப்பட்ட வியாபார தொலைத்தொடர்பாடல் திறன்கள் பயிற்சி நெறி**

| | **குழு இலக்கம்** | **பங்குபற்றுனர்கள்** | **அமர்வுகளின் எண்ணிக்கை** | **பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை** | **கிரயம்** |
|---|---|---|---|---|---|
| 01 | குழு – 03 நீதிபதிகளுக்கான வாடிக்கையாக்கப்பட்ட வியாபார தொலைத் தொடர்பு திறன்கள் பாடநெறி | மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அலுவலர்கள் | 02 | 20 | 41,250 |
| 02 | குழு – 04 நீதிபதிகளுக்கான வாடிக்கையாக்கப்பட்ட வியாபார தொலைத் தொடர்பு திறன்கள் பாடநெறி | மேல் நீதிமன்ற நீதிபதிகள், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் தொழில் நியாய சபைத் தலைவர்கள் | 07 | 20 | 144,375 |
| | மொத்தம் | | **09** | **40** | **185,625** |

**ஈ) ஜனவரி 2018 முதல் 31 டிசம்பர் 2018 வரை காலப்பகுதியில் நடைபெற்ற நீதித்துறை அலுவலர்களுக்காக வடிவமைக்கப்பட்ட வியாபார தொலைத்தொடர்பாடல் திறன்கள் உயர்தர பயிற்சி நெறி**

| | குழு இலக்கம் | பங்குபற்றுனர்கள் | அமர்வுகளின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை | கிரயம் |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை நீதிபதிகளுக்கான வாடிக்கையாக்கப்பட்ட வியாபார தொலைத் தொடர்பு திறன்கள் உயர்தர பாடநெறி | மேல் நீதிமன்ற நீதிபதிகள், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் தொழில் நியாய சபைத் தலைவர்கள் | 03 | 20 | 61,875 |
| | மொத்தம் | | **03** | **20** | **61,875** |

## ஏ) ஜனவரி 2018 முதல் 31 டிசம்பர் 2018 வரை காலப்பகுதியில் நடைபெற்ற வெளிநாட்டுப் பயிற்சி

| | நிகழ்ச்சியின் பெயர் | பங்குபற்றுனர்கள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை | கிரயம் |
|---|---|---|---|---|---|
| 01 | பொது நிருவாகம் சர்வதேசம் லன்டன், ஐக்கிய இராச்சியம்- மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான நீதிமன்ற முகாமை தொடர்பிலான பயிற்சி | மேல் நீதிமன்ற நீதிபதிகள் | 01 | 14 | 8,842,612 |
| 02 | வியன்னாவில்- குற்றத் தடுப்பு மற்றும் குற்றவியல் நியாயாம் தொடர்பிலான ஆணைக்குழுவின் 27 ஆவது அமர்வு | மேல் நீதிமன்ற நீதிபதிகள் | 01 | 01 | 638,940 |
| 03 | இந்தியா, புது தில்லி நீதித்துறை கல்லூரியில் - வெளிநாட்டு நீதித்துறை பயிற்சி நிகழ்ச்சி | தொழில் நியாய சபைத் தலைவர்கள் | 01 | 25 | 19,413,845 |
| 04 | சன்டிகார் நீதித்துறை கல்லூரி, இந்தியா - வெளிநாட்டு நீதித்துறை பயிற்சி நிகழ்ச்சி | நீதித்துறை அலுவலர்கள் | 02 | 70 | 42.406.180 |
| 05 | 2018 டியூரின் இல் நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் சட்ட கல்வியியலாளர்கள் போன்றோருக்கான சர்வதேச தொழில் தரநியமம் | தொழில் நியாய சபைத் தலைவர்கள் | 01 | 01 | 320,500 |
| 06 | மஹாராஷ்ட்ரா நீதித்துறைக் கல்லூரி மற்றும் இந்திய மத்தியஸ்த நிலையம் மற்றும் பயிற்சி நிறுவனம் இந்தியா என்பவற்றில் வெளிநாட்டு நீதித்துறைப் பயிற்சி. | மேல் நீதிமன்ற நீதிபதிகள | 01 | 37 | 23,716,532 |
| | மொத்தம் | | **07** | **148** | **95,338,609** |

### 7.3.3 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ஒதுக்கம் (ரூ.மில்) | 31.12.2018 செலவு (ரூ.மில்) | 2018.12.31 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 32.00 | 30.8 | 96% |
| மூலதன செலவினம் | 6.00 | 0.22 | 4% |
| **மொத்தம்** | 38.00 | 31.03 | 19% |

நீதி நிருவாக செலவு தலைப்பு (228) மூலம் 2018 ஆம் ஆண்டில் நீதிபதிகளின் கொள்ளளவு விருத்திக்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 98.12 மில்லியன் ரூபாத் தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது.

## 7.4 குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை

### 7.4.1. அறிமுகம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்காக முறைசார் சட்ட வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் குற்றவியல் நீதிநிருவாக செயற்பாட்டை வலுப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது.

### 7.4.2 தத்துவங்களும் செயற்பாடுகளும்

a. **வலுப்படுத்தும் செயற்பாடு**

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரித்துக்கள் மற்றும் உரிமைகளை இனங்காணுதல், மேம்படுத்துதல் பாதுகாத்தல் மற்றும் அறியச் செய்தல்.

b. **அரை நீதிமன்ற செயற்பாடுகள்**

அவர்களது உரித்து மற்றும் உரிமைகள் மீறப்படுதல் பற்றிய முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் மற்றும் பரிசோதனை செய்தல், அரச நிறுவனங்களுக்கு அரச அலுவலர்களுக்கு மற்றும் நீதிமன்றத்திற்கு விதப்புரைகளை சமர்ப்பித்தல்.

c. **நடைமுறைப்படுத்தும் செயற்பாடு**

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் பாதுகாப்பு, உதவுதல், நட்டயீடு வழங்குதல்.

d. **முன்னோடி மதியுரைகளை வழங்குதல் மற்றும் கண்காணிப்பு**

### 7.4.3 குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு மற்றும் சாட்சிக்கு சட்டதின் கீழ் பாதுகாப்புக்காக விண்ணப்பிக்க கூடிய நிறுவனங்கள்

1) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை.
2) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரின் மற்றும் சாட்சிகளின் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு
3) நீதிமன்றம்
4) ஆணைக்குழு - (மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு மற்றும் விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுகின்ற விசாரணை ஆணைக்குழுக்கள் அல்லது சனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழு,
5) பிரதேசத்தின் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிக்கு

7.4.4 <u>பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு</u>

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மற்றைய விசேட கூறாவது தேசிய அதிகார சபையின் மதியுரை மற்றும் வழிகாட்டலின் மீது இலங்கை பொலிஸின் கீழ் தாபிக்கப்படுகின்ற "குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிக்காரர்களின் உதவி மற்றும் பாதுகாப்புப்

பிரிவு'' என அழைக்கப்படுகின்ற விசேட பொலிஸ் கூறாகும். சட்டத்தின் 19(2) பிரிவின் கீழ் முகாமைத்துவ குழுவிற்கு பதவி வழியில் நியமிக்கப்படுகின்ற சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் செயற்படுகின்ற சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகரொருவரை இப்பிரிவிற்குப் பொறுப்பான தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், 2016 நவம்பர் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து இதன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற முன்னோடி மதியுரைகளை பின்பற்றிக் கொண்டு "பிரிவை" பேணிச்செல்ல வேண்டியதுடன் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகாரர்களுக்கு பாதுகாப்பளித்தல், அவர்களுக்கு மற்றும் அவர்களது சொத்துக்களுக்கு செய்யப்படுகின்ற அச்சுறுத்தல்கள், சேதங்கள் தொடர்பிலான முறைப்பாடொன்று குற்றச்சாட்டொன்று அல்லது தகவலொன்று தொடர்பில் 'பிரிவினால்' பொலிஸ் அலுவலரொருவரின் உதவியுடன் புலனாய்வுச் செய்தல் பிரிவின் செயற்பாடாக இருத்தல் வேண்டியதுடன் அவர்களின் பாதுகாப்பு மற்றும் உதவிக்காக அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற வழிக்காட்டல்களின் மீது வினைத்திறன்மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை வாங்குவதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

7.4.5. **<u>2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை முன்னேற்றம்</u>**

1. குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபையின் நிதிப் பிரிவின் பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் 2018.02.15 ஆந் திகதி நடைபெற்றதுடன் 2018.09.03 ஆந் திகதி சாரதி பதவிகளுக்காக மூவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

2. அதிகார சபையின் தற்போதைய பணியாட்டொகுதியின் திறன் அபிவிருத்திக்காக பல்வேறு திறன் அபிவிருத்திப் பட்டறைகளுக்காக பணியாட்டொகுதியின் உறுப்பினர்கள் 2018 ஆண்டில் ஆற்றுப்படுத்தப்பட்டனர்.

3. 2018 ஆண்டின், முகாமைச் சபை கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு தடவைகள் வீதம் 24 கூட்டங்களும் 03 விசேட முகாமைச் சபைக் கூட்டங்களும் 06 நிறைவேற்று முகாமைக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

4. 2018 ஆண்டின் சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2018 திசெம்பர் 31 வரை குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபையின் சட்ட மற்றும் சட்டவலுவாக்கல் பிரிவுக்கு பொதுமக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ஆற்றுப்படுத்தப்பட்ட கோரிக்கைகள் மற்றும் முறையீடுகளுடனான கடிதங்களின் எண்ணிக்கை 86 ஆகும். அவ்வாறாயினும் ஒரு கடிதத்தில் பல கோரிக்கைகள் இருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்ட போதிலும் அக் கடிதங்கள் அவற்றில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளின் படி பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டன.

| **கடிதங்களின் முன்னேற்றம்** | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| முடிவுறுத்திக் கொள்ளப்பட்ட முறையீடுகள் | 8 | 32 | 24 |
| புறம் வைக்கப்பட்ட முறையீடுகள் | 2 | 2 | 3 |
| பாதுகாப்பு வழங்கப்பட்ட முறையீடுகள் | 1 | 1 | 5 |
| புலனாய்வு செய்யப்படுகின்ற முறையீடுகள் | 1 | 5 | 38 |
| சட்டமா அதிபருக்க ஆற்றுப்படுத்தப்பட்ட முறையீடுகள் | - | 3 | - |
| சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்ட முறையீடுகள் | - | 3 | 4 |
| பிற நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறையீடுகள் | - | 1 | 11 |
| பிரிவு 16 இன் கீழ் புலனாய்வுகள் நடாத்தப்படுகின்ற முறையீடுகள் | - | 2 | 1 |
| ஆணைக்குழுவொன்றினால ஆணையிடப்பட்ட முறைப்பாடுகள் | - | 1 | - |
| பிரிவு 24 இன் கீழ் முடிவுறுத்திக் கொள்ளப்பட்ட முறையீடுகள் | - | 1 | - |
| அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள மொத்த முறையீடுகளின் எண்ணிக்கை | 12 | 51 | 86 |

5. குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிக்காரர்களை பாதுகாக்கும் இயந்திரத்தை பலப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் (UNDP) 40 மில்லியன் ரூபா

அளிப்பொன்று வழங்கப்பட்டுள்ளதுடன் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிக்கார்களின் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபையின் தவிசாளர் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளரினால் 2017.11.24 ஆம் திகதி அவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அவ்வுடன்படிக்கை பிரகாரம் குறித்த தொகை, அதிகார சபையின் 2018 பெப்ருவரி மாத கணக்கில் வரவு செய்யப்பட்டுள்ளதுடன், அவைகளை உட்கட்டமைப்பு வசதி அபிவிருதிக்கு மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டதுடன் மேலும் அவ்வேற்பாடுகள் அதிகாரசபையின் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நாளாவித செயல்களுக்காக ஈடுபடுத்தப்படுகிறது.

அதன்படி அதிகாரசபையின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்ட பிரிவின் கீழ் நீதி நிருவாக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்ற அலுவலர்களான

- பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் தலைமை அலுவலக பொலிஸ் பரிசோதகர்கள்
- சட்டத்தரணிகள்
- சட்ட மருத்துவ அலுவலர்கள்
- சிறைச்சாலை ஆணையாளர்கள் மற்றும் அத்தியட்சகர்களுக்கான தீவுமுழுவதும் மேவுகின்றவாறான 14 அறிவூட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமான முறையில் முடிவுறுத்தப்பட்டன.

6. டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் (Trans parency international ) மூலம் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரை பாதுகாத்தல மற்றும் சாட்சிகளுக்கு உதவி வழங்குதல் சட்டம் மற்றும் அவர்களது உரிமைகள் மற்றும் உரித்துநிலைமைகள் உள்ளடக்கப்பட்டு அச்சிடப்பட்ட 3000 கைநூல்கள் 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

7. 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் நிதமும் தொடர்புக்கள் ஏற்படுத்திக் கொண்டு அதிகார சபையின் முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டது.

8. அதிகாரசபை தவிசாளரின் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியின் தலைமையில் சிறைச்சாலை ஆணையாளர்களுடன் எதிர் நடவடிக்கைகள் பற்றிய விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று திசெம்பர் 21 ஆம் திகதி நடாத்தப்பட்டது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் தொழில்நுட்ப நிபுணத்துவரும் அதில் பங்குபற்றினார்.

#### 7.4.6 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையிலான நிதி முன்னேற்றம்

| விபரம் | 2018 ஆம் ஆண்டின் ஏற்பாடுகள் (ரூ.மி) | 2018.12.31 திகதியின் செலவு (ரூ.மி) | 2018.12.31 திகதியின் நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 32.60 | 31.17 | 96% |
| மூலதனச் செலவினம் | 15.00 | 9.13 | 61% |
| | 21.66 | 18.70 | 86% |
| **முழுமொத்தம்** | **69.26** | **59.00** | **85%** |

## 7.5 இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம்

### 7.5.1 அறிமுகம்

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையமானது 2005 ஆம் ஆண்டில் 35ம் இக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 2000ம் ஆண்டின் 44ம் இலக்க இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச்சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமொன்றாகும்.

சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையத்தைமுகாமை செய்வதற்காக அத்தடன் மத்தியஸ்தம் மற்றம் நடுத்தீர்ப்பு சேவைகளை வழங்குவதற்காக இந்நிலையம் கடப்பாடு உடையதாக உள்ளது. நிலையத்தின் நிருவாக மற்றும் முகாமை அலுவல்கள் முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன.

### 7.5.2 வர்த்தக மத்தியஸ்த நிலையத்தின் பொறுப்பு மற்றும் செயற்பாடு

அ. வர்த்தக பிணக்குகளைத் தீர்த்தல் மற்றும் நடுத் தீர்ப்புக்காக மத்தியஸ்தம் செய்தல் மற்றும் ஒற்றுமைப்படுத்தல் விரிவாக ஏற்றுக்கொள்வதை மேம்படுத்தல்.

ஆ. மத்தியஸ்தம் செய்தல் மற்றும் ஒற்றுமைப்படுத்தல் மூலம் வர்த்தக பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்காக திறத்தவர்களை ஊக்குவித்தல்

இ. மத்தியஸ்தம் செய்தல் மற்றும் ஒற்றுமைப்படுத்தல் மூலம்

I. வர்த்தக பிணக்குகளைத நடுத்தீர்ப்புச் செய்தல்

II. வாத்தக விடயங்களில் திறந்தவர்களிடையே எழுகின்ற கருத்து வேறுபாடுகளை ஒழித்தல்

### 7.5.3 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ம் ஆண்டிற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 31.12.2018 ற்கான செலவு (ரூபா மில்) | 31.12.2018 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 5.85 | - | |
| மூலதன செலவினம் | 2.50 | - | |
| **மொத்தம்** | **8.35** | **-** | |

# 08 நீதிமன்றங்கள்

இவ் அமைச்சின் கீழ் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகளில் பின்வரும் நீதிமன்றங்கள் உள்ளடங்குகின்றன.

| நீதிமன்றம் /தொழில் நியாயசபை | எண்ணிக்கை |
|---|---|
| *உயர் நீதிமன்றம்* | 01 |
| *மேன்முறையீட்டு நீதிமன்றம்* | 01 |
| *மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள்* | 22 |
| *வர்த்தக மேல் நீதிமன்றம்* | 01 |
| கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்றம | 02 |
| *மேல் நீதிமன்றங்கள்* | 32 |
| *மாவட்ட நீதிமன்றங்கள்* | 32 |
| மாவட்ட/ நீதிவான் நீதிமன்றங்கள், | 50 |
| நீதிவான் நீதிமன்றங்கள் | 52 |
| சிறுவர் நீதிவான் நீதிமன்றங்கள் | 02 |
| சுற்று நீதிவான் நீதிமன்றங்கள் | 25 |
| *தொழில் நியாய சபைகள்* | 39 |

## 8.1 உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

### 8.1.1 அறிமுகம்

இலங்கை நீதிமுறைமையில் அதியுயர்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் கௌரவ பிரதம நீதியரசர் உட்பட 11 உயர்நீதிமன்ற நீதிபதிகள் உயர் நீதிமன்றத்திடம் கிடைக்கப்பெறும் எல்லா விண்ணப்பங்களையும் விசாரிக்கின்றனர்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் மூலம் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பின்வருமாறு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கம்
- இறுதி மேன்முறையிட்டு நியாயாதிக்கம்
- மதியுரை நியாயாதிக்கம்
- தேர்தல்கள் மனுக்கள் (சனாதிபதி தேர்தல்) பற்றிய நியாயாதிக்கம்
- எந்தவகையினதும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறல் பற்றிய நியாயாதிக்கம்
- பாராளுமன்ற சட்டத்தால் விதிக்கக்கூடிய பிற விடயங்கள் பற்றிய நியாயாதிக்கம்

உயர் நீதிமன்றம் அதன் செயல்பாடுகளை முன்னெடுக்க உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் உதவுகிறது. இதற்கான நிதியை நீதி அமைச்சு செலவினத்தலைப்பு 234 இன் மூலம் வழங்குகிறது. உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் பணிகளாவன:

- உயர் நீதிமன்றப் பதிவுகளைப் பராமரித்தல்.
- அமர்வுகள் மற்றும் விண்ணப்ப அட்டவணைகளை ஒழுங்கு செய்தல்.
- நீதிமன்ற உத்தரவுகளையும் தீர்ப்புகளையும் பதிவு செய்தல்.
- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளை அனுமதித்தல்
- மேன்முறையீட்டு நீதிமன்ற த்திலிருந்து பெறப்படும் வழக்கேடுகளைத் தயாரித்தலும் சட்ட செலவுகளை மதிப்பீடு செய்தலும்

### 8.1.2 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான காலப்பகுதிக்கான செயலாற்றுகை

| வகை | 2018.01.01 இல் நிலுவையி-லுள்ள வழக்குகள் | 2018.01.01 2018.12.31 இல் உள்ள பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 2018.01.01 2018.12.31 இல் உள்ள மொத்த வழக்குகள் | 2018.01.01 2018.12.31 இல் முடித்துக் கொள்ளப்பட்ட வழக்குகள் | 2018.12.31 இல் நிலுவையி-லுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| அடிப்படை உரிமை தொடர்பான விண்ணப்பங்கள் | 1,005 | 428 | 1,433 | 406 | 1,027 |
| விசேட அனுமதி விண்ணப்பங்கள் | 555 | 454 | 1,009 | 253 | 756 |
| பாராளுமன்ற சட்டமூலங்கள் பற்றிய உயர் நீதிமன்ற கட்டளைகள் | - | 59 | 59 | 59 | - |
| மேன்முறையீட்டு வழக்குகள் | 492 | 204 | 696 | 195 | 501 |
| உ.நீ வ.மே.நீ மேன்முறையீடு | 217 | 107 | 324 | 23 | 301 |
| மேல்நீதிமன்ற அனுமதி விண்ணப்பங்கள் | 217 | 116 | 333 | 100 | 233 |
| எழுத்தாணை விண்ணப்பங்கள் | 16 | 31 | 47 | 39 | 8 |
| மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் | 1,464 | 460 | 1,924 | 488 | 1,436 |
| மீளாய்வு வழக்குகள் | 15 | 3 | 18 | 09 | 09 |
| அரசியல் யாப்பை வரைவிலக்கணப்படுத்துவது தொடர்பான வழக்குகள் | - | - | - | - | - |
| நானாவித வழக்குகள் | 16 | 6 | 22 | 01 | 21 |
| SC TAB APPEAL | 04 | - | 4 | 01 | 03 |
| RULE | 07 | 2 | 9 | 02 | 07 |
| SC /Contempt | 25 | 7 | 32 | 03 | 29 |
| **மொத்தம்** | **4,033** | **1,877** | **5,910** | **1,579** | **4,331** |

### 8.1.3 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ம் ஆண்டிற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 31.12.2018 ற்கான செலவு (ரூபா மில்) | 2018-12-31 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 175.81 | 163.50 | 93% |
| மூலதன செலவினம் | 8.86 | 4.76 | 54% |
| **மொத்தம்** | **184.67** | **168.25** | **91%** |

## 8.2 மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

### 8.2.1 அறிமுகம்

இலங்கை அரசியல் அமைப்பினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முதன்நிலை நீதிமன்றங்கள், தொழில்நியாய சபைகள் மற்றும் பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் தீர்ப்புகள் தொடர்பான மேன்முறையீட்டு மற்றும் மீளாய்வு நியாயாதிக்கம் உள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைகள் பற்றிய நியாயாதிக்கமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரியதாகும். 2002 ஆம் ஆண்டின் 25ம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டம் மற்றும் 2000ம் ஆண்டின் 39ம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டத்தின் கிழ் அச்சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு தேவையான கட்டளைகள் மற்றும் பணிப்புகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்குகிறது. தேர்தல் மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன. எந்தவொரு முதன்நிலை நீதிமன்றத்தினதும் அல்லது தொழில்நியாய சபைகளினதும் அல்லது ஏதாவது பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் வழக்கு அறிக்கைகளை கண்காணிப்பு செய்வதற்கும் பரிசோதனை செய்வதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தத்துவமும் அதிகாரமும் உள்ளது.

### 8.2.2 2018.01.01 முதல் 2018.12.31 வரையிலான வழக்கு விசாரணைகளின் செயலாற்றுகை

| வழக்கு வகை | 2018/01/01 இல் நிலுவையிலுள்ளவை | 01.01.2018-31.12.2018 பதிவு செய்யப் பட்டவை | 01.01.2018-31.12.2018 முடிவெடுக்கப் பட்டவை | 31.12.2018 இல் நிலுவையிலுள்ளவை |
|---|---|---|---|---|
| ஆணை விண்ணப்பங்கள் | 1,590 | 469 | 664 | 1,395 |
| மேன் நீதிமன்றமுறையீடுகள் (குற்றவியல்) | 1,140 | 323 | 525 | 938 |
| (றெம்) | 04 | - | 4 | 925 |
| மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீடுகள் | 977 | 273 | 325 | 293 |
| குடியியல் மேன்முறையீடுகள் | 561 | - | 268 | 288 |
| மேல் நீதிமன்ற மீளாய்வு விண்ணப்பங்கள் | 349 | 175 | 236 | 15 |
| மீளாய்வு (குடியியல்) மற்றும் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் | 81 | 155 | 221 | 158 |
| வரி மேன்முறையீட்டு அனுமதி TAX | 146 | 26 | 14 | 39 |
| ஏனைய விண்ணப்பங்கள் | 75 | 52 | 88 | |
| **மொத்தம்** | **4,923** | **1,473** | **2,345** | **4,051** |

### 8.2.3 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2018 ம் ஆண்டிற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 31.12.2018 ற்கான செலவு (ரூபா மில்) | 31.12.2018 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 67.72 | 66.94 | 99% |
| மூலதன செலவினம் | 5.17 | 2.01 | 39% |
| **மொத்தம்** | **72.89** | **68.95** | **94%** |

## 8.3 காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்

### 8.3.1 அறிமுகம்

காதி நீதிமன்றம் என்பது 1951ம் ஆண்டு 13ம் இலக்க சட்டத்தின்கீழ் முஸ்லீம் விவாக மற்றும் விவாகரத்துதொடர்பாக உருவாக்கப்பட்ட விசேட நீதிமன்றமாகும் இலஙகை முழுவதும் 65 காதி நீதிமன்றங்கள் உள்ளன. அந்தச் சட்டத்தின் செயற்பாடுகளுக்கு அமைய காதி நீதிமன்றங்களினால் கொடுக்கப்படும் தீர்ப்பு அல்லது ஆணைசம்பந்தமாக அதிருப்தியுரும் கட்சிக்காரர்கள் மேல்முறையீடு சட்டத்தின் 12 (1)ம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டன. காதி நிதிமன்றமொன்றின் மேன்முறையீட்டை அல்லது மீள்பரிசீலனை செய்வதற்கு அச்சட்டத்தின் பிரகாரம் மேன் முறையீட்டு நீதிமன்றமாக இருப்பது காதி மேன்முறையீட்டுச் சபையாகும், இந்த காதிசபையில் தலைவர் உட்பட 5 உறுப்பினர்கள் உள்ளனர்.

நீதிச்சேவை ஆணைக்குழு 65 காதி நீதிமன்றங்களுக்கும் காதிநீதிபதிளையும் காதிகள் சபைக்கு தலைவர் உட்பட 5 உறுப்பினர்களையும் நியமிக்கின்றது.

### 8.3.2 காதி நீதிமன்றங்கள்

| | | |
|---|---|---|
| அட்டாளைச்சேனை | கல்முனை | பஹத்த-ஹேவாஹெட்ட |
| அக்கறைப்பற்று | கல்ப்பிட்டி | பாணந்துறை |
| அக்குரணை | களுத்துறை | பொலன்னறுவை(பாணம்பத்துவ) |
| அநுராதபுரம் | கண்டி | பொத்துவில் |
| அவிஸாவளை | காத்தான்குடி (மண்முனைப்பற்று) | புல்மோட்டை |
| பதுளை | கேகாலை | புத்தளம் & சிலாபம் |
| பலப்பிட்டிய & எல்பிட்டிய | கிண்ணியா | இரத்தினபுரி |
| பேருவளை | குளியாபிட'டி | அகதிகள் - (கல்பிட்டி/ புத்தளம்) |
| போரா சமூகம் | குருநாகல் | சாய்ந்தமருது |
| பியகம | மாஹொ | சம்மாந்துறை |
| கொழும்பு கிழக்கு | மன்னார் | தம்பலகாமம் & கந்தளாய் |
| கொழும்பு வடக்கு | மாத்தளை | தங்காலை |
| கொழும்பு தெற்கு | மாத்தறை | திருகோணமலை |
| கொழும்பு மேற்கு | மாவனல்லை | தும்பனை |
| ஏறாவூர் | மேமன் சமூகம் | உடபலாத்த கம்பளை |
| காலி | மொனராகலை | உடதலாவின்ன |
| கம்பஹா (திகாரிய) | மூதூர் | உடுநுவர |
| அம்பாந்தோட்டை | நாவலப்பிட்டி | வாழைச்சேனை |
| ஹாரிஸ்பத்துவ & பூஜாபிட்டிய | நீர்கொழும்பு | வவுனியா |
| ஹற்றன் | நிந்தவூர்பற்று | யட்டிநுவர |
| ஹோரன | நுவரெலியா | யாழ்ப்பாணம் |
| இறக்காமம் | ஓட்டமாவடி | |

### 8.3.3 காதிமேன்முறையீட்டு சபையின் முன்னேற்றம் (2015 - 2018)

| ஆண்டு | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2015 | 266 | 112 | 154 |
| 2016 | 286 | 98 | 188 |
| 2017 | 262 | 82 | 180 |
| 2018 | 271 | 51 | 220 |

### 8.3.4 காதி நீதிமன்றங்களின் முன்னேற்றம் (2015-2018)

| ஆண்டு | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2015 | 12,042 | 7,032 | 5,010 |
| 2016 | 15,896 | 8,064 | 7,832 |
| 2017 | 15,960 | 7,965 | 7,995 |
| 2018 | 17,790 | 9,011 | 8,779 |

# 09 தொடர்புடைய நிறுவனங்கள்

## 9.1 இலங்கைச் சட்டக்கல்லூரி

### 9.1.1 அறிமுகம்

சட்டக் கல்வியை முகாமைத்துவம் செய்யும் முகமாக, கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவையின் சட்டம் 1900 இலக்கம் 02ன் பிரகாரம், இலங்கை சட்டக்கல்லூரி செயற்படுத்தப்படுகின்றது. கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவையின் தலைமை பொறுப்பை மதிப்பிற்குறிய பிரதம நீதியரசர் வகிப்பதோடு, சட்ட மா அதிபர், நீதி அமைச்சின் செயலாளர், மன்றாடியார் மற்றும் பிரதம நீதியரசரினால் முன்மொழியப்படும் இரண்டு உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மதிப்பிற்குரிய நீதி அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற ஆறு உறுப்பினர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திலிருந்து முன்மொழியப்படுகின்ற இருவர் அடங்கலாக பேரவை அமையப்பெறுகின்றது.

இலங்கை சட்டக் கல்லூரி 3½ வருட கால பாடத்திட்டத்தினை நடத்துவதோடு, ஒவ்வொரு வருட இறுதியிலும் முதன்மை நிலை, இடை நிலை, இறுதி நிலை மாணவர்களுக்கு பரீட்சைகளை நடாத்துகின்றது. இந்தப் பரீட்சைகளை நிறைவு செய்ததன் பின்னர் இவர்கள், குறைந்தது 08 வருட கால அனுபவத்தினைக் கொண்ட சட்டத்தரணி ஒருவரிடத்தில் 06 மாத காலம் பயிலுனராக சேவை செய்தல் வேண்டும். இதன் பிறகு இவர்கள் சட்டத்தரணிகளாக நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறுவர்.

இலங்கை சட்டக் கல்லூரி ஒரு சுய வருமான தாபனமாக செயற்படுகின்றது. அதேபோல் வருகைதரு விரிவுரையாளர்களாக சட்டத்துறையில் பணிபுரிகின்ற மற்றும் கம்பனிகளில் தொழில் புரிபவர்கள் உள்வாங்கப்படுவர். அவர்கள் ஜனாதிபதி சட்டத்தரணிகளாகவோ அல்லது தேர்ச்சிமிக்க வழக்கறிஞர்களாகவோ காணப்படுவர்.

### 9.1.2 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரையிலான முன்னேற்றம்

2018 ஏப்பிரல் பரீட்சைக்காக 1,483 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இதில் 806 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தனர். 2018 ஒக்டோபர் பரீட்சைக்காக விண்ணப்பதாரிகள் 1,846 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

2018ஆம் கல்வியாண்டில் உள்நாட்டு, வெளிநாட்டு சட்டப் பட்டதாரிகள் மற்றும் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் உள்ளடங்கலாக 1,151 பேர் பாடநெறிக்காக அனுமதிக்கப்பட்டனர்.

2019ம் ஆண்டு மாணவர் அனுமதிக்காக, பரீட்சைகள் திணைக்களத்தினால் போட்டிப் பரீட்சையொன்று 2018.09.30ம் திகதி நடாத்தப்பட்டது. இப் பரீட்சைக்காக விண்ணப்பதாரிகள் 5,206 பேர் விண்ணப்பித்திருந்தனர் இதில் 231 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தனர்.